# 1

# மாயக் கண்ணாடி

வரலாற்றை காலத்தின் கண்ணாடி என்பர். ஒருவகையில் அது ஒரு மாயக் கண்ணாடி. நேற்றைய என் முகத்தை இன்றைக்கு அது காட்டும்.

உலகில் எந்தக் கண்ணாடியும் இருப்பதை மாற்றி இல்லாததைக் காட்டுவதில்லை. முன்னால் இருப்பது அழகாய் இருந்தால் அழகைக் காட்டும், அழுக்காய் இருந்தால் அதைத்தான் காட்டும். காலக் கண்ணாடி இதிலும் கொஞ்சம் வித்தியாசமானது.

ஏனெனில் இது முழுக்க முழுக்க மனிதனின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாயக் கண்ணாடி. எனவே அதில் தெரிய வேண்டிய காட்சிகளை அவன் தன் தேவைக்கேற்ப மாற்றிக் கொள்கிறான். அசிங்கமாக இருந்த தன் தோற்றத்தை அழகு வர்ணமாகவும், ஆஜானுபாகுவாக இருந்தவரை அரை அங்குலப் புழுவாகவும் ஆக்கிவிடுகிறான்.

உண்மையில் இந்த மாற்றத்தைச் செய்யும் மனிதர்களைப் பார்த்து பெரும் ஆற்றல் படைத்தவர்கள் என அங்கீகரிக்க முடியாது. மாய வித்தைகளைச் செய்து விட்டு தன்னை மந்திரவாதி என்பவனை விட இவர்கள் மட்டமானவர்கள்.

ஏனெனில் இவர்களின் நேர் மையற்ற நடவடிக்கைகளால் நேர்ந் திருக்கும் கொடுமைகள் அப்படி. அவற்றை வார்த்தைக் கூட்டிற்குள் வசப்படுத்துவது கூட கடினம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

இந்திய சுதந்திர வரலாற்றில் இவர்களின் நேர்மையற்ற எழுத்துக் களால் வஞ்சிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள்.

வரலாறு என்பது வெறுமனே வாசித்து அறிகிற கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல. எனக்குள்ள உரிமையைத் தக்க வைக்க எனக்கும், நான் வாழும் என் நிலத்திற்குமான உறவை உறுதிப்படுத்த என்னிடமுள்ள ஒரே ஆயுதம் வரலாறு.

நான் முட்டிவிட்டு குனிவதற்குப் பதிலாக முட்டுப்பட்ட என் முன்னோர்கள் குனிந்துவிடு என்று எனக்குக் கற்றுத் தரும் அனுபவப் பாடம் வரலாறு.

வாழ்க்கையில் வரும் துயரங்களைக் கண்டு நான் துவண்டு போகையில் துணிந்து நின்று போராடு என்று தன் வாழ்வின் வழியாக எம் முன்னோர்கள் எனக்குச் சொல்லும் வாழ்த்துரைகள் வரலாறு.

இப்படி எண்ணற்ற பல நன்மைகளை வாரி வழங்கும் வரலாற்றை கூடுதல் குறைவின்றி காய்தல் உவத்தலின்றி உள்ளது உள்ளபடி உணர்ந்து கொள்ள வேண்டும்.

நேர்மையான முறையில் இந்திய விடுதலை வரலாற்றை வாசித்து அறியும் வாய்ப்பு இந்தியர்களாகிய நம்மில் பெரும்பாலானவர்களுக்கு வாய்க்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

இந்திய மண்ணில் அந்நியர்களுக்கு எதிராக சுழன்றடித்த சூறாவளி சாதி, மதம், இனம், மொழி என அனைத்துவகை பேதங்களுக்கும் அப்பாற்பட்டது. இதனை எதிர்காலத் தலைமுறைக்கு எழுத்து வடிவில் கொடுக்க முயன்ற ஆசிரியர்களில் சிலரைத் தவிர அனைவருமே இந்த ஆபத்தில் மாட்டிக் கொண்டனர்.

வரலாற்றை எழுதும்போது கண்களை அகலத் திறந்து வைத்து, அறிந்து கொண்ட அனைத்தையும் அப்படியே அடுத்த தலைமுறைக்கு அச்சில் வார்க்க வேண்டும். ஆனால் அதை எழுதிய ஆசிரியப் பெருமக்களோ சாதி, இனம், மதம், மொழி என அவரவர்கள் சார்ந்திருக்கும் அமைப்பிற்கு பெருமை சேர்ப்பதற்காகவும்நிகழ்கால எதிரிகளை வஞ்சம் தீர்ப்பதற்காகவும் வரலாற்றைத் தம் தேவைக்கேற்ப வளைத்துக் கொண்டார்கள்.

உரமிட்டு வளர்த்தவனையும் விஷமிட்டு அழித்தவனையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்தியது இவர்கள் எழுதிய வரலாறு,

பாசாங்குகாட்டியவனை பட்டத்து நாயகனாக்கி, பாடுபட்டு உழைத்தவனை படுகுழியில் தள்ளியது இவர்கள் எழுதிய வரலாறு,

பஞ்சமா பாதகத்தை அஞ்சாமல் செய்தவனை மனிதநேயச் சிற்பியாக்கி பரிவையும், பாசத்தையும் தன் பழக்கமாகக் கொண்டவனை பயங்கரவாதி என பட்டம் பெறச் செய்தது இவர்கள் எழுதிய வரலாறு.

இப்படி இரும்பைத் துரும்பாக்கி, பேனைப் பெருச்சாளியாக்கும் பெருமைமிகு வரலாற்றாசிரியர்கள் உலக நாடுகளில் எப்படியோ! நம் இந்தியத் துணைக் கண்டத்தில் இவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

## பதம் காட்ட ஒரு பருக்கை

இந்திய வரலாற்றை வரைந்த வர்களில் பலர் (அனைவரும் அல்ல.) இஸ்லாமியர்களைப் பற்றி எழுதும் போது இரண்டு வேலைகளைச் செய்துள்ளனர்.

1. இருப்பதை மறைப்பது

2. இல்லாததைச் சேர்ப்பது

வரலாற்றைக் கையிலெடுத்தவர்கள் வளமாக இருக்கிறார்கள். ஏனெனில் செத்துப் போனவர்கள் அவர்களுக் கெதிராக சாட்சி சொல்ல வரப்போவதில்லை என்று கூறினார் ஓர் அறிஞர்.

உண்மைதான். இந்துத்துவ பாசிச சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிராக கையில் வைத்திருக்கும் கூர்மையான ஆயுதம் வரலாறு.

இவர்கள் வரலாற்றாசிரியர்களை விலை கொடுத்து வாங்குவார்கள் அல்லது வரலாற்றை எழுதும் ஆசிரியர்களாக மாறி இவர்களே அறிஞன் என்ற போர்வையில் நினைப்பதை எல்லாம் எழுதித் தள்ளுவார்கள். இந்திய வரலாற்றுப் பக்கங்களில் இந்தக் கொடுமைதான் நிகழ்ந்தது. நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

## எழுத்தில் ஓர் யுத்தம்

1920களின் பிற்பகுதி. கல்கத்தா யுனிவர்சிட்டியின் சமஸ்கிருதத் துறைத் தலைவராக இருந்தார் டாக்டர் ஹரிபிரசாத் சாஸ்திரி. இவர் எழுதிய இந்திய சரித்திரம் அன்றைய உயர்நிலைப் பள்ளிகளின் பாடநூல். ராஜஸ்தான், ஒரிசா (தற்போதைய ஒடிசா), மத்தியப் பிரதேசம், உத்திர பிரதேசம், பீஹார் ஆகிய மாநிலப் பள்ளிகளில் தினம் தினம் மாணவர்கள் படிக்கும் பாடநூல்.

அந்த நூலில் திப்பு சுல்தானின் ஆட்சி காலத்தில் மூவாயிரம் பிராமணர்கள் தீயில் குதித்து தம் உயிரை மாய்த்துக் கொண்டதாக ஒரு செய்தி.

மைசூர் மாவீரன் திப்புவின் கொடுமைகள்தான் அத்தனை பேரும் தம்மை அழித்துக் கொண்டதற்கான அடிப்படைக் காரணம் என்று எழுதிச் செல்கிறார் நூலாசிரியர்.

இஸ்லாத்தை ஏற்குமாறு திப்பு சுல்தான் அவர்களைக் கட்டாயப்படுத்தினான். ஏற்க மறுத்தவர்களை தொல்லைப் படுத்தினான். ஒன்று அவர்கள் மதம் மாற வேண்டும் அல்லது திப்புவின் கொடுமைகளைத் தாங்கித் தீர்க்க வேண்டும். இரண்டில் எதையுமே ஏற்க விரும்பாத அந்த பிராமணர்கள் அக்னியில் குதித்து அழியாப் பெருவாழ்வைத் தேடிக் கொண்டனர் என்று முடிகிறது ஹரி பிரசாத்தின் காவியக் கதை.

இந்தக் கதையைப் படித்த B.N. பாண்டே பதறிப் போனார். இவர் ஹரிபிரசாத்தின் சமகாலத்து வரலாற்றாசிரியர். பல வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். ஒரிசா

மாநிலத்தின் ஆளுநர் பதவியை அலங்கரித்தவர். இவர் அந்த நூலைப் படித்ததும் உடனடியாக அதற்குரிய ஆதாரங்களைக் கேட்டு ஹரிபிரசாத் சாஸ்திரிக்கு கடிதம் எழுதினார். பதிலைக் காணோம். மீண்டும் எழுதினார். மீண்டும் எழுதினார். தொடர்ந்து பலமுறை கடிதம் எழுதினார்.

ஒரு கட்டத்தில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கும் தொல்லை யிலிருந்து தப்பிப்பதற்காக சாஸ்திரி யிடமிருந்து பாண்டேவிற்கு பதில் வந்தது. மைசூர் கெஜட்டில் இந்தச் செய்தி பதிவாகி உள்ளது என்ற ஒற்றை வரிச் செய்தி.

பதில் சொல்லிவிட்டோம் என பதுங்க நினைத்தார் சாஸ்திரி. பதிலைப் படித்த பாண்டே தனது பயணத்தைத் தொடர்ந்தார். மைசூர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பிஜேந்திர நாத் சீலுக்கு இப்படி ஒரு செய்தி மைசூர் கெஜட்டில் உள்ளதா? என்று கேட்டு கடிதம் எழுதினார்.

அவர் அந்தக் கடிதத்தை மைசூர் கெஜட்டின் அப்போதைய அதிகாரி பேராசிரியர் ஹண்டைய்யாவிடம் அனுப்பி வைத்தார்.

மைசூர் கெஜட் புறட்டப்பட்டது. அனைத்துச் செய்திகளும் அலசப் பட்டன. அப்படி ஒரு செய்தி இல்லவே இல்லை என அங்கிருந்து பதில் வந்தது. கேட்ட கேள்வியை விட கூடுதலாக ஒரு பதிலும் சேர்ந்து வந்தது. கெஜட்டில் இப்படி ஒரு செய்தியும் இல்லை. இப்படி ஒன்று நிகழ்வதற்கு வாய்ப்பும் இல்லை.

ஏனெனில் திப்புசுல்தான் ஒரு மன்னனாக மட்டுமல்ல. நல்ல மனிதனாகவும் வாழ்ந்தவன் என அவன் பேணிய சமய நல்லுறவும் பிற மதத்தவர்களிடம் அவன் காட்டிய கனிவும் ஆதாரத்தோடு அதிலே தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. அவனது மந்திரிகள் முதற்கொண்டு படைத்தலைவர்வரை திப்பு சுல்தான் தனக்கு பக்கத்தில் வைத்துக் கொண்ட பிராமணர்கள், அவனால் கௌரவிக்கப்பட்ட இந்து வைதீக பெருந்தலைவர்கள்,பல்வேறு மடங்களின் சத்குரு மற்றும் ஜகத்குரு சந்நியாசிகள், சங்கராச்சாரியர்கள் திப்புவின் அரசில் மானியம் பெற்று பராமரிக்கப்பட்ட இந்துமதக் கோவில்கள், அந்தக் கோவில்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்கள் என பெரும் பட்டியலையே அதில் குறிப்பிட்டு இந்த மன்னன்மீதா இப்படி ஓர் அவச்சொல்? எனக் கேள்வி எழுப்பியிருந்தது அந்த அறிக்கை.

கெஜட்டர் ஹண்டைய்யாவிட மிருந்து பதில் வந்ததும் உடனடியாக அதை பாண்டேவிற்கு அனுப்பி வைத்தார் துணை வேந்தர். அத்துடன் அவர் வேலை முடிந்தது. பதிலைப் பெற்றுக் கொண்ட பாண்டேயின் பயணமோதொய்வின்றித் தொடர்ந்தது.

கையில் கிடைத்த ஆதாரங்களோடு மாணவர்களின் பாடநூற்களைத் தேர்வு செய்யும் கல்கத்தா யுனிவர்சிட்டியின் துணை வேந்தர் அஸ்டோஸ் முகர்ஜியை தொடர்பு கொண்டார் பாண்டே. மட்டமான கற்பனைகளோடு மாணவப் பருவத்திலே மதவெறியை ஊட்டி வளர்க்கும் நோக்கத்தோடு எழுதப்பட்டுள்ள இப்புத்தகத்தை உடனடியாகப் பாடத்திலிருந்து நீக்க வேண்டும்.உடனடியாக இந்நூலை தடை செய்ய வேண்டும். இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து நூல்களையும் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

அவரது கோரிக்கையைப் பரிசீலித்த பல்கலைக் கழக நிர்வாகம் உடனடியாக அந்நூலை பாடத்திட்டத்திலிருந்து நீக்கியது.(1)

இஸ்லாமும் இந்தியக் கலாச்சாரமும் என்ற தமது நூலில் பி.என். பாண்டே அவர்கள் குறிப்பிடும் இந்த நிகழ்ச்சியை பேராசிரியர் அப்துஸ் ஸமது அவர்கள் தியாகத்தின் நிறம் பச்சை என்ற தமது நூலிலும் மேற்கோள் காட்டியுள்ளார். கொஞ்சம் நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். எப்படிப்பட்ட மட்டரகமான அவதூறு.

இந்தக் கதை முழுவதும் அப்பட்டமாய் வீசும் வகுப்புவாத நெடி படிப்போரின் உள்ளத்தை பாழ்ப்படுத்தி விடாதா? கதை சிறியதுதான், அது கற்றுத் தரும் பாடம் கொடியதல்லவா? வார்த்தைகளுக்குள் விஷம் வைத்து முஸ்லிம்களின் வாழ்வையே சீரழிக்கும் இப்படி ஒரு பொய்க் கதை மாணவர்களுக்குத் தேவையா? பண்பாடு மிக்க சமூகத்திற்குத் தேவையா? இந்திய தேசத்தின் நலன்களுக்குத் தேவையா? இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குத் தேவையா?

அப்பப்பா...! நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் பதறுகிறது. எத்தனை நெஞ்சழுத்தத்தோடு செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் கேட்பீர்கள்? அவர்களைப் பொருத்தவரை முஸ்லிம்கள் மீது வஞ்சம் பாய்ச்ச இது ஒரு வழிமுறை அவ்வளவு தான்.

இந்தச் செய்தி சரித்திரச் சங்கமத்தில் யாரோ ஒருவரால் எப்போதோ நடந்த ஒரு பிழை என்று யாரும் எண்ணி விடாதீர்கள். இது கடலுக்குள் மூழ்கி, மூச்சடைக்கத் தேடி, முயன்று பெற்ற ஒற்றை முத்தல்ல. பானை சோற்றுக்கு பதம் காட்ட முன் வைத்த ஒரேயொரு பருக்கை.

## முந்தி நிற்கும் தொந்தி

சாந்தி மாய்ராய் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் இந்திய முஸ்லிம்களின் பங்கு என்றொரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பி.சி.ஜோசி, சில இந்து வரலாற்று ஆய்வாளர்கள்

1. (B.N. Pande distortion of medival Indian History, Islam and Indian Culture 99, 37-39
தியாகத்தின் நிறம் பச்சை பேராசிரியர். மு.அப்துஸ் ஸமது 9-11 நேஷனல் பப்ளிஷர்ஸ் நவம்பர் 2012)

ஏகாதிபத்தியத்திற்கெதிரான முஸ்லிம்களின் தியாகங்களைத் தொடர்ந்து இருட்டடிப்பு செய்து வருகின்றனர். அவர்களால் மறைக்கப்பட்டதை வெளிக் கொணர்வதே இந்நூலின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.(2)

சுதந்திரத்திற்குச் சொந்தம் கொண்டாட நினைத்தால் இந்தியாவில் எந்தச் சமூகமும் முஸ்லிம்களின் அருகில் கூட நிற்க முடியாது என்பது தான் உண்மை.

மற்றவர்களை மட்டம் தட்டுவதாக யாரும் எண்ணிக் கொள்ளக்கூடாது. விடுதலை வேள்வியில் பங்கெடுத்த நமது முன்னோர்களின் தியாகம் அது சிறியதோ பெரியதோ எதுவும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல.

சுதந்திரத்திற்காகஎடுத்து வைக்கப்பட்ட சிறு துரும்பும்கூட பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை அதே நேரத்தில் முஸ்லிம்கள் நிகழ்த்திய துணுக்குகளை விடுங்கள் பேரற்புதங்கள்கூட பேசப்படுவதில்லை என்றால் அதற்கு என்னதான் பொருள்? 500 1000 பக்கங்களில் எழுதப்படும் பெரும், பெரும் வரலாற்று நூல்களில் கூட முஸ்லிம்களின் பெயர்கள் மூன்று நான்கு இடங்களைத் தாண்டி முக்கியத்துவம் பெறாமல் போகிறதே! அது ஏன்? என்று தான் கேட்க விரும்புகிறோம்.

மிகச் சிறந்த எழுத்தாளரும், இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளை உலகறியச் செய்தவரும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய வருமாகிய குஷ்வந்த் சிங் கூறுகிறார்...

**இந்திய விடுதலைக்காக சிறை சென்றவர்களிலும் உயிர் நீத்தவர்களிலும் இஸ்லாமியர்களே அதிகம். அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தை விட விடுதலைக்காக உயிர் கொடுத்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்கிறார்.**(3)

ஒரு செய்தியைத் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டே வரும்போது வழியில் கண்டிப்பாக குறிப்பிட்டே ஆக வேண்டிய முக்கியமான கட்டத்தில் ஒரு முஸ்லிம் தியாகியின் பெயர் வந்தால் கூட, அங்கே ஒரு லாங்க் ஜம்ப் செய்து தாவிச் செல்வதை வழக்கமாகவே வைத்திருக்கிறார்கள் பல வரலாற்று ஆசிரியர்கள்

உதாரணத்திற்கு ஒன்று.

மொகலாய வம்சத்தின் கடைசி மன்னர் பகதூர்ஷா ஜஃபர் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு ரங்கூனுக்கு (பர்மா, மியான்மர்) நாடு கடத்தப்பட்டார்.

2. (விடுதலைப் போராட்டத்தில் இந்திய முஸ்லிம்களின் பங்கு. சந்திமாய் ராய் இந்திய விடுதலைப் போரும், தமிழக முஸ்லிம்களும், (இ.வி.த.மு) முனைவர் நா. முகம்மது செரீபு தமிழ்மணி நிலையம் 2006)

3. (இல்லஸ்டிரேட் வீக்லி 29.12.1975 குஷ்வந்த் சிங்)

அடக்கம் செய்யப்படுவதற்கு இந்திய மண்ணில் இரண்டு கெஜ நிலம் கூட இல்லாமல் போனதே என்ற கண்ணீரோடு அங்கேயே காலமானார்.

16.12.1987ல், பர்மாவுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பகதூர்ஷாவின் சமாதியில் எழுதப்பட்டிருந்த இரண்டு கெஜம் கவிதையைப் படித்தவர் கண்கலங்கி விட்டார்.

அங்கிருந்து வெளியேறும்போது பார்வையாளர் பதிவேட்டில் தன் எண்ணங்களை இவ்வாறு பதிவு செய்தார்.

**"ஜஃபர்! இரண்டு கெஜ நிலம் இந்துஸ்தானத்தில் கிடைக்கவில்லை என்பது உண்மை தான். ஆனால் இன்று நாங்கள் அனுபவிக்கும் சுதந்திரம் உனது தியாகத்தால் உதித்தது. பாரத நாட்டின் பெயரிலும் புகழிலும் உன் பெயர் கலந்து விட்டது.**

**இந்திய சுதந்திரப் போராளிகளின் தானைத் தலைவனாக விளங்கிய தளபதியே உனக்கு என் வீர அஞ்சலியைச் செலுத்துகிறேன்.**

**சுதந்திரப் போரில் நாம் வென்றோம். இன்னொரு முறை அடிமைத் தளையில் அகப்படமட்டோம்.**

**வேற்றுமைகள் பல இருப்பினும் அவற்றிற்கு இடையில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக்காப்போம்.அஹிம்ஸை, சகிப்புத் தன்மை அனைத்தையும் கைக்கொள்வோம். ஐயாயிரம் ஆண்டு கால சமயங்களின் சங்கம வரலாற்றை சிதைவுறாமல் பாதுகாப்போம்"** என்று எழுதிவிட்டு வந்தார்.

1985 முதல் ஒவ்வொரு ஆண்டும் ராஜீவ் காந்தியின் பேச்சுக்களும், எழுத்துக்களும், இந்திய அரசின் தகவல் ஒலிப்பரப்பு அமைச்சகத்தின் சார்பில் தொகுப்பாக வெளியாகிக் கொண்டிருந்தது.

1987ன் கடைசியில் பிரதமரின் பேச்சு மற்றும் எழுத்தின் மூன்றாம் தொகுதி வெளியானது. ஐநூறு பக்கத்திற்கு ஒரு பக்கம் குறைவாக அச்சிடப்பட்ட அந்நூல் பிரதமரின் பர்மா பயணத்தோடு நிறைவடைகிறது. அதிலும் மிகச் சரியாக பகதூர் ஷாவின் சமாதிப் பயணத்திற்கு முந்தைய நாளான 151287 உடன் முடிவடைகிறது. அதில் சமாதிப் பயணமும் இல்லை, இரண்டு கெஜ கவிதையும் இல்லை, ராஜீவ்காந்தியின் குறிப்பும் இல்லை.(4)

இந்தச் செய்தி வெளியிடப்படாத மர்மத்தை எப்படிப் புரிந்து கொள்வது? இந்திய அரசின் சார்பில் வெளியிடப்படுகிறது.பொறுப்பு

4. செ.திவான் இந்திய சுதந்திரப் பெரும்போரில் இஸ்லாமியர்களின் பங்கு (இ.சு.பெ.இ.ப) பக்.431-433 சுஹைனா பதிப்பகம் மே 2007 மணிச்சுடர் நாளிதழ் சென்னை 18.12.1987

நிறைந்த ஒரு அமைச்சகமே அதைக் கண்காணிக்கிறது. அதுவும் நாட்டின் பிரதம அமைச்சர் சம்பந்தப்பட்டது. சொல்லப்போனால் அரசின் முக்கிய ஆவணத்தைப் போன்றது. பர்மாவுடனான இந்தியாவின் நெருக்கத்தையும் நேசத்தையும் வெளிப்படுத்தக் கூடிய ஒன்று.

அதைவிட ராஜீவ்காந்தியின் எழுத்தாற்றலையும் தேசப்பற்றையும் பறைசாற்றும் ஒரு அழகிய கவிதைத் தொகுப்பு.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அரசுத் தொகுப்பில் அச்சேறாமல் போனது எப்படி? இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஆவணம் தவறினாலும் சரி. செத்துப் போன பகதூர் ஷாவின் புகழ் அரியணை ஏறிவிடக் கூடாது. ராஜீவின் எழுத்தாற்றல் மறைந்தாலும் முஸ்லிம்களின் தியாகம் மட்டும் வெளிப்பட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர இதன் பின்ணணியில் வேறென்ன இருந்திருக்க முடியும்?

வரலாற்றுப் பேராசான் செ. திவான் கூறுகிறார். ஒருவேளை நாள் குறைவாலோ அச்சுப் பணியின் சிக்கலாலோ இந்தப் பதிப்பில் விடுபட்டிருக்கலாம். கண்டிப்பாக அடுத்த ஆண்டின் அடுத்த தொகுப்பில் இடம்பெறக்கூடும் என்று எண்ணி அதன் வருகைக்காகக் காத்திருந்தேன்.

ஓராண்டு காலம் கழித்து எண்பத்தி எட்டாம் ஆண்டின் தொகுப்பும் வெளிவந்தது உடனடியாக வாங்கிப் படித்தேன் அதிலும் இந்தச் செய்தி இடம் பெறவில்லை என்கிறார்.

இதுபோன்ற பிரபலமான பல முக்கிய நிகழ்வுகளில் முந்தி நிற்கும் தொந்தியைப் போல தவிர்க்கவே முடியாத முஸ்லிம் தலைவர்கள் கூட விடுபட்டுப் போவது கவனக்குறைவாக நடந்து விடக் கூடியதா? இப்படி ஒரு கவனக் குறைவு முஸ்லிம்கள் விஷயத்தில் மட்டும்தான் ஏற்படுமா? மற்றவர்கள் விஷயத்தில் ஏற்பட்டால் உடனடியாக அவை சரி செய்யப்படுகின்றன. எத்தனை முறை சுட்டிக் காட்டினாலும் முஸ்லிம்கள் குறித்த செய்தி மட்டும் சீர்திருத்தப்படுவது இல்லையே, ஏன்?

இப்படி ஏராளமான கேள்விகள் இமயமாய் எழுந்து நிற்கின்றன.

இது போன்ற கேள்விகளுக்குப் பதிலாகவும், இதைப் பற்றிய ஆய்வுகளுக்குத் தூண்டுதலாகவும் இந்த மண்ணின் மைந்தர்களது மகத்தான வீரத்தையும், மறுக்க முடியாத தியாகத்தையும்மறைக்கப்பட்ட வரலாற்றின் மறுபக்கத்தையும் இனிவரும் பக்கங்களில் பார்ப்போம்.

2

# முதல் இந்திய சுதந்திரப் போர்

இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் எது? முடிவு எட்டப்படாத முக்கியக் கேள்வி. பன்னெடுங்காலமாகவே பல்வேறு வகையான தாக்குதலுக்கு உள்ளான பூமி நமது பாரதம். இதில் எப்போது நடந்ததை முதல் போர் என்பது? யாரோடு நடந்ததைச் சொல்வது?

யார் செய்த போரை அந்த இடத்தில் வைப்பது? புதுக்கோட்டை மன்னர் செய்ததையா? புதுடெல்லி மஹாராஜா செய்ததையா? ஒரே வகையான எதிரிகளோடுகூட பத்து மன்னர்கள் போரிட்டிருக்கிறார்கள். அதுவும் பத்து வகையாக, பத்து இடத்திலே, பத்து பேருக்கிடையில் எந்தத் தொடர்பும் இல்லாமல் தனித்தனியாக.

அதைவிடப் பெருங்குழப்பம், இந்தியப் போர் என்றால் முதலில் இந்தியா என்றொரு நாடு இருந்திருக்க வேண்டும், வரையறுக்கப்பட்ட எல்லை வேண்டும், அதற்கென்று ஒரு தலைமை வேண்டும், இராணுவம், நாணயம், கொடி, சட்டம் என சகலமும் வேண்டும் என்ன இருந்தது நம்மிடத்தில்? இந்தியா என்ற பெயர் உட்பட எதுவுமே இருக்கவில்லை.

கட்டக் கடைசியாக நம்மில் பலரும் சேர்ந்து போரிட்ட ஆங்கிலேயர்களுடனான சண்டையின் போது கூட இந்த அனைத்தும் நமக்கு வாய்த்திருக்கவில்லை. அவர்கள் நம்மிடத்தில் நாட்டை ஒப்படைத்து மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான் நமக்கென்று தனித்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி 1950ல் தான் இந்தியக் குடியரசு என்று அறிவித்தோம்.

எனவே எவ்வளவுதான் முயன்று முயன்று மூச்சிறைத்தாலும் முதல் இந்தியச் சுதந்திரப் போர் எது? என்ற கேள்விக்கு நாம் முடிவு காணப் போவதில்லை.

பிறகு ஏன் அதில் நின்று மல்லுக்கட்ட வேண்டும்? அறிந்தும் அறியாமலும் புரிந்தும் புரியாமலும் அனைவரும் எந்தப் போரை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அந்தப் போரையே நாமும் முதல் இந்திய சுதந்திரப் போர் என்று ஏற்றுக் கொள்வோம். அதிலிருந்தே நாமும் நமது பயணத்தைத் துவக்குவோம்.

1857 முதல் இந்திய சுதந்திரப் போர். அரசின் இராணுவமே அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கி அரங்கேற்றிய அதிசயப் போர்.

ஆங்கிலேயர்களை அலற வைத்த வங்கத்துப் போர். சுதேசிச் சிப்பாய்களெல்லாம் சீறிப் படையெடுத்த சிறப்பான போர்.

கொஞ்ச காலமாகவே அதிகாரிகள் மீதான வெறுப்பு இந்திய சிப்பாய்களிடம் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தது.

நம்முடைய குடும்பம், மனைவி, மக்கள் என எதைப் பற்றியும் கவலைப்படாமல் இந்த ஆங்கிலேயர்கள் நம்மை வாட்டி வதைக்கிறார்கள் என சிப்பாய்கள் குமுறிக் கொண்டிருந்த நேரத்தில் இங்கிலாந்தில் என்ஃபீல்டு (ENFIELD) என்ற இடத்தில் புதிய வகைத் துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1856ல் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அந்தத் துப்பாக்கியில் தோட்டாவைப் பொருத்துவதற்கு முன் குண்டின் முனையைப் பல்லால் கடித்து இழுக்க வேண்டும். இழுபடும் இடத்தில் அந்த தோட்டாக்களைச் சுற்றி மிருகக் கொழுப்பு தடவப் பட்டிருக்கும். வேகமாக வழுக்கிக் கொண்டு தோட்டாக்கள் வெளியேற வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடு இது.[5]

அந்தக் கொழுப்புதான் புரட்சிப் போரின் துவக்கப் புள்ளி. சிலர் அதைப் பன்றிக் கொழுப்பு என்றனர். வேறு சிலர் மாட்டுக் கொழுப்பு என்றனர். பன்றிக் கொழுப்பா? அப்படியானால் முடியவே முடியாது என்றனர் முஸ்லிம்கள். மாட்டுக் கொழுப்பை மனதால் கூட தொடமாட்டோம் என்றனர் இந்துக்கள்.

இந்துக்களும் முஸ்லிம்களுமாக நிறைந்திருந்த பட்டாளத்தில் அதிகாரி களுக்கும் வீரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் வளர்ந்தது. பிரச்சனை முற்றியது. துப்பாக்கியைத் தொட மறுத்ததற்காக 85 வீரர்களுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்துத் தீர்ப்பளித்தது இராணுவ நீதிமன்றம். தீர்ப்பளிக்கப்பட்ட நாள் 1857ஆம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் தேதி.[6]

இந்தக் கைதுதான் புரட்சிப் பெருந்தீயைப் பற்ற வைத்த முதற்பொறி. அதுவரை ஆங்கிலேயர்களுக்கு அடங்கியிருந்தவர்கள் ஆர்ப்பரித்து எழுந்தார்கள். சாது மிரண்டாலே சரித்திரம் படைப்பான் என்றால் வீரன் வெகுண்டால் வீதிகள் தாங்குமா? மறுநாள் காலையில் செய்தியைக் கேள்விப்பட்ட சிப்பாய்கள் சிங்கமெனச் சீறினர், பொறுக்க முடியாமல் பொங்கினர், வெடித்தது புரட்சி! மிரண்டது மீரத்!!. மிளிர்ந்தது இந்தியா!!.

5. (இந்திய சுதந்திரப் பெரும்போரில் இஸ்லாமியர்களின் பங்கு பக் 154 - 155)

6. (இந்திய சுதந்திரப் பெரும்போரில் இஸ்லாமியர்களின் பங்கு பக் 154 - 155)

சிறைச்சாலை தாக்கப்பட்டது. 49 முஸ்லிம்கள் 36 இந்துக்கள் என முன் தினம் கைது செய்யப்பட்டிருந்த 85 வீரர்களும் விடுவிக்கப்பட்டனர். (7)

ஆங்கிலேயர்களின் ஆலயம் முதல் மாளிகை வரை அனைத்திற்கும் தீ வைக்கப்பட்டது. தந்திக் கம்பிகள் அறுத்து எறியப்பட்டன. அதிகாரிகள் அனைவரும் ஓடி ஒளிந்தனர். எதிர்த்து நிற்கத் துணிவில்லாமல் பயந்து நடுங்கினர்;. கொட்டித் தீர்த்த பெரு மழையாய் எதிரிகளை வெட்டிச் சாய்த்தனர் மீரத் நகரின் இராணுவச் சிப்பாய்கள்.(8)

மீரத்தின் கதையை முடித்துவிட்டு அங்கிருந்து வெளியேறிய வீரர்கள், அதே வேகத்தோடு அடுத்த நாள் காலை டில்லி வந்து சேர்ந்தனர். தலை நகர் முழுவதும் வேட்டைக்காடானது. ஆங்கிலேயர் மீதான கோபம்; கனலாகப் பற்றி எரிகிறது என்ற செய்தி அருகிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் காட்டுத் தீயாகப் பரவியது. அதன் விளைவு புரட்சிப் போர், சிப்பாய்களைக் கடந்து பொதுமக்களுக்கும் பரவியது.

மே பத்தில் துவங்கிய போர் செப்டம்பர் 21 வரை நான்கு மாதமும் பத்து நாட்களும் புரட்சியாளர்களின் கை ஓங்கியிருந்தது. அதற்குத் தலைமை தாங்கியவர்களின் கைகளில் அதிகாரம் வந்து சேர்ந்தது. சிறப்பான ஆட்சிக்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டன. பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறோம் என மக்களனைவரும் நிம்மதியடைந்தனர்...

அடங்கி ஒடுங்கிய ஆங்கிலேயக் கம்பெனி, அடுத்த ஆட்டத்திற்கு ஆயத்தமானது. நினைத்துப் பார்க்க முடியாத அளவில் படை பலத்தைப் பெருக்கிக் கொண்டு அசுர பலத்தோடு உள்ளே நுழைந்தது. கடுமையாகப் போரிட்டு, நான்கு மாதங்களுக்கு முன் இழந்த அனைத்து பகுதிகளையும் ஒவ்வொன்றாக கைப்பற்றி, மீண்டும் வெற்றி வாகை சூடியது.

முதல் இந்தியச் சுதந்திரப் போர் குறித்த முக்கியச் செய்திகள் இவை. இந்தச் செய்திகள் அனைத்தும் நாம் அறிந்தவை. அல்லது அறியக் கிடைப்பவை. பாடநூற்கள் வழியாக நமக்குக் கற்றுத் தரப்படுபவை.

இந்தப் புரட்சிப் போரின் பின்னால் வரலாற்று ஆசிரியர்களால் நமக்கு வழங்கப்படாத மறைக்கப்பட்ட மற்றொரு பக்கம் இருக்கிறது.

ஆதி முதல் அந்தம் வரை ஊடுருவி இந்தப் போரின் இரத்தமும் சதையுமாக மாறிப் போன முஸ்லிம்களின் தியாக பக்கங்கள் அவை.

---

7. (இந்திய சுதந்திரப் பெரும்போரில் இஸ்லாமியர்களின் பங்கு பக் 162 -163
Colonel, A.R.D Mackenzie, Mutiny Memories Allahabad, 1892 Vol 1)

8. (புரட்சி ஏற்பட்ட தோல்வியால் அதுவரை கிழக்கிந்தியக் கம்பெனியின் கைகளில் இருந்த அதிகாரம் பறிக்கப்பட்டு இங்கிலாந்து மகாராணியின் நேரடி கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டது. அதன் பிறகுதான் கவர்னர் ஜெனரல் என்பவர் வைசிராய் - ராஜப்பிரதிநிதி ஆனார். இங்கிலாந்து அரசி விக்டோரியா, கெய்சரே ஹிந்த் இந்தியாவின் சக்கரவர்த்தி ஆனார்.)

## போராட்ட நாயகர் பகதூர் ஷா.

மொகலாயப் பேரரசின் கடைசிச் சக்கரவர்த்தி பகதூர் ஷா என்றழைக்கப்படும் முஹம்மது சிராஜீத்தீன் பகதூர் ஷா ஜஃபர். இவரது உதவியும் ஒத்துழைப்பும்தான் வீரர்களைப் போராட்ட களத்தை நோக்கி உந்தித் தள்ளியது.

புரட்சியைக் கையிலெடுத்த வங்கத்துப் படையணியில் இந்துக்களும் முஸ்லிம்களுமாக 1,39,807 இந்தியச் சிப்பாய்கள் இருந்தனர். அவர்கள் அனைவருமே பகதூர் ஷாவே தங்களுக்கு தலைமையேற்று வழி நடத்த வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.[9]

ஆங்கிலேயர்கள் மீது சிப்பாய்களுக்கு இருந்த கோபத்தைவிட பகதூர் ஷாவுக்கு இருந்தது அதிகம். மாமன்னராக வாழ்ந்த ஒருவரை அதிகாரங்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டு ஒரு அடிமையைப் போல ஆக்கியிருந்தார்கள் ஆங்கிலேயர்கள்.[10]

இதனால் மனம் உடைந்த பகதூர்ஷா ஆங்கிலயரை எதிர்ப்பதற்குரிய வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்தி ருந்தார். மறைமுகமாக பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வந்தார்.

உலக அரங்கில் ஆங்கிலேயர்களை அழிக்கத் துடிக்கும் பல்வேறு நாடுகளுக்கு ஆதரவு கேட்டு தபால் எழுதினார். குறிப்பாக பாரசீகம் மற்றும் ரஷ்ய அரசுகளுக்கு உதவிகள் கேட்டு கடிதம் எழுதினார்.[11]

பல்வேறு சமஸ்தான அரசுகளிடமும் ஆங்கில ஆதிக்கத்தை முறியடிக்க கோரிக்கை வைத்தார். குறிப்பாக ஜெசால்பூர், கட்ச்பூர், ஜெய்ப்பூர், ஜோத்பூர், இந்தூர், குவாலியர், பாட்டியாலா, ஜம்மு, பிகானிர், ஆலூர் ஜாஜர், பாலபக், பெரய்லி, ஆகிய சிற்றரசுகளுக்கு மடல் எழுதி புரட்சிக்கு ஒத்துழைப்புக் கோரினார்.[12]

இந்தப் போர் ஏன்? எதற்கு? என்பதை தெளிவுபடுத்தும் ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டார்.

இந்தியாவிலிருந்து ஐரோப்பியர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதே என் ஆசை. அதற்காக என்ன விலையையும் கொடுக்க நான் தயார். இந்தியாவை ஆளும் ஆசையெல்லாம் எனக்கு இல்லை.

---

9. (1857 எழுச்சி இர்ஃபான் ஹபீப் பக் 3, தமிழில் அ.குமரேசன் வெளியீடு பாரதி புத்தகாலயம் 2006)

10. (R.C..மஜூம்தார், H.C..ராய்சௌதுரி, K.தத்தா, தமிழில் A.பாண்டுரங்கன் இந்தியாவின் சிறப்பு வரலாறு மூன்றாம் பகுதி சென்னை 1978 பக்கம் 109)

11. (Sir John Kaye, Edited by Colonel Malleson, Kayes and Malleson History of Indian Mutiny of 1857-8 Vol.2, 1906 p.30)

12.(R.C. Majumdar, The Sepoy Mutiny and the Revolt of 1857, Calcutta 1957, pp.124-126
Sir C.Metcalfe Two Native Narratives of the Mutiny, West minister, 1898, pp. 219-220
A Royal letter from the superior
(இ.சு.பெ.இ.ப) பக். 122-125)

மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ள ஆகச் சிறந்த வெகுமதி சுதந்திரம். எப்பாடு பட்டாவது அதைக் காத்துக் கொள்ள வேண்டும்.

ஆண்டவன் சாட்சியாக இங்கிருந்து ஆங்கிலேயர்அகற்றப்பட்ட பின் உங்களால் தேர்ந்தெடுக்கப் படுபவரிடம் எனது அரச அதிகாரங்கள் அனைத்தையும் ஒப்படைத்து விடுவேன் இது உறுதி என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.[13]

பகதூர் ஷாவின் முயற்சிகள் வீண் போகவில்லை. புரட்சி துவங்கியதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் உதவிகள் கிடைக்க ஆரம்பித்தன. சிப்பாய்ப் புரட்சி தேசத்தின் பேரெழுச்சியாக மாறியது. போராட்டத்தில் அவரது பங்கின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால்தான் புரட்சி வென்றபோது, புரட்சியாளர்கள் அனைவரும் சேர்ந்து அவரை அரியணையில் அமர வைத்து அழகு பார்த்தனர்.

## பரவிய தீயைப் பாதுகாத்தவர்கள்

இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும், பிரஞ்சு, டச்சு என இன்னபிற ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும் ஏராளமான போர்கள் நடந்திருக்கின்றன. அவற்றில் 1857ல் நடைபெற்ற புரட்சிப் போருக்குத் தான் இந்தியப் போர் என்ற தேசியச் சாயல் முதன் முதலாகக் கிடைத்திருக்கிறது. அதுவரை நடைபெற்ற எல்லா போர்களும் பகுதிவாரியான பெயர்களிலே அழைக்கப்பட்டன. ஏனெனில் மற்ற போர்கள் அனைத்தும் வெற்றி தோல்வி என எதுவாயினும் துவங்கிய இடத்திலேயே முடிந்து விடும்

ஓரிடத்தில் துவங்கி ஊரெல்லாம் பரவி தேசத்தின் பெரும் பகுதியை ஆட்கொண்டு ஆர்ப்பரித்தது என்பது தான் 1857ஐ ஏனைய போர்களிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது.

இதற்கு முழுக்க முழுக்க சொந்தம் கொண்டாட தகுதியுடையவர்கள் முஸ்லிம்கள். ஏனெனில் போர் நடைபெற்ற அனைத்து இடங்களிலும் அதற்குத் தலைமை தாங்கி வழி நடத்தியவர்களும்,அதற்குரிய தண்டனைகளை ஏந்தி உயிர் நீத்தவர்களும் முஸ்லிம்களே.

## பாட்னா.

வங்காள இராணுவப் பிரிவின் முக்கியத் தளமான தானாப்பூருக்கு அருகில் உள்ள ஊர். பாட்னா புரட்சியை ஒடுக்க நினைத்த டிவிஷன் கமிஷனர் வில்லியம் டைலர், முக்கிய புள்ளியைப் பிடித்து விட்டால் புரட்சிக்கு மூடு விழா நடத்தி விடலாம் என எண்ணினார். அதற்காக, பாட்னா போரை வழி நடத்திய போராளி மௌலவி. அலீ கரீமை

13. (காஸிம் ரிஸ்வி இந்தியாவின் சுதந்திர போரட்ட வீரர். பஹதூர் ஷா. புதுடில்லி 1983, பக்கம் 5, செ.திவான் (இ.சு.பெ.இ.ப) பக். 173,174)

உடனடியாகக் கைது செய்து சிறையிலடையுங்கள் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அவர் எங்கிருந்து இயக்குகிறார் என்பதே தெரியவில்லை! பிறகெப்படி கைது செய்வது? அப்படியானால் அவரது சொத்துக்களை முடக்கி பறி முதல் செய்யுங்கள் என்றார். அலீ கரீமை உயிருடனோ, பிணமாகவோ ஒப்படைப்பவருக்கு ரூபாய் 5,000 சன்மானம் வழங்கப்படும் என்று அறிவித்தார். இவ்வாறு அரக்கப்பரக்க ஆணைகளிட்டும் அவரது அனைத்து முயற்சிகளும் தோல்வியிலே முடிந்தன. கடைசிவரை ஆங்கிலேயரின் கண்ணில் படாமல், கலங்கவைத்து ஆட்டம் காட்டியவர் பாட்னா மௌலவி. அலீ கரீம்.[14]

## அலகாபாத்.

அலகாபாத்தில்புரட்சியை வார்த்தெடுத்து வழி நடத்தியவர் மௌலவி லியாகத் அலி அவர்கள். இவரை அடக்க ஜெனரல் நீல் தலைமையில் ஒரு காட்டுப்படை வந்தது.

இவரது தலைக்கும் ஆங்கில அரசு 5,000 ரூபாய் விலை நிர்ணயித்தது. பிறகு அதே ஆண்டு ஜூலை 24ல் மும்பையில் வைத்து கம்பெனிப் படை அவரைக் கைது செய்தது. ஆங்கிலேயருக்கு எதிராக ஆள்திரட்டிப் போராடிய குற்றத்திற்காக ஆயுள் முழுவதும் நாடு கடத்தி தீர்ப்பளித்தது ஆங்கில அரசு.[15]

## ரோஹில்கண்ட்

மீரத்தில் துவங்கிய புரட்சி இருபது நாட்களாகியும் ரோஹில் கண்டில் எந்தச் சலசலப்பும் இல்லாமல் அமைதியாகவே இருந்தது. கான் பகதூர் கான் சிப்பாய்களைச் சந்தித்து புரட்சிக்குத் தூபமிட்டார், தூண்டி விட்டார், பற்றிக் கொண்டது போர். மே31ல் யுத்தம் துவங்கியது. ஆங்கிலேய அதிகாரிகள் ஊரைக் காலி செய்துவிட்டு நைனிடாலுக்கு ஓடும் அளவுக்குப் போராளிகள் தமது வீரத்தை வெளிப்படுத்தினர்.

ரோஹில்கண்டில் பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டு டில்லி அரசரின் பச்சைக் கொடி பறக்க விடப்பட்டது. மன்னரின் பிரதிநிதியாக கான் பகதூர் கான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ரோஹில்கண்ட் மீண்டும் ஆங்கிலேயர் வசம் வந்தபோது தேசத்துரோக குற்றச்சாட்டின் பேரில் கான் பகதூர் கான் ஆங்கிலேயர்களால் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்.[16]

14. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள் (வி.போ.மு)வி.என். சாமி பக் 13-25).
15. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள் (வி.போ.மு) வி.என். சாமி பக் 161-166 - (இ.சு.பெ.இ.ப) பக். 820)
16. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள் (வி.போ.மு)வி.என். சாமி பக் 167-168 - (இ.சு.பெ.இ.ப) பக். 790-793).

பதேபூர் புரட்சி, உதவி மாஜிஸ் திரேட்டாக இருந்த ஹிக்மதுல்லாஹ் தலைமையில். கான்பூர் புரட்சி, அஸீமுல்லா கான் தலைமையில். மேவார் புரட்சி, பிரோஸ் ஷா தலைமையில். ஆக்ரா புரட்சி, முராத் அலி தலைமையில்,. இப்படிப் புரட்சியின் வழியெங்கும் பூத்துக் குலுங்கிய நறுமலர்கள் இஸ்லாமிய இளவல்களே![17]

## தூக்கிச் சுமந்த துயரங்கள்

நான்கு மாதத்திற்குப் பின் பல நவீன ஆயுதங்களோடு பறங்கியர்கள், மீண்டும் படைக் களத்திற்கு வந்தார்கள். நடந்து முடிந்த நிகழ்வுகளுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு வந்தார்கள். திட்டமிட்ட ஏற்பாடு, கச்சிதமான அணி வகுப்பு, மரத்தின் கிளைகளுக்கிடையில் தன் இரையை மட்டுமே குறி வைக்கும் வேடனைப் போல முஸ்லிம்கள் மீது மட்டுமே கண் வைத்தார்கள்.

புரட்சியை ஆய்வு செய்த இராணுவக் குழுத் தலைவர் மேஜர் எஃப்.ஜே. ஹரியட், அரசுக்கு வழங்கிய அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

புரட்சியின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் முஸ்லிம்களின் சூழ்ச்சி ரேகைகளே தென்பட்டன. இந்துக்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து சதித்திட்டம் தீட்டியதாகவோ பிராமணர்களும் கோவில் குருக்களும் கிறிஸ்தவர்களுக்கெதிரான சமயப்போர் நடத்தியதாகவோ எந்தச் சான்றும் கிடைக்கவில்லை.

பாரசீகம், துருக்கி போன்ற முஸ்லிம் நாடுகளிடம் ஆங்கிலேயர்களுக்கு எதிராக உதவி கேட்டு ஆளனுப் பியவர்களும், ஆங்கிலேயரை வீழ்த்திய பின் ஆட்சி நடத்தக் காத்திருப்பவர்களும் முஸ்லிம்களே.

புரட்சியின் எந்தக் கட்டத்திலும் சமய ரீதியில் இந்துக்கள் ஒன்றிணையவே இல்லை. ஒன்றிணைந்ததாகவும் சம்பந்தப்பட்டதாகவும் கூறப்படுகிற இடங்கள்கூடமுஸ்லிம்களின் தூண்டுதலின் பேரில் முஸ்லிம்களை அடிப்படையாகக் கொண்டே நடந்துள்ளது என்றார்.[18]

அதனால்தான் ஆங்கிலேயர்கள் தமது இலக்கு முழுவதையும் இஸ்லாமியர்களாகக் கொண்டு தலைநகர்டெல்லியையே தலைகீழாகப்புரட்டினார்கள். காளையர் முதல் கர்ப்பிணிகள் வரை, மாளிகை முதல் மண்மேடு வரை எந்தவித வித்தியாசமுமின்றி அனைத்தையும் வேரறுத்தார்கள்...

17. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள் (வி.போ.மு)வி.என். சாமி பக் 204 - (இ.சு.பெ.இ.ப) பக். 813,804,816,817,821)...

18. (Proceedings of The Trial Bahadhur Sha Calcutta, 1895 p.160 ) இ.சு.பெ..இ.ப. பக் 985,986

தலைநகர் டில்லியை மனித இரத்தத்தால் மாசுபடுத்தினார்கள். டெல்லியில் மட்டும் 27,000 பேரை தூக்கிலிட்டுக் கொன்றார்கள். கொல்லப்பட்டசடலத்தைக் கூட கோரமாகச் சிதைத்தார்கள்.(19)

பகதூருக்குப் பக்கபலமாக படைய னுப்பினார்கள் என்று காரணம் கூறி பக்கத்து அரசின் நவாபுகள் பலரைக் காலி செய்தார்கள். டில்லியை ஒட்டியிருந்த ஜஜ்ஜார், பகதூர்கர், வல்லப்கர், லோஹாரு, பரூக் நகர், துஜானா, பட்டோடி ஆகிய ஏழு சமஸ்தான சிற்றரசர்களை முதலில் சிறை பிடித்தார்கள். பின்னர் சிரசையும் எடுத்தார்கள்.(20)

பரூக் நகரின் சிற்றரசர் அஹமது அலீகானைக் கைது செய்து ஒரு கயவனைப் போல கைகளில் விலங்கு மாட்டி அழைத்து வந்தார்கள். குரூரமான முறையில் அவரைக் கொலையும் செய்தார்கள். உயிரற்ற அவரது உடலைக் கூட உறவினர்களிடம் ஒப்படைக்காமல் உரிய முறையில் அடக்கமும் செய்யாமல் செங்கோட்டையின் அகழியில் வீசியெறிந்தார்கள்.(21)

மொகல் குடும்பத்து இளவரசர்கள் இருபத்தி ஆறு பேரை அவசர அவசரமாகத் தூக்கிலிட்டார்கள்.(22)

கூட்டம் கூட்டமாக பெண்கள் மீது விழுந்து பாய்ந்து பிராண்டினார்கள்.(23)

அரச குடும்பத்துப் பெண்களை அளவுக்கு அதிகமாகவே அவமானப் படுத்தினார்கள். அப்போது டில்லி தலைநகரமாக அல்ல, சாவு நகரமாகக் காட்சி தந்தது என்கிறார் ஆங்கிலப் பெண்மணி ஹேரியட் டைலர்.(24)

---

19. ((இ.சு.பெ.இ.ப) பக். 713 - (வி.போ.மு)வி.என். சாமி பக் 219)

20. (குல்லியத் இ காலிப் லக்னோ 1872 பக் 403-404)

21. (எப்போதாவது எண்ணிப் பாருங்கள் தியாகச் செம்மல்களின் கடிதங்கள் மொழியாக்கம் சரோஜ் நாராயண சாமி புது டில்லி, 1998 பக். 18-20 (இ.சு.பெ.இ.ப) பக். 978)

22. (Memo of The Siege of the Delhi, by E.Hare, kaye manuscripts The India Office Library (Common Wealth Office) Home Miscellaneous No.726 pp. 1377-1457

மீர்ஜா நாதிர் பக்த் மீர்ஜா மெல பக்ஷ் மீர்ஜா அபூ அப்பாஸ் முஹம்மது ஷேக்கோ மீர்ஜா ஹுசைன் பக்ஷ் மீர்ஜா அஹமது பக்ஷ் மீர்ஜா அபுயுத்தீன் அப்பாஸ் மீர்ஜா மொகருத்தீன் மீர்ஜா மொயினுத்தீன் மீர்ஜா காதிர் பக்ஷ் மீர்ஜா குதுப்தீன் மீர்ஜா நூருத்தீன் மொய்சுத்தீன் மீர்ஜா இனாயத் ஹுஸைன் மீர்ஜா முஹம்மது பக்ஷ் குலாம் முஹம்மதி மீர்ஜா குலாம் பக்ருத்தீன் மீர்கா குலாம் அப்பாஸ் மீர்ஜா கபருத்தீன் மீர்ஜா பகதுர் மீர்ஜா வாலா ஷேக்கோ மீர்ஜா நாக்ஹி மீர்ஜா முபாரக் மீர்ஜா முபாரக் மீர்ஜா புல்லாண்டி மீர்ஜா கலி)

23. (சுதந்திரப் போரளிகள் நடத்திய தாக்குதலில் ஒரேயொரு மகளிர் கூட மானபங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. புரட்சி நடந்து கொண்டிருந்த நேரத்தில் போராளிகள் ஐரோப்பியப் பெண்களை கற்பழித்ததாக ஒரு வதந்தி கிளம்பியது. பின்னால் அது குறித்து விசாரித்த சாண்டர்ஸ் குழு அப்படி எந்த ஒரு நிகழ்ச்சியும் நடக்கவில்லை என அறிக்கை தந்தது.

Oriental And India Office Collections British Library London Eur Mss e 185 Saunder papers No 104 Muir to Saundres Agra 2-12-1857 (இ.சு.பெ.இ.ப) பக். 905)

24. (Harriet Tyher An English woman in India The Memories of Harriet Tyher 1828 Edited Anthony Sattin, Oxford, 1986)

## அழிக்கப்பட்ட அடையாளங்கள்

நகரில் வாழ்ந்த மனிதர்களை மட்டுமல்ல, அவர்களின் கல்வி, கலாச்சாரம், பாரம்பரியம், பொருளாதாரம், வரலாற்றுச் சின்னம் என்று அவர்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் அழித்தார்கள்.

தில்லி. திரும்பிய பக்கமெல்லாம் எண்ணூறாண்டு கால இஸ்லாமி யர்களின் சரித்திரத்தை எடுத்துச் சொல்லும் சுவடுகள் நிறைந்த பூமி. கட்டிடங்கள் முதல் கலைப் பொருட்கள் வரை அனைத்திலும் அது பிரதிபலிக்கும். எந்தவொன்றும் மிச்சமிருக்கக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு தகர்த்தார்கள்

மஸ்ஜிதே அக்பராபாதி, மஸ்ஜிதே கஷ்மீரி கத்ரா ஆகிய பள்ளிவாசல்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்.(25) பகதூர்கர், பரூக் நகர், பாலப்கர், ஜாஜர் ஆகிய நவாப்களின் பெரும் பெரும் அரண்மனைகளைக் கூட பேரழிவின் சின்னங்களாக மாற்றினார்கள்.(26)

மன்னர் ஔரங்கஜேப் முடிசூட்டிக் கொண்ட சாலிமர்பாக் எனும் பசுமைக்குடில் சோட்டா ரங் மஹால், ஹயாத் பக்ஷ் தோட்டம், மெஹ்தப் தோட்டம் அனைத்தும் அடியோடு சாய்க்கப்பட்டது. அழிக்க மனம் வராத இடங்களில்கூட குறைந்த பட்சம் அதிலிருந்த முஸ்லிம்களின் அடையாளங்களையாவது அழித்தார்கள்.(27)

பேகம் பாக் என்ற அரசியாரின் தோட்டம் குயின்ஸ் கார்டன் ராணியின் தோட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. லாகூர் தர்வஸா, விக்டோரியா வாசலானது. விலையுயர்ந்த கலைப் பொருட்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டது.

பளிங்குக் கற்களும் பலம் வாய்ந்த மரங்களும் பெயர்த்து எடுத்து விற்பனை செய்யப்பட்டன.(28)

முஸ்லிம்களின் சொத்துக்களைக் கைப்பற்றி ஏலத்தில் விட்டார்கள். இந்துக்கள், ஜெயின்கள், பங்கர்கள் என முஸ்லிமல்லாத பலரும் அவற்றை வாங்கிப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பள்ளிவாசல்கள் கூட ஏலத்திலிருந்து தப்பவில்லை. சுன்னாமால் என்ற இந்து வணிகர் பதேபூர் பள்ளிவாசலை ஏலத்தில் எடுத்தார். மகேஸ்தாஸ் என்ற ஜெயினர் மஸ்ஜிதே ஜீனத்தை விலைக்கு வாங்கினார். (29)

25. ((இ.சு.பெ.இ.ப) பக். 900)
26. (Narayani Gupta Delhi between Empires New Delhi 1991 p. 127
(இ.சு.பெ.இ.ப) பக். 901)
27. (James fergussaon History of Indian, Eastern Archiitecture London 1876 p 311
(இ.சு.பெ.இ.ப) பக். 901-902)
28. ((இ.சு.பெ.இ.ப) பக். 901)
29. ((இ.சு.பெ.இ.ப) பக். 904)

பிரசித்தி பெற்ற மார்க்கக் கல்விக் கூடம் மதரஸா ரஹீமிய்யாவும் ஏலத்திற்கு வந்தது. அதை வாங்கிய ராம்ஜிதாஸ் என்ற பனியா தனது வியாபரப் பொருட்களின் சேமிப்புக் கிடங்காக ஆக்கிக் கொண்டார்.[30]

பிரசித்தி பெற்ற டில்லி ஜீம்ஆ மசூதி இரண்டாண்டுகள் ஆங்கிலேயரின் இராணுவக் கூடமாகப் பயன்படுத்தப்பட்டது. யாரும் தொழுவதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை.[31]

முஸ்லிம்களோடு பன்னெடுங் காலமாகப் பின்னிப் பிணைந்த ஒரு நகரம் முஸ்லிம்களே இல்லாமல் துடைத்தெறியப்பட்டது. டில்லி நகருக்குள் வருவதற்கே முஸ்லிம்களுக்குத்தடை விதிக்கப்பட்டது.[32]

## சுற்றி வளைக்கப்பட்டார் சூத்திரதாரி

நகரை நிர்மூலமாக்கும் கொடுமை களுக்கிடையில் சுதந்திரப் போரின் சூத்திரதாரியைச் சுற்றி வளைக்கும் வேலைகள் ஆரம்பமாயின. அதற்கான பொறுப்பு கொடியவன், ஆங்கிலக் கம்பெனியின் குதிரைப் படைத் தலைவன் ஹட்ஸனிடம் ஒப்படைக்கப்பட்டது.

நூறு குதிரைப் படை வீரர்களோடு புறப்பட்டான் ஹட்ஸன். ஹீமாயூனின் சமாதியில் தஞ்சம் அடைந்திருந்த மன்னர் பகதூர் ஷாவையும் அவரது பிள்ளைகளையும் கைது செய்தான்.

அழைத்து வருவதற்குள் அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. இளவரசர்கள் மூவரையும் வண்டியிலிருந்து இறக்கினான். அனைவருக்கும் முன் பாகவே அவர்களின் ஆடைகளைக் களைந்தான். மீர்ஜா மொகல், மீர்ஜா ராஜி சுல்தான், மீர்ஜா அபூபக்கர் ஆகிய மூன்று இளைஞர்களையும் பட்டப்பகலில் பலபேர் முன்னிலையில் துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொன்றான் ஹட்சன்...

கொல்லப்பட்ட இளவரசர்களின் உயிரற்ற சடலங்களை கழுகுகளுக்கும், காக்கைகளுக்கும் இரையாக வெட்ட வெளியில் வீசி எறிந்தான்.[33]

## சிலிர்க்க வைத்த சிறைக் கூடம்

சிறையிலடைக்கப்பட்ட பகதூர் ஷாவை, கையில் பெரிய பாத்திரத்துடன் பார்க்க வந்தான் ஹட்ஸன். நீண்ட நாட்களாகப்

30. Farhan Ahmad Nizami Madrasa Scholars And Saints Muslims Response to the British presence in the Delhi and the Upper Daob 1803-1857 Unpublished ph. D Oxford 1983 p 19

(இ.சு.பெ.இ.ப) பக். 907)

31. ((இ.சு.பெ.இ.ப) பக். 740)

32. ((இ.சு.பெ.இ.ப) பக். 903)

33. (W.S.R Hodson Twelve years of Soldier’s Life in India ed by, The Rev George H.Hodson, Boston, Ticknor and Fields 1860 pp 339-341

(இ.சு.பெ.இ.ப) பக். 192,193)

பாக்கியிருந்த கம்பெனியின் பரிசு என்று மூடிய பாத்திரத்தை பகதூரின் முன்னால் திறந்து காட்டினான். பகதூரின் ஒரு மகன், மற்றும் பேரனின் தலைகள் அதற்குள்ளே!. ஒருகணம் நினைத்தாலே சிலிர்த்து விடுகிறது நம் உடல்.

அதைப் பார்த்ததும் மன்னர் கதறி அழுவார் என எதிர்பார்த்தான் ஹட்ஸன். அவனது எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது. அவன் கேட்டான் உமது கண்களில் கண்ணீர் வற்றி விட்டதா?

இல்லை... அரசர்கள் அழுவதில்லை என்று அவனை அசர வைக்கும் விதத்தில் அதிரடியாக அவர் பதிலளித்தார் பகதூர்ஷா.[34]

## குற்றவாளிக் கூண்டில்

1858 ஜனவரி 27. அன்று டெல்லி செங்கோட்டையில் பகதூர் ஷாவின் மீதான விசாரணை ஆரம்பமானது. எந்த மரபுகளும் பேணப்படாத ஒரு விசாரணை. ஆங்கிலேயர்களின் நீதிமன்ற நடைமுறைகளோ, சர்வதேசச் சட்டங்களோ, மன்னர்களாக இருந்த வர்களுக்கு வழங்க வேண்டிய மரியாதைகளோ, குறைந்த பட்ச மனித மாண்புகளோ எதையும் கணக்கில் கொள்ளாத ஒரு விசாரணை.

விசாரணையின் முடிவில், ஆயுள் முழுவதும் அவர் அகதியாகவே வாழவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டு மனைவி மக்களோடு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.[35]

வாழ்வின் பெரும் பகுதியை செல்வச் செழிப்பில் கழித்த அந்தப் பெருமகன், தனது அந்திம காலத்தில் வறுமையோடு போராடும் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரது ஏழ்மைக்காக கொஞ்சம் இரக்கம் காட்டிய ஆங்கில அரசு, அவருக்கு செய்ய முன் வந்த அனைத்து உதவிகளையும் அடியோடு மறுத்து விட்டார்...

பேரோடும் புகழோடும் பல்லாண்டு காலம் வாழ்ந்த மொகலாயப் பேரரசின் கடைசி வாரிசு, முதல் இந்தியச் சுதந்திரப் போரின் விடிவெள்ளி சிராஜீத்தீன் பகதூர் ஷா ஜஃபர் 1862 ஆம் ஆண்டு தனது எண்பத்தி ஏழாவது வயதில் ரங்கூனிலே காலமானார்.

நான் பிறந்து வாழ்ந்த என் இந்திய மண்ணில் எனது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் அதற்கு மட்டும் கொஞ்சம் நிலம் கிடைத்தால் போதும் என்ற அவரது ஆசையும் அவரைப் போலவே மண்ணுக்குள் புதையுண்டுப் போனது.

34. (காஸிம் ரிஸ்வி, பஹதூர் ஷா ஜஃபர் பக் 9,10 (இ.சு.பெ.இ.ப) பக். 194)
35. ((இ.சு.பெ.இ.ப) பக். 203,204)

## மரணத்திற்குப் பின்

மரணித்த செய்தியைக் கூட மக்களுக்குத் தெரியாமல் மறைத்தது ஆங்கில அரசு. அந்தச் செய்தி எந்தப் பத்திரிக்கையிலும் வெளிவராதவாறு பார்த்துக் கொண்டது. எதேச்சையாகத் தெரிந்து கொண்டு வந்த மக்களையும் கூட சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ள விடாமல் தடுத்து நிறுத்தியது. இறுதி கட்டத்தில் அவரோடு இருந்த மூவரைத் தவிர வேறு யாரும் அடக்கஸ்தலத்திற்குள் நுழையக் கூடாது என தடை விதிக்கப்பட்டனர்.

அடக்கப்பட்ட உடல் கூட சீக்கிரம் அழிந்து போக வேண்டும் என்பதற்காக சவக்குழிக்குள் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு வந்து கொட்டினார்கள். அடக்கிய இடத்தை யாரும் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அதனைத் தரையோடு தரையாக சமப்படுத்தினார்கள்.[36]

பகதூர் ஷாவின் ஆதரவாளர்கள், அவர் மரணித்து ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் 1907ஆம் ஆண்டு செவிவழிச் செய்தியாக கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு, அவருக்காக நினைவிடம் ஒன்றை எழுப்பினார்கள்...

பகதூர் ஷா முன்னால் டில்லி அரசர். 1862ல் மறைந்தார். அவர் உடல் இதன் அருகே (கவனிக்கவும் இங்கே இல்லை) அடக்கம் செய்யப்பட்டது என ஒரு கல்வெட்டையும் அங்கே நட்டு வைத்தார்கள்.[37]

ஜவஹர்லால் நேரு எழுதிய நூல் இந்திய தரிசனம். 1944ல் சிறையில் இருந்த போது எழுதப்பட்ட இந்நூலில் 1857இல் புரட்சி முடிவுக்கு வந்த பின் முஸ்லிம்கள் தான் அதிகமதிகமாகப் பாதிக்கப்பட்டனர் என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.[38]

இவற்றில் வர்ணனை என்ற பெயரில் வரம்பு மீறிய வார்த்தைகள் எதுவும் இல்லை. வஞ்சத்தினால் சொல்லப்பட்ட நெஞ்சம் அறுக்கும் செய்திகள் இல்லை. அனைத்துமே ஆதாரப்பூர்வமானது. நேரடி சாட்சிகளும் அவர்களிடம் கேட்டவர்களும் நமக்குத் தரும் வாக்குமூலங்களின் அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏராளமான அரசு ஆவணங்கள் இதற்கு சான்றுகளாக இருக்கின்றன.

36. (William Dalry mole The Last Mughal The Fall of Dynasty Delhi Penguin viking New Delhi 2006 p 1 National Archieves of India New Delhi Foreign Department of olitical November 1862 p 204/62, (இ.சு.பெ.இ.ப) பக். 910,911)

37. (Myanmar National Archieves, (yengon) Series, 1/1A, Acc No.3656, 1905, File No C.4, Bahadhur Sha (Ex. King of Delhi) Presenvation of Grave, ((இ.சு.பெ.இ.ப) பக். 913)

38. ((இ.சு.பெ.இ.ப) பக். 976)

3

# காங்கிரசும் முஸ்லிம்களும்

சுதந்திரப் போரின் பிற்பகுதியில் நாடு தழுவிய அளவில் மக்களின் ஆதரவு பெற்ற இயக்கமாக காங்கிரஸ் மாறியிருந்தது. காந்தியின் அகிம்ஸா தத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

ஆயுத முனையில் அடக்குமுறை செய்யும் ஆங்கிலேயர்களை அகற்றுவதற்கு இது சரியான வழிமுறை அல்ல என்றாலும் நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டதும் மக்கள் ஆதரவை அதிகம் பெற்றதுமான ஒரே இயக்கமாக அன்றைக்கு அது மட்டுமே இருந்தது.

இறுதிக் கட்டப் போர் முடிந்து இனிமேல் இந்தியா நமக்கு வேண்டாம் என ஆங்கிலேயர்கள் வெளியேறிய போது காங்கிரசாரின் கைகளில் தான் நாட்டை ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

காங்கிரஸின் முயற்சிதான் நாட்டு விடுதலைக்கு அஸ்திவாரம் என அதிகமான மக்களால் நம்பப்படுகிறது. ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆலவிருட்சத்தை தாங்கிப் பிடித்ததிலும் தண்ணீர் வார்த்ததிலும் பலர் இருக்கிறார்கள். முதலிடத்தில் முஸ்லிம்கள்தான் இருக்கிறார்கள்.

ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வரிகொடா இயக்கம், கதர் ஆடை இயக்கம், அந்நியத் துணி பகிஷ்கரிப்பு இயக்கம், கள்ளுக் கடை மறியல், உப்புச் சத்தியாக்கிரகம் என நடத்தப்பட்ட இவற்றில் அதிகமான மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத, ஏற்றுக் கொண்டாலும் கடைப்பிடிக்கப்படாத ஒன்று ஆங்கில அரசின் கல்வி மற்றும் வேலையைப் புறக்கணியுங்கள் என்ற அறிவிப்பு.

கல்வி எதிர்கால வாழ்வின் அடிப்படை. வேலை நிகழ்கால வாழ்வுக்கு உத்திரவாதம். இரண்டையும் இழப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. குடும்பம் சமூகம் என ஒரு மனிதனைச் சார்ந்திருக்கிற யாரும் அவ்வளவு எளிதாக இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

கண்ணெதிரே ஆயிரம் வாய்ப் புகளைக் காண்பவர்கள்கூட இருக்கும் வேலையை இழந்துவிட்டு இன்னொரு வேலையைத் தேடுவதற்கு கடுமையாக யோசிப்பார்கள். புதிய வேலை எப்படி அமையுமோ?. ஒருவேளை நஷ்டப்பட்டு விட்டால் என்ன செய்வது? என்பன போன்ற எண்ணங்கள் அவர்கள் உள்ளத்தில் அலைமோதும்.

அது கூட இருப்பதைக் கொடுத்து விட்டு சிறந்ததைப் பெறுவதற்குத்தான்.

இங்கே நிலைமையோ தலைகீழ். கையில் இருக்கும் அரசாங்க வேலையை விட்டு விட்டால் அதைவிட சிறந்த வேலை அமைவதற்கு வாய்ப்பே இல்லை. அப்படி ஒரு வேலையை விடுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்? சரி, ஒருவேளை சிறந்தது அமையாவிட்டாலும் பரவா யில்லை. கால் கஞ்சி குடிப்பதற்காவது காசுக்கு வழி கிடைக்குமா என்றால் அதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. இப்படிப்பட்ட மரணப் பரீட்சைக்கு யார்தான் முன்வருவார்? இருப்பதை விட்டு பறப்பதை விரும்பலாம். பறப்பதற்கு ஆசைப்பட்டு இருக்கக் கூட முடியாமல் போனால்....?

அதனால்தான் இந்தத் திட்டத்தை காந்தி முன்வைத்த போது விரல் விட்டு எண்ணுகிற மிகச் சிலரைத் தவிர இந்தியாவின் அனைத்து சமுதாயத்தினரும் அதை அலட்சியப்படுத்தி விட்டார்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை எண்ணிச் சொல்லுகிற இரண் டொருவரைத் தவிர அனைவருமே அதை அங்கீகரித்தார்கள். அப்படியே கடைப்பிடித்தார்கள். இது அப்பழுக்கற்ற வரலாற்று உண்மை.

உதாரணத்திற்கு ஒரு சில...

## ரஃபி அஹமது கித்வாய்

உத்திரப் பிரதேச மாநிலம் பாரபங்கி மாவட்டத்தின் மாசாலியைச் சேர்ந்தவர் ரஃபி அஹமது கித்வாய். சிறு வயதிலே தாயை இழந்தார். பணி நிமித்தமாக தாய் மாமன் விலாயத் அலியிடம் ஒப்படைத்துவிட்டு தந்தையும் அவரைப் பிரிந்தார். தேசப்பற்று மிக்க மாமனின் வளர்ப்பால் சிறுபருவத்திலே தேசியவாதியாக உருவெடுத்தார்.

மௌலானா முஹம்மதலி நடத்தி வந்த காம்ரேட் ஆங்கிலப் பத்திரிக் கையில் பம்பூக் என்ற பெயரில் கட்டுரைகள் எழுதி தேசியக் கனல் வெடிக்கக் காரணமாக இருந்தார். அலிகர் முஹம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியில் பி.ஏ. முடித்து விட்டு அரசின் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வந்தார். காந்தியின் அறிவிப்பு காதைக் கிழிக்க, கண நேரம் கூட தாமதிக்காமல் கல்லூரியை விட்டு வெளியேறினார்.[39]

## டாக்டர் ஜாகிர் ஹுஸைன்

ஆப்கானிஸ்தானத்தை பூர்வீகமாகக் கொண்டவர். ஹைதராபத்தில் பிறந்து உ.பி. மாநிலம் குயாம் கஞ்சில் வளர்ந்தவர். 1963 ஆம் ஆண்டு இந்தியாவின் பாரத ரத்னாவாகி 1967ல் இந்திய ஜனாதிபதியாக உயர்ந்தவர் டாக்டர் ஜாகிர் ஹுஸைன்.

39. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள், வி.என்.சாமி பக் 460)

அலிகர் முஹம்மதன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியில் பி.ஏ. முடித்துவிட்டு எம்.ஏ.படித்துக் கொண்டிருந்தார். 1920 ஆம் ஆண்டு அக்டோபர் 12ல் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற காந்தி ஆங்கில அரசின் பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதே நேரம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நாமே சுயமாக தேசியக் கல்லூரிகளை உருவாக்கவும் வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

பேசி முடித்து விட்டு காந்தி கல்லூரியை விட்டுச் சென்றார். அவரது பேச்சைக் கேட்ட ஜாகிர் ஹுஸைன் அவருக்குப் பின்னாலே சென்றார். படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டு.

கல்லூரியை விட்டு வெளியேறியவர் கால நேரத்தை விரயம் செய்யாமல் காந்தி சொன்னபடியே தேசியக் கல்வி நிறுவனத்தை உருவாக்க பெரும் முயற்சியெடுத்தார்.

வெளியேறிய 17 நாட்களில் அதாவது 29.10.1920 அன்று அதே ஊரில் ஜாமியா மில்லிய்யா என்ற தேசியக் கல்வி நிறுவனத்தைத் தொடங்கினார். அலிகரில் இருந்து அந்நிறுவனம் பின்னர் டில்லிக்கு இடம் மாறியது. அதன்பின் கல்லூரியானது. தொடர்ந்து பல்கலைக் கழகமாக உருவெடுத்து தற்போது ஆலவிருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

22 ஆண்டுகள் நிறுவனரையே துணை வேந்தராகக் கொண்டு இயங்கிய டில்லி ஜாமியா மில்லிய்யா பல்கலைக் கழகம் இஸ்லாமியர்களின் தியாக வாழ்வையும், தேசிய உணர்வையும் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. அதைக் கேட்பதற்கு எந்தச் செவிகளும் இல்லை என்பது தான் மிகுந்த வலியைத் தருகிறது.(40)

## முஹம்மது அப்துர் ரஹ்மான்

கேரள மாநிலம் கொடுங்களூருக்கு அருகில் உள்ள அழிக்கோடு கிராமத்தைச் சேர்ந்தவர். அல் அமீன் என்ற பெயரில் வாரம் மும்முறை வெளியான மலையாளப் பத்திரிக்கையின் ஆசிரியர். கேரள காங்கிரஸ் கமிட்டியின் தலைவர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர். நகராட்சி மற்றும் சட்டமன்றங்களில் பலவருடங்கள் உறுப்பினர் என பொது வழ்வில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் முஹம்மது அப்துர் ரஹ்மான்.

ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காந்தியின் அழைப்பை ஏற்று தனது கல்லூரிப் படிப்பை பாதியிலே நிறுத்தினார். தேசியப் போராட்டத்தில் குதித்தார். அதற்காகப் பல ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அனுபவித்தார்.(41)

40. (வி.போ.மு, வி.என்.சாமி பக் 470-476)

41. (வி.போ.மு, வி.என்.சாமி பக் 603)

## காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில்

நெல்லை மாவட்டம் பேட்டையைச் சேர்ந்தவர். ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் பிறந்தார். எனவே அந்நாளின் நாயகர்கள் இருவரில் இரண்டாமவரான இஸ்மாயீல் நபியின் பெயரைச் சேர்த்து முஹம்மது இஸ்மாயீல் என்று பெயரிடப்பட்டார்.

சிறு வயதிலே சகோதரர்களோடு சேர்ந்து பால்ய முஸ்லிம் சங்கம் என்ற பெயரில் இயக்கம் நடத்தினார். 1936 ஆம் ஆண்டுவரை தீவிர காங்கிரஸ்காரராக இருந்தார். அதன் பிறகு அதிலிருந்து விலகி முஸ்லிம் லீகில் இணைந்து போராடினார். 20 ஆண்டு காலம் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதி நிதியாகப் பணியாற்றினார்.

தமிழகத்தில் பிறந்து வாழ்ந்து கொண்டு கேரள மாநிலம் மஞ்சேரி தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். அங்கிருந்து 1962, 1967, 1971 ஆகிய மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

அரசியல் அமைப்பு நிர்ணய சபையிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாஹிபு அவர்கள் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. படித்துக் கொண்டிருந்த போது "கல்லூரியைப் புறக்கணியுங்கள்" என்ற காந்தியின் அறிவிப்பு வருகிறது. உடனே தனது படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு காங்கிரசில் கைகோர்த்து களம் பல கண்டு 5.4.1972 ஆம் ஆண்டு கண்ணியமான முறையில் காலமானார்.[42]

## அப்துல் சத்தார் சாஹிப்

சுதந்திரம் நமது பிறப்புரிமை பூரண சுயராஜ்ஜியமே லட்சியம் என்று முழங்கிய கலகக்காரர் திண்டுக்கல் அப்துல் சத்தார் சாஹிப்.

1941 ஆம் ஆண்டு தொடங்கிய தனி நபர் சத்தியாக்கிரகத்தை நடத்தி 500 ரூபாய் அபராதமும் ஓராண்டு கால சிறைத் தண்டனையும் அனுபவித்தவர். விடுதலை பெற்று வெளியில் வந்த சில நாட்களிலே, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மீண்டும் கைதாகி தஞ்சை, வேலூர், கண்ணனூர் என பல ஊர் சிறைகளுக்கும் பந்தாடப்பட்டார்.

1915 ஆம் ஆண்டு பூரண சுயராஜ்ஜியம் கோரி நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை மதுரையே திரும்பிப் பார்க்கும் அளவுக்குஎழுச்சியோடு நடத்திக் காட்டிய அப்துல் சத்தார் சாஹிப் அவர்கள், மதுரையில் இண்டர் மீடியட் படித்துக் கொண்டிருந்தபோது காந்தியின் அறிவிப்பைக் கேள்விப்பட்டார்.

42. (வி.போ.மு, வி.என்.சாமி பக் 742-744)

மகன் படித்து பட்டதாரியாக வருவான் என அவரது தந்தை காத்துக் கொண்டிருந்த நேரத்தில் தந்தையின் ஆசையை நிராசையாக்கி விட்டு, கல்லூரிப் படிப்பை கை கழுவி விட்டு காந்தியின் இயக்கத்தில் கால் பதித்தார் காலம் முழுக்க அதிலேயே கரைந்து போனார்.[43]

இவ்வாறு நாட்டு விடுதலைக்காக கல்வியை இழந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை ஏராளம். அரசின் கோப்புகளில் அடைக்கலமாகி காலத்தின் வெளிச்சம் படாமல் கரையான் அரித்துக் கிடக்கின்றன இதுபோன்ற எண்ணற்ற பல தியாகங்கள்.

1920 21 ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசின் அறிக்கையில்,

இந்தக் கல்வியாண்டில் கிலா பத் இயக்கத்தின் தாக்கத்தால் முஸ்லிம் மாணவர்கள் 4,420 பேர் குறைந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

1922 ஆம் ஆண்டு கல்வித்துறை இயக்குனர் அறிக்கையில்..

(1918 ஆம் ஆண்டு முஸ்லிம் மாணவர்களைக் கருத்தில் கொண்டு சென்னை மாகாண அரசால் சென்னையில் துவங்கப்பட்ட) மதரஸாயே ஆஸம் கல்வி நிறுவனத்தில் இந்த ஆண்டில் வெறும் 21 மாணவர்கள் மட்டுமே படிக்கின்றனர். மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காவிட்டால் இதை மூடி விடுவதே சிறந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.[44]

கல்விச் சாலைப் புறக்கணிப்பில் முஸ்லிம்கள் காட்டிய கடுமையை இவ்விரண்டு அறிக்கையின் மூலம் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

கல்வி கற்க வேண்டும் என்ற விழிப்புணர்வே மிகக் குறைவாக இருந்த காலகட்டம். குழந்தைகளைப் படிக்க வைக்க வசதியுள்ளவர்களின் எண்ணிக்கையும் அப்போது மிகக் குறைவு. அந்தக் காலத்தில் ஒரே ஒரு ஆண்டில் சென்னையில் மட்டும் 4,420 மாணவர்கள் பள்ளி கல்லூரிகளை விட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்றால் எவ்வளவு பெரிய தியாகம்? எப்படிப்பட்ட புரட்சி?

மற்ற சமூகங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த புறக் கணிப்பைப் போல இதை எடுத்துக் கொள்ள முடியுமா? முஸ்லிம்கள் குறைவாக இருந்த சென்னையிலே நிலைமை இப்படியிருந்தால் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருந்த வங்காளம் போன்ற இடங்களில் போராட்டமும் புறக்கணிப்பும் எந்த அளவிற்கு உக்கிரமாக இருந்திருக்கும்? என்பதை சொல்லாமலே புரிந்து கொள்ளலாம்.

43. (வி.போ.மு, வி.என்.சாமி பக் 749-750)

44. ((ஆஸம்) தியாகத்தின் நிறம் பச்சை பேராசிரியர் அப்துஸ் ஸமது பக். 90-91)

இது முஸ்லிம்கள் தாமாகவே விரும்பி வலிய சுமந்து கொண்ட சுமை. அன்று தூக்கிய அந்தச் சுமை இன்றும் கூட முஸ்லிம்களின் தோள்களை அழுத்திக் கொண்டிருக்கிறது. அதனை அகற்றுவதற்கு மனமற்றவர்கள் தான் இந்தியாவின் அரியணையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்று தலைவர்களின் அறை கூவலை தரைமீது வீசிவிட்டு கல்வி நிலையங்களுக்குள் கருத்தூன்றி படித்தவர்கள் இன்று வளமான வாழ்வுக்கு வாரிசாகிப் போனார்கள். ஆலம் விழுதென நாட்டைத் தாங்கிப் பிடித்தவர்கள் ஆழக் குழிதோண்டி அதற்குள்ளே அமிழ்ந்து போனார்கள்.

சுதந்திர இந்தியாவில் அமைக்கப்பட்ட பல்வேறு கமிஷன் அறிக்கைகள் இதற்கு ஆதாரம்.

சிறுபான்மையினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்டோர் குறித்து ஆராய்வதற்காக இந்திரா காந்தியின் ஆட்சியில் அமைக்கப்பட்ட கோபால் கமிஷன்.

1995 ஆம் ஆண்டு போலீஸ் மற்றும் இராணுவப் பணிகளில் சிறுபான்மையினரின் பங்கு குறித்து ஆராய்ந்த தேசிய சிறுபான்மையினர் ஆணையம்.

1996ஆம் ஆண்டு திட்டக் குழுவின் சிறுபான்மையினர் துணைக்குழு வழங்கிய சிறுபான்மையினர் குறித்த தகவல் திரட்டு.

2005 மார்ச் 9ல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் நீதிபதி இராஜேந்திர சச்சார் தலைமையில் அமைக்கப்பட்ட முஸ்லிம்களின் சமூகப் பொருளாதார ஆய்வுக் குழு.

2005 மார்ச் 15ல் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா தலைமையில் அமைக்கப்பட்ட மொழி மற்றும் மதச் சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம்.[45]

இந்த அனைத்து அமைப்புகளுமே முஸ்லிம்களின் பின்தங்கிய நிலையை அரசுக்குப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன. படங்கள் எத்தனை வந்தாலும் முஸ்லிம்களின் நிலையில் மட்டும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

## மார்க்கத் தீர்ப்பு

இந்தியாவில் வாழ்ந்த வேறெந்த சமுதாயங்களையும் விட அதிகமாக முஸ்லிம்கள் போராடியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பை புறக்கணியுங்கள் என்ற காந்தியின்

45. (இழப்பதற்கு ஏதுமில்லை. அ.மார்க்ஸ், பக் 32-52 வெளியீடு பெருவளநல்லூர் மற்றும் லால்குடி சாந்தி நகர் முஸ்லிம் ஜமாஅத்)

அறிவிப்பை காங்கிரஸ் கட்சியின் அறைகூவலாக மட்டும் முஸ்லிம்கள் கருதவில்லை. அதையும் தாண்டி இஸ்லாமிய மார்க்கத்திற்குச் செய்யும் தொண்டாக கடமையாக நினைத்தார்கள். ஏனெனில் ஆங்கிலேயர்களை தமது மார்க்கத்தை அழிக்க வந்த விரோதிகளாகப் பார்த்தார்கள்.

முஸ்லிம் மதகுருமார்கள் மார்க்கத் தீர்ப்பு என்ற பெயரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல்வேறு பிரகடனங்களை வெளி யிட்டார்கள். ஆங்கிலேயர்களால், இந்தியாவிற்கு அறிமுகம் செய்யப்பட்டஅனைத்தையும் மார்க்கத்தின் பெயரால் தடை செய்தார்கள். அவனது மொழி, உடை, சிகையலங்காரம் அனைத்துமே ஆபத் தானது என்று அச்சமூட்டினார்கள்.

ஆங்கிலம் கற்பதும், பேண்ட் அணிவதும் கிராப் வெட்டி முடியை அலங்கரித்துக் கொள்வதும் ஹராமானது (தடுக்கப்பட்டது) என்று கூறினார்கள்.

ஆங்கிலேயர்களின் கல்வி நிலையங் களைப் புறக்கணித்த மாணவர்களுக்கு மாற்றுக் கல்வித் திட்டமாக நாடு முழுவதும் மதரஸாக்களைத் திறந்தார்கள்.

இந்த மதரஸாக்களில் ஆங்கிலேயர் வெறுப்பும், எதிர்ப்புமே அதிகமாக ஊட்டி வளர்க்கப்பட்டது. மாதம் ஒருமுறை மொட்டையடிப்பது வலியுறுத்தப்பட்டது, பேண்ட் அணிவது முற்றிலுமாக தடுக்கப்பட்டு கைலி உடுத்துவது கடமையாக்கப் பட்டது, ஆங்கிலத்தின் வாடை கூட வந்து விடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. இவையனைத்தும் கடுமையாகப் பின்பற்றப்பட்டன.

அன்று தொடங்கிய இந்தப் பயணம் இன்றும் கூட நிற்காமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து வெளியாகும் ஆலிம்களிடம் இன்றும் அதன் தாக்கத்தை உணர முடியும். கைலி கட்டுதல், ஜுப்பா அணிதல், மொட்டையடித்தல் ஆகிய அனைத்தும் அதன் பிரதி பிம்பங்களே.

இந்தப் போர் துவங்கி 90 ஆண்டுகள் ஓடி விட்டன. அது முடிந்து 60 ஆண்டுகளைக் கடந்து விட்டோம். இப்போதும் அதன் தாக்கம் தொடர்கிறது என்றால் முஸ்லிம்கள் சுதந்திரப் போரில் எந்த அளவிற்கு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் உண்மை விசுவாசத்துடன் பங்கெடுத் திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

நாட்டு விடுதலைக்காக உருவாகி, அன்பையும் அமைதியையும் போதித்துக் கொண்டிருக்கும் மத்ர ஸாக்களை தீவிரவாதக் கூடங்கள் என கொச்சைப்படுத்துபவர்களை என்ன வென்று சொல்வது?

## பட்டம், பதவியைத் துறந்தவர்கள்.

*12.8.1920* அன்று காங்கிரஸ் தலைவர்கள் முஹம்மதலி, ஷவ்கத் அலி, காந்தி ஆகியோர் கலந்து கொண்ட பிரம்மாண்ட பொதுக் கூட்டம் திருவல்லிக்கேனி கடற் கரையில் நடைபெற்றது. மறுநாள் *1381920* அன்று திருவல்லிக்கேனி ஜும்ஆ மசூதியில் பெரும் திரளாக கூடியிருந்த முஸ்லிம்கள் மத்தியில் காந்தி உரை நிகழ்த்தினார்.

பட்டம் உள்ளவர்கள் பட்டத்தைக் கைவிட வேண்டும்; கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் தமது பதவி யிலிருந்து விலக வேண்டும்; வழக்கறிஞர்கள் தம் தொழிலை நிறுத்தி விட வேண்டும்; பள்ளிப் பிள்ளைகள் அரசின் படிப்பை உதறித் தள்ள வேண்டும்; தலைவர்கள் மோட்டார் வாகனங்களை ஒதுக்கி விட வேண்டும். கதர் ஆடை அணிந்து வெறுங்காலுடன் நடந்து வர வேண்டும். இவற்றையெல்லாம் செய்யாமல் அரசு அலுவலர்களும் சிப்பாய்களும் நம் பின்னால் அணிவகுப்பதையோ உழவர்கள் வரிகொடா இயக்கத்தில் பங்கெடுப்பதையோ கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. எனவே பட்டம் பதவிகளைத் துறந்து வெளியேறுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மறு நாள் *14.8.1920* ஆம் தேதியன்று வேலூர் மாவட்டம் ஆம்பூரில் கிலாபத் இயக்க மாநாடு. ஆம்பூர் வந்த தலைவர்களுக்கு அங்கு ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. முதல் நாள் காந்தி திருவல்லிக்கேணி மசூதியில் இட்ட கட்டளையை, மறுநாளே கடைபிடித்துக் காத்திருந்தார்கள் ஆம்பூர் நகர முஸ்லிம்கள்.

ஆம்பூர் நகரில் கௌரவ மாஜிஸ் திரேட்டுகளாக பணியாற்றி வந்த ஹயாத் பாஷா சாஹிப், மாலிக் அப்துர் ரஹ்மான் சாஹிப், முஹம்மது காசிம் சாஹிப், ஹெச்.என்.செங்கலப்பா ஆகியோர் தமது பதவியின் ராஜினாமா கடிதத்தை அரசுக்கு அனுப்பி விட்டு வந்து காந்தியை வரவேற்றனர்.[46]

## ஜமால் இப்ராஹீம் சாஹிப்

தமிழக முஸ்லிம்களின் அரசியலில் முக்கியத்துவத்தோடு வலம் வந்தவர் திருச்சி ஜமால் முஹம்மது சாஹிப். விடுதலை வரலாற்றில் வள்ளலாகவும் கல்வி நிறுவனங்களின் தந்தையாகவும் கருதப்பட்டவர். இவரது சகோதரர் ஜமால் இப்ராஹீம் சாஹிப். இவரும் ஆங்கில அரசில் கௌரவ மாஜிஸ்திரேட்டாக பணியாற்றி வந்தார். காங்கிரசின் அறிவிப்பை ஏற்று *1920* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார்.[47]

---

46. (இந்திய விடுதலை போரும், தமிழக முஸ்லிம்களும் - நா.முகம்மது செரீபு பக்.87)
47. (தி.நி.ப, பேராசிரியர் அப்துஸ் ஸமது பக். 84-85)

## பீர் முஹம்மது பாவலர்

விடுதலை நெருப்புக்கு தம் கவிதை வரிகளால் கனல் வார்த்தவர் கம்பம் பீர் முஹம்மது பாவலர். காந்தியின் கதர் இயக்கத்திற்காக தன் காலம் முழுவதையும் அர்ப்பணித்தவர். திருச்சி கல்லூரியில் இண்டர் மீடியட் வரை படித்த பாவலர், ஆங்கில அரசின் காவல் துறையில் துணை ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார்.(Sub Inspector)

மதுரை மீனாட்சியம்மன் கோவில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கை கையிலெடுத்து குற்ற வாளிகளைக் கண்டுபிடித்து குறுகிய காலத்தில் திறமையான அதிகாரி என்று பெயரெடுத்தார்.

இந்த நிலையில் நாட்டு விடுதலைக் காக உங்கள் பட்டம் பதவிகளைத் துறந்து விடுங்கள் என்ற அறிவிப்பைக் கேட்டு, *1923* ஆம் ஆண்டு தனது பதவியைத் துறந்தார். அதன் பிறகு அவரைத் தேடி வந்த தாசில்தார் பதவியையும் வெறுத்து ஒதுக்கினார். அதன் பின் ஆங்கிலேயருக்கு எதிரான தீவிரப் பேச்சுப் போராளியாக உருவெடுத்தார்.

அவரது பேச்சினால் எழும் பிரளயத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் பேசுவதற்கு தடை விதித்தனர். உடனே வாயில் துணியைக் கட்டிக் கொண்டு நடிகராக மாறினார். தன் உடல் மொழியால் மக்களுக்கு உணர்ச்சியூட்டினார்.

*1941* ஆம் ஆண்டு தனி நபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டார். அவருடன் மைதீன் பிள்ளை இராவுத்தர், எஸ்.எஸ். மரைக்காயர், போடி கான் முஹம்மது புலவர், கே.சி. முஹம்மது இஸ்மாயீல், வழக்கறிஞர் எம்.கே. மீரான் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

ஆறு மாத சிறைத் தண்டனையும் நூறு ரூபாய் அபாராதமும் விதித்து தீர்ப்பளித்தார் நீதிபதி. அபராதம் கட்ட மறுத்ததால் ஒராண்டு காலம் அலிப்பூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இவரது எழுத்தின் வலிமை எப்படிப்பட்டது என்பதை ஆங்கிலேயர்எடுத்த நடவடிக்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம். பாவலரின் *13* கையெழுத்துப் பிரதிகள் ஒன்றன்பின் ஒன்றாக அச்சேறுவதற்கு முன்பே தேசத்துரோக புத்தகங்கள் என்று முத்திரை குத்தப்பட்டு அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டு நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டது.[48]

48. ((வி.போ.மு) வி.என்.சாமி பக் 649-654,
(இ.வி.போ.த.மு) நா.முகம்மது செரீபு பக்.123,
(தி.நி.ப) பேராசிரியர் அப்துஸ் ஸமது பக். 95-96)

## தாவூத் பாஷா

தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தின் சார்பில் தாருல் இஸ்லாம் எனும் மாத இதழைத் துவக்கி அதன் ஆசிரியராக இருந்தவர். குத்பா உரைகள் தமிழிலே நிகழ்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதால் முஸ்லிம்களிடம் கலகக்காரராக அறியப்பட்டவர். தஞ்சை மணியாற்றங்கரையில் உள்ள குக்கிராமத்தில் பிறந்த பா.தாவூத் பாஷா அவர்கள்.

இஸ்லாமிய மார்க்க விஷயங்களில் அதிக ஈடுபாடு காட்டிய தாவூத் பாஷா அரசியலிலும் அதே அளவிற்கு ஈடுபாடு கொண்டவர். இவர் சென்னை நகர காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோதுதான் மா.பொ.சிவஞானம் பொதுச் செயலாளராக இருந்தார்.

1917 ஆம் ஆண்டு துணை நீதிபதியாகப் பொறுப்பேற்று பணி யாற்றிக் கொண்டிருந்த தாவூத் பாஷா மாவட்டத் துணைக் கலெக்டராக பதவி உயர்வு பெறும் நேரத்தில் விடுதலை உணர்வால் உந்தப்பட்டு தனது பதவியை ராஜினாமா செய்தார். அதன் பின் நாட்டுப் பணியில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.[49]

## ஏ.டி.கே.ஷெர்வானி

உத்திரபிரதேச மாநிலம் அலிகர் மாவட்டம் பிலோனா கிராமத்தின் மிகப்பெரிய ஜமீன் குடும்பம். விடுதலை வேட்கையை மிகுந்த வீரியத்தோடு வெளிப்படுத்திய ஷெர்வானி குடும்பம்.

குடும்பத்தில் மூத்தவர் தஸ்ஸதக் அகமத் கான் ஷெர்வானி (ஏ.டி.கே.ஷெர்வானி) லண்டனில் நேருவுடன் பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞராகப் பணியாற்றியவர். 1914 ஆம் ஆண்டு நாடு திரும்பிய திலிருந்து காங்கிரசே தன் கதியென்று மாறிப் போனவர். ஒத்துழையாமை இயக்கத்தில் அவர் காட்டிய ஈடுபாட்டிற்காக ஆங்கில அரசிடமிருந்து சிறைத் தண்டனையைப் பரிசாகப் பெற்றார்.

ஏ.டி.கே.வின் அடுத்த தம்பி நிசார் அஹம்து கான் ஷெர்வானி தபால் தந்தி துறையில் நல்ல ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒத்துழையாமை இயக்கத்தை ஒத்துக் கொண்டதற்காக பொன்முட்டையிடும் வாத்தைப் பலி கொடுத்தார். பதவியைத் துறந்ததற்காக பிரிட்டிஷாரால் பலவிதத் துன்பங்களுக்கு ஆட்படுத்தப்பட்டார்.

ஏனெனில் ஒத்துழையாமை இயக்க அழைப்பின் பேரில் ஆங்கில அரசின் பதவியை முதன் முதலாக ராஜினாமா செய்தவர் நிசார் அஹமத் கான் ஆவார்.

---

49. ((வி.போ.மு) வி.என்.சாமி பக் 591-598
(இ.வி.போ.த.மு) நா.முகம்மது செரீபு பக்.123)

அதே நேரத்தில் அலிகரில், இண்டர் மீடியட் படித்துக் கொண்டிருந்த ஏ.டி.கே. வின் இரண்டாவது தம்பி ஃபிடா அஹமத் கான் ஷெர்வானி போராட்ட அறைகூவலில் அவரும் தனது கல்லூரிப் படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டு வெளியேறி விட்டார்.[50]

இவை உதாரணத்திற்கு மட்டுமே இப்படி இன்னும் பல...

50. ((வி.போ.மு) வி.என்.சாமி பக் 258)

# 4

# பணப் பை

பிரிட்டிஷ் அரசு சூரியன் மறையாத சாம்ராஜ்யம். அந்தப் பேரரசை எதிர்த்து நின்று போரிடுவது அவ்வளவு எளிதானதல்ல. அதற்காக இயக்கம் நடத்தவேண்டும். கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். முறையாகத் திட்டமிட வேண்டும். எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டும். அதை இறுதி வரை கொண்டு சேர்க்க வேண்டும். இவையனைத்தையும் செய்து முடிக்க இலட்ச இலட்சமாகப் பணத்தை வாரி இறைக்க வேண்டும். அவ்வளவு பணத்திற்கு எங்கே செல்வது? என்று தேசத் தலைவர்கள் திணறிக் கொண்டிருந்தபோது அவர்களின் திணறலைத் தீர்த்து வைத்தவர்களும் முஸ்லிம்கள்தான்.

செல்வந்தர்கள் மட்டுமின்றி ஏழை முஸ்லிம்களும் கூட தங்களின் சக்திக்கேற்ப தமது செல்வத்தை தாராளமாக வாரி வழங்கினார்கள்.

உதாரணத்திற்கு சில:

## அப்துல்லாஹ்வின் 200

1887ஆம் ஆண்டு சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய மகாசபைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி பத்ருத்தீன் தயாப்ஜி தலைமை தாங்கினார். தலைமையுரையாற்றிய தயாப்ஜி, கட்சிப் பணிகளுக்காக பொருளுதவி செய்யுமாறு கோரிக்கை வைத்தார்.

உடனே தமிழகத்தைச் சேர்ந்த முஹம்மது அப்துல்லா பாதுஷா இரு நூறு ரூபாய் வழங்கினார்.[51]

இருநூறு என்றதும் ஏளனமாகக் கருதிவிடக் கூடாது. அவர் கொடுத்த காலத்தில் அதற்கான மதிப்பு அதிகம். நூறு ரூபாய் செலவில் பிரம்மாண்டமான திருமணங்கள் நடந்த காலம் அது. முக்கியத்துவம் வாய்ந்த குடியிருப்புப் பகுதிகளில் நூறு ரூபாய் கொடுத்து சொந்தமாக வீடுகளும் நிலங்களும் வாங்கப்பட்ட காலம். ஐந்து ரூபாய்க்கு ஒரு பவுன் தங்கநகை விற்பனை செய்யப்பட்ட காலம். எனவே இருநூறு ரூபாய் என்பது ஒரு நடுத்தர வர்க்கத்து மனிதன் தன் வாழ்நாள் உழைப்பையே கொடுத்ததற்குச் சமம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

51. (விடுதலைப் போரில் முஸ்லிம்கள், வி.என்.சாமி பக் 431-439)

## முஸ்லிம் வாலிபர் சங்கம்

1921 ஆம் ஆண்டு காந்தி தமிழகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். செப்டம்பர் 21 இல் மதுரை வந்த போது அவரிடம் போராட்ட நிதியாக பணமுடிப்பு ஒன்று வழங்கப்பட்டது. வழங்கியவர்கள் மதுரை முஸ்லிம் வாலிப சங்கத் தோழர்கள்.(52)

## சென்னை பிராட்வே யூனியன்

1927ல் சென்னை மக்கள் பூங்காவிலுள்ளஎஸ்.ஐ.ஏ.ஏ. மைதானத்தில்நடந்த பொதுக்கூட்டத்தில் பணமுடிப்பு வழங்கப்பட்டது. சென்னை டிராம்வே யூனியன் தொழிலாளர்களிடம் திரட்டப்பட்ட போராட்ட நிதியை அதன் தலைவர் எஸ்.ஏ. ஷாஃபி முஹம்மது காந்தியிடம் வழங்கினார்.(53)

## கோம்பை மக்களின் சிறுநிதி

1934ல் பிப்ரவரி மாதம் ஒன்பதாம் தேதி, காந்தியடிகள் தேனி மாவட்டம் கோம்பைக்கு வந்தார். ஏழ்மை வாழ்வும் எளிமைக் கோலமும் கொண்ட அவ்வூர் முஸ்லிம்கள் காந்தியைச் சந்தித்து, இங்குள்ள முப்பது குடும்பத்தார் சார்பில் இருபது ரூபாய் நிதி திரட்டியிருக்கிறோம். இந்தச் சிறு நிதியை ஹரிஜன நிதிக்காக நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று காந்தியிடம் வழங்கினர்.(54)

## ஆங்கூர் ராவுத்தர்

அதே பயணத்தில் கம்பம் வந்தபோது ஆங்கூர் இராவுத்தர் என்றழைக்கப்படும் சி.ஏ.அப்துர் ரஹ்மான் அவர்களிடமிருந்து ஹரிஜன நிதிக்காக பெரும் பணத்தை காந்திஜி பெற்றுச் சென்றார்.(55)

## ராஜகிரி முஸ்லிம்கள்

1920 ஆகஸ்ட் 16ல் கும்பகோணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தஞ்சை மாவட்டம் ராஜகிரி முஸ்லிம்களிடம் திரட்டப்பட்ட தொகையை அப்துல் மஜீத் சாஹிப் கிலாபத் நிதியாக காந்தியிடம் ஒப்படைத்தார்.(56)

## நவாப் அப்துல் ஹக்கீம்

1933 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் தேதி வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஜில்லா போர்டின் தலைவர் நவாப் சி. அப்துல் ஹகீம் அவர்களைப் பார்த்து, அரிஜன நிதி எங்கே? பீகார் பூகம்ப நிதி எங்கே? என்று காந்தி கேட்டார்.

---

52. (இ.வி.போ.த.மு, பக் 54)
53. (இ.வி.போ.த.மு, பக் 54)
54. (வி.போ.த.மு, பக் 57)
55. (இ.வி.போ.த.மு, பக் 116).
56. (வி.போ.த.மு, பக் 88)

நாங்கள்அதற்காக வசூலிக்கவில்லையே என்ற பதிலைக் கேட்ட காந்தி, மேஜையை ஓங்கி தட்டியவராக பணம் வராமல் இங்கிருந்து நான் புறப்படமாட்டேன் என்றார். உடனே என் பங்காக இருநூறு ரூபாய் தருகிறேன் என்றார் நவாப் அப்துல் ஹகீம். அப்போதும் திருப்தியடையாத காந்தி, மேற்கொண்டு வாங்க வேண்டியதை நான் மதராஸ் வரும்போது உங்களிடம் வாங்கிக் கொள்கிறேன் என்று கூறிச் சென்றார்.(57)

1938ல் இவரது மறைவுக்காக தமிழக சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை முன்மொழிந்த மாகாணப் பிரதமர் (அப்போது பிரதமர்தான் முதல்வர் இல்லை) ராஜாஜி அன்றிலிருந்து பதினேழு ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு நிகழ்வை நினைவு கூர்ந்தார்.

மலபார் மாப்பிள்ளாக்களின் புரட்சியின்போது அப்துல் ஹகீம் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்டேன். சாதி மத வேறுபாடு காட்டாமல் எந்தவொரு சாக்குப் போக்கும் சொல்லாமல் உடனடியாக ஒரு பெருந்தொகையை அள்ளிக் கொடுத்தார் இந்த வள்ளல் பெருமகன் என வாழ்த்திப் பேசினார் ராஜாஜி.(58)

நவாப் அப்துல் ஹகீமிடம் பணியாற்றியவர் யாகூப் ஹஸன் சேட். இவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர். கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து வகையான போராட்டங்களிலும் பங்கெடுத்தவர்.அதற்காக பலமுறை சிறைக் கொடுமைகளை அனுபவித்தவர்.

இவரது வருமானம்தான் குடும்பத்தின் ஆதாரம். இந்நிலையி யாகூப் ஹஸன் ஒவ்வொரு முறை சிறை செல்லும் போதும் அவரது குடும்பத்தினர் பெரும் சிரமத்திற்கு ஆளாயினர்.

இதை அறிந்த நவாப் அப்துல் ஹகீம் அவர்கள் இவர் நாட்டுக்காக சிறைக் கொடுமையைச் சுமக்கும் போதெல்லாம் அவரது குடும்பத்தின் பொருள் சுமையை நான் சுமந்து கொள்கிறேன் என்று சுமந்து கொண்டார். தனக்காக உழைத்தபோது கொடுத்த பணத்தை விட நாட்டுக்காக உழைத்தபோது அதிகம் கொடுத்தார். இது யாகூபின் குடும்பத்திற்கு நவாப் செய்த உதவியல்ல! நாட்டின் விடுதலைக்காக அவர் செய்த பொருளுதவி.(59)

---

57. (வி.போ.த.மு, பக் 794)
58. (வி.போ.த.மு, பக் 795)
59. (வி.போ.த.மு, பக் 792)

## வெற்றுக் காசோலை

காந்தியின் தலைமையில் கிலாபத் இயக்க நிதி திரட்டுவதற்காக அலி சகோதரர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்த காலம். அப்போது திருச்சியைச் சேர்ந்த மிகப் பெரும் தோல் வணிகரும் திருச்சியில் இன்று கம்பீரமாக ஜொலித்துக் கொண்டிருக்கும் ஜமால் முஹம்மது கல்லூரியின் நிறுவனர்கள் இருவரில் ஒருவரும் இந்திய சாம்பர்ஸ் ஆப் காமர்ஸின் தலைவருமான(Chamber of Commerce) ஜமால் முஹம்மது இராவுத்தரை தலைவர்கள் அனைவரும் கூட்டாக வந்து சந்தித்தனர். அவருடைய பங்காக எவ்வளவு தரப் போகிறாரோ என்று எதிர்பார்த்திருந்த நேரத்தில் யாரும் எதிர்பார்க்காத ஒரு காரியத்தை அவர் செய்தார்.

நிரப்பப்படாத வெற்றுக் காசோலை (Blank Cheque)ஒன்றை எடுத்து அதில் கையெழுத்திட்டு முன்னால் இருந்த ராஜாஜியிடம் நீட்டினார். அவ்வளவு தான் அங்கிருந்த அனைவரும் ஆடிப் போய் விட்டனர். எவ்வளவு பெரிய செல்வந்தராக இருந்தாலும் தான் கொடுக்கும் பணம் எவ்வளவு என்பதை அறிந்துதான் கொடுப்பார்கள். ஆனால் இவர்? எனது செல்வத்தில் எவ்வளவு தேவையோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார். வெற்றுக் காசோலைக்கு அர்த்தம் அதுதானே![60]

அவரது வள்ளல் தன்மையைப் பார்த்து வாயடைத்துப் போன காந்தி, ஜி.டி.பிர்லாகூட இப்படி வெறுங்காசோலையைத் தந்ததில்லை என்றார். அந்தக் காசோலையில், தலைவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிரப்பி எடுத்துக் கொண்டதாக தகவலறிந்தவர்கள் கூறுகிறார்கள்.[61]

1931ல் லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் காந்தியுடன் இவரும் கலந்து கொண்டார். அதுவும் காந்தியின் வால் பிடித்து ஒட்டிக் கொண்டு அல்ல. பிரிட்டீஷ் பிரதமரிடமிருந்து நேரடியாக வந்த அழைப்பின் பேரில் பங்கெடுத்தார்.

பிரிட்டீஷ் அரசின் மீதான மக்களின் குமுறல்களையும் குற்றச் சாட்டுகளையும் அங்கே பதிவு செய்தார். குறிப்பாக இங்கிலாந்தின் பொருளாதார நடவடிக்கைகளை விமர்சித்தார். இந்தியாவின் இராணுவச் செலவுகளை அதிகரித்துக் கொண்டே செல்வது பெரும் ஆபத்தானது. அதைச் சரி செய்வதற்காக மக்களின் தலையில் வரிச் சுமை ஏற்றப்படுகிறது. எனவே அதை இங்கிலாந்து அரசு மாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.

மாகாண சட்ட மன்றங்களில் இயற்றப்படும் தீர்மானங்களை மீறுவது, தங்களுக்குப் பிடித்தமில்லாததை இரத்து செய்வது போன்ற

60. (இ.வி.போ.த.மு, பக் 118 முப்பெரும் வள்ளல்கள் வள்ளல் ஜமால் முஹம்மது அவர்களது பேரர் கு.ஜமால் எழுதியது)
61. (இ.வி.போ.த.மு, பக் 118)

அத்து மீறும் நடவடிக்கைககளை ஆங்கில அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.(62)

(வட்டமேஜை மாநாடு என்றாலே அதில் காந்தி பேசப்படுகிறார். மாநாட்டில் பேசிய ஜமால் முஹம்மது மக்களால் அறிந்து கொள்ளப்படாதவராகவே இன்னமும் இருக்கிறார்).

## சுதேசிக் கப்பல்

கடல் வணிகத்தில் ஆங்கில ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக, சொந்தமாகக் கப்பல் வாங்கி வணிகம் செய்யலாம் என முடிவெடுத்தார் வ.உ.சிதம்பரம் பிள்ளை. அதற்கென ஒரு குழு அமைத்து சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி என்ற பெயரில் 16111906ல் அது பதிவு செய்யப்பட்டது. இக்கம்பெனியின் பொருளாதார முதுகெலும்பாகத் திகழ்ந்தவர்கள் முஸ்லிம்களே.

ஒரு பங்குக்கு 25 ரூபாய் வீதம் 40,000 பங்குகள் பெற்று நிறுவனத்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. அதில் ஹாஜி. ஏ.ஆர். பக்கீர் முஹம்மது சேட் என்ற ஒரேயொரு முஸ்லிம் வணிகர் மட்டுமே தனது கம்பெனியின் சார்பாக இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள எட்டாயிரம் பங்குகளை வாங்கினார்.

அவர்தான் கம்பெனியின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இது குறித்து 20.10.1906 அன்று பாரதியார் தனது இந்தியா பத்திரிக்கையில் இவ்வாறு அறிவிப்பு வெளியிட்டார்.

இந்தக் கம்பெனியின் பிரசிடெண்ட் மிஸ்டர் பாலவனந்தம் ஜமீந்தார், மிஸ்டர் பாண்டித் தேவர், மெஸர்ஸ் ஹாஜி. பக்கீர் முகம்மது சேட் கம்பெனியாரே செக்ரடெரிகள், அசிஸ்டண்ட் செகரடெரியாக தூத்துக்குடி வக்கீல் மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பாரதியார் எழுதினார்.(63)

வ.உ.சி. தன் கவிதைத் தொகுப்பிலும் பக்கீர் முஹம்மதைப் பற்றி உயர்வாகக் குறிப்பிடுகிறார். கப்பல் கம்பெனியின் நிறுவனர்கள் அனைவரும் இந்தத் தொழிலில் அனுபவம் இல்லாத புதியவர்கள். எனவே நமது பணமும் அதில் செல்லும் மக்களின் பயணமும் பாதுகாப்பாக அமையுமா என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டது. அதனால் கப்பல் கம்பெனிக்கு யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. இந்நிலையில் அந்த அச்சத்தைப் போக்கி மக்கள் வருவதற்கும் காரணமாக இருந்தவர் பக்கீர் முஹம்மது தான் என்கிறார் வ.உ.சி.

62. (பேராசிரியர் டாக்டர் கே.எஸ்.உதுமான் முகையதீன் சம உரிமை மாத இதழ்-ஜூன்2010 இ.வி.போ.த.மு, பக் 118 முப்பெரும் வள்ளல்கள்)

63. (இந்தியா பத்திரிக்கை 20-10-1906 பாரதியார் தி.நி.ப பக் 107,108)

அணுகிய தந்தாள் ஆஷியாட்டிக் கப்பல்
நணுகிய சரக்கெல்லாம் நயமுறை ஏற்றினர்
பாக்கிய மிகுந்த பக்கிரி முகம்மதை
வாக்கின் வலிமையால் வசப்படச் செய்தான்
வணிகர் பலரையும் வருந்தி அவனிலம்
துணிவோடு சுதேசிய நாவாய்ச் சங்க
நன்மலர் கண்டேன்.(64)

ஆங்கிலேயர்கள் சுதேசிக் கப்பலின் போட்டியைச் சமாளிப்பதற்காக சலுகைகளை வாரி இறைத்தனர். பயணக் கட்டணத்தைக் குறைத்தனர். இந்தியா மற்றும் இலங்கையில் ஆங்கிலேயக் கப்பலில் பயணிப்பவர்களுக்கும் சரக்குகளை அனுப்புகிறவர்களுக்கும் இரயில் பயணம் இலவசம் என்று அறிவித்தனர். பிரிட்டீஷ் பேரரசு எனும் ஜாம்பவானின் வணிக நிறுவனத்தோடு போட்டியிட்டு ஜெயிக்க முடியாத சுதேசிக் கப்பலும் நேவிகேஷன் கம்பெனியும் நஷ்டத்தில் வீழ்ந்தது.

தூத்துக்குடியிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட கப்பலின் பயணம் வெகு சீக்கிரத்திலே முடிந்து போனது. அதில் பெரும்பான்மையான பங்குகளை வாங்கிய பக்கீர் முஹம்மது அவர்கள் பெரும் இழப்பைச் சந்தித்தார். அதனால் அவர் அடைந்த துன்பத்தை வ.உ.சி.யின் வார்த்தைகளில் சொன்னால்...

எழுப்பிய பணமெல்லாம் இழுத்த கப்பல்
பார்த்தால் கணக்கை பயந்தான் பக்கிரி
ஆர்த்தான் இடித்தான் அழுதான் படுத்தான்

என்ற வரிகள் கூறுகின்றன.

அழுது துடிக்கும் அளவுக்கு அளவு கடந்த நஷ்டத்தை அனுபவித்தார். ஆங்கில ஆதிக்கத்தை நாட்டிலிருந்து அகற்ற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஏற்பட்ட இழப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது.

தேனி, கம்பம் உத்தமபாளையம் பகுதிகளில் கப்பல் கம்பெனிக்கு பங்கு சேர்ப்பதற்காக சுப்பிரமணிய சிவா, சர்க்கரைச் செட்டியார், வ.உ.சி. ஆகியோர் வந்த போது கோம்பையைச் சேர்ந்த உ.ம.சே.முஹைதீன் பிள்ளை சாஹிபு அவர்கள் வந்தவர்களை தமது இல்லத்தில் தங்க

64. ((இ.வி.போ.த.மு) - பக் 95.)

வைத்து அக்கம் பக்கத்து தனவந்தர்கள் பலரையும் பங்குதாரர்களாக சேர்த்து விட்டார்.(65)

ஏ.எம்.செய்யது இப்ராஹீம், திண்டுக்கல் ஏ. அசன் உசைன் இராவுத்தர், இராமநாதபுரம் சீனு அசனுசைன் இராவுத்தர் ஆகியோர் நேவிகேஷன்கம்பெனியின் இயக்குனர்களாக இருந்துள்ளனர். இதிலிருந்தே சுதேசி கப்பலில் முஸ்லிம்களின் பங்களிப்பை உணர்ந்து கொள்ளலாம்.(66)

## அமீர் ஹம்ஸா

போராட்டத் தேவைகளுக்காக புதுப் புது வகைகளில் நிதி திரட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த வகையில் 1943ல் ரங்கூனில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நேதாஜிக்கு அணிவிக்கப்பட்ட மாலைகள் போராட்ட நிதிக்காக ஏலம் விடப்பட்டது. அதில் ஒரு மாலையை மூன்று லட்ச ரூபாய் கொடுத்து ஏலத்தில் எடுத்தவர் சென்னையில் வாழும் அமீர் ஹம்ஸா.

இவர் நேதாஜியின் நூல்களால் கவரப்பட்டு சுதந்திரப் போரில் குதித்தவர். தனது 21 வயதில் இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்து நாட்டுக்காக பல போர்க்களங்களை சந்தித்தவர். இவர் ஏலத்திற்குக் கொடுத்த தொகை மாலைக்கு உரியதல்ல. மகத்தான விடுதலைக்காகக் கொடுக்கப்பட்டது. (அதை வாங்காமலே இவர் கொடுத்திருக்க வேண்டும் என்பதே நம் தனிப்பட்ட கருத்து)(67)

## ஒரு கோடியும் உமர் சுபஹானியும்

1921 மார்ச் 31 அன்று அகில இந்திய காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் விஜயவாடாவில் கூடியது. அதில் போராட்ட வகைக்காக திலகர் சுயராஜ்ய நிதி என்ற பெயரில் ஒரு கோடி ரூபாய் நிதியும், கட்சியில் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்த்திட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

தேசத்தின் பெருங்கொண்ட பணக்காரர்கள் பலரும் தமது பங்கை வழங்கிக் கொண்டிருந்தனர். ஜெயநாராயணன் இந்து முல்தானி 5 லட்சம், ஏ.பி. காட்ரெஜ் 3 லட்சம், ஆனந்திலால் போதார் 2 லட்சம், சேட் ஜமன்லால் பஜாஜ் ஒரு லட்சம் என பணம் வசூலாகிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் மும்பையைச் சேர்ந்த பஞ்சாலை அதிபர் உமர் சுபஹானி நேரடியாக காந்தியைச் சந்தித்து ஒரு காசோலையை வழங்கினார். அதில் எழுதப்பட்டிருந்த தொகையைப் பார்த்த காந்தி ஒரு

65. (தி.நி.ப பக் 106)
66. (இ.வி.போ.த.மு, பக் 96)

நிமிடம் இமை கொட்டவே மறந்திருப்பார். ஏனெனில் இந்தியா முழுவதும் திரட்ட வேண்டும் என்று திட்டமிடப்பட்ட தொகை மொத்தத்தையும் அவர் ஒருவரே அதில் எழுதியிருந்தார்.

அவரது வள்ளல் தன்மையைப் பார்த்து வியந்து போன காந்தி சொன்னார், இந்த நிதியில் நாட்டு மக்கள் அனைவருடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், ஆகையால் நீங்கள் கொடுக்க விரும்பும் பணத்தை கொஞ்சம் குறைத்துக் கொடுங்கள் என்றார்.

சென்னையில் அச்சிடப்பட்ட ஆனந்த சுதந்திரம் என்ற நூலின் ஆசிரியர் உதியன் தனது நூலில் இதை நம்ப முடியாத உண்மை என்று வர்ணிக்கிறார்.

அதன் பிறகு நிதி திரட்டுவதற்காக காந்தி மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் உமர் சுபஹானியும் ஒருவராகசேர்த்துக் கொள்ளப்பட்டார். குறிப்பாக அதே ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தமிழகப் பயணத்தில் ராஜாஜி, டி.என்.எஸ்.ராஜன், யாகூப் ஹஸன் ஆகியோருடன் உமர் சுபஹானியும் தமிழகத்திற்கு வருகை தந்தார்.[68]

இதைக் கேள்விப்பட்டு ஆங்கில அரசு கொடுத்த நெருக்கடியால், 3,64,00,000 (மூன்று கோடியே அறுபத்தி நான்கு லட்சம்) ரூபாய் அவருக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதை உமர் சுபஹானியின் சகோதரி, பாத்திமா இஸ்மாயீல் மும்பையில் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில்தெரிவித்தார்.[69]

## வள்ளல் ஹபீப்

1943 ஜூலை 2. நேதாஜி பிரகடனம் செய்த ஆஸாத் ஹிந்த் சுதந்திர இந்தியா எனும் லட்சியத்தை வென்றெடுக்க நிதி திரட்டும் நிகழ்ச்சி ஒன்று ரங்கூனில் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய நேதாஜி மக்களிடம் உதவி கேட்டு கோரிக்கை வைத்தார். உடனே கூட்டத்திற்கு வந்திருந்த வணிகர்கள் கூடி எங்கள் வருமானத்தில் பத்து சதவீதத்தை ஆஸாத் ஹிந்துக்காக அர்ப்பணிக்கிறோம் என்றனர்.

உடனே நேதாஜி நாட்டுக்காக இரத்தம் சிந்தும் நமது வீரர்கள் சதவீதத்தில் கணக்குப் பார்த்தா சிந்துகின்றனர்.? பணம் கொடுப்பவர்கள் சதவிகிதத்தில் கணக்குப்போடுகிறீர்களே என்று காட்டமாகக் கேட்டார். அதற்கிடையில் மேடைக்கு வந்தார் ஒரு முஸ்லிம் பெரியவர், நேதாஜியின் கையில் ஒரு சீட்டைத் திணித்தார். வாங்கிப் பார்த்தவர் வார்த்தைகளே வராமல் வாயடைத்துப் போனார்.

68. (வி.போ.மு பக் 235-236 தி.நி.ப பக் 104,105
ஒரு துணி வியாபாரியின் கதை நிஜாமுத்தீன் ஜமாலி சிந்தனைச் சரம் நவம்பர் 1997 பக் 22,23
ஆனந்த சுதந்திரம் உதியன் 2006 பக் 188)

69. (இ.வி.போ.த.மு, பக் 61)

அப்படி என்ன எழுதப்பட்டிருந்தது என்று கேட்கிறீர்களா? ரங்கூன் நகரில் எனக்குச் சொந்தமான ஒரு கோடி ரூபாய் சொத்துக்களை ஆஸாத் ஹிந்துக்காக அர்ப்பணம் செய்கிறேன் என்று எழுதியிருந்தார். அந்தப் பெரியவர். வரலாற்றிலே வள்ளல் என்றும் நேதாஜியால் ஹிந்த் சேவக் (இந்தியாவின் சேவகர்) என்றும் வர்ணிக்கப்பட்ட முஹம்மது ஹபீப் அவர்கள்தான் அந்தப் புகழுக்கும் பாராட்டுக்கும் சொந்தக்காரர்.[70]

இதுபோல வரலாற்று ஏடுகளில் ஒளிந்து கிடக்கும் தகவல்களெல்லாம் நமக்குச் சொல்கிற உண்மை என்னவென்றால் இந்தியவிடுதலைப் போர் வரலாற்றில் பொருளாதார முதுகெலும்பாக திகழ்ந்தவர்கள் முஸ்லிம்களே என்ற உண்மையைத்தான்.

70. (நேதாஜியின் வீரப் போர் ஜெய சுப்பிரமணியம் பாகம் - 2 பக் 181 தி.நி.ப பக் 101)

## 5

# மாப்ளா முஸ்லிம்களும் மகத்தான தியாகங்களும்

விடுதலை வரலாற்றில் வீரத்தின் விளைநிலமாய் ஆங்கிலேயர்களின் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்தவர்கள் கேரளத்து மாப்ளா முஸ்லிம்கள். மாப்பிள்ளா என்ற பெயரின் பின்னணி குறித்து பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. வெளியூரிலிருந்து வந்து மலையாளப் பெண்களை மணந்து கொண்டதால் (நம்மூரில் அழைக்கப்படுவதைப் போல) மாப்பிள்ளை என்றழைக்கப்பட்டதாக சிலர் கூறுகின்றனர்.

அவர்களின் வாழ்விடம் நீர் சூழ்ந்த பகுதி. வணிகமும் ஆரம்பத்தில் கடல் மீதே இருந்திருக்கிறது. அவர்களில் பலரும் அரபு நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக வந்திருந்தனர்; ஆகையால் அரபியில் நீரைக் குறிக்கும் சொல்லான மா வுடன் பிள்ளை சேர்ந்து மாப்பிள்ளையாகவும் பின்னர் அதுவே திரிந்து மாப்ளாவாகவும் ஆனது என்கின்றனர் சிலர்.

மாப்ளாக்கள் கேரளாவின் ஆதிக்க வர்க்கமான நம்பூதிரி, நாயர் எனும் உயர்சாதிப் பார்ப்பனர்களின் நிலங்களை குத்தகைக்குப் பெற்று பயிர் செய்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் கொஞ்சத்தை எடுத்துக் கொண்டு மிச்சத்தை உரிமையாளருக்கு கொடுத்து வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் ஆதிக்க சாதியினரின் அதிகாரம் கைமாறியது. ஆங்கிலேயரை எதிர்த்து நிற்க முடியாது என்று அஞ்சிய பார்ப்பன நம்பூதிரிகள் ஆங்கிலேயர்களுக்கு அடங்கி யிருப்பதாகவும் அவர்களுக்கு செய்ய வேண்டிய அடிமைச் சேவகத்தை அட்சரம் பிசகாமல் செய்து கொடுப்பதாகவும் வாக்களித்தனர். அதை ஏற்றுக் கொண்ட ஆங்கிலேயர்கள் தங்களின் அடிமைப் பணியாளர்களாக அவர்களையே நியமித்தனர்.

குத்தகை நிலங்களின் வரிவிகிதத்தை மாற்றியமைத்தனர். உழைத்தவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்ற வகையில் அவனது இரத்தமும், வியர்வையும் ஒட்ட உறிஞ்சப்பட்டது. உறிஞ்சும் பொறுப்பு ஜெம்மிகளிடம் நாயர், நம்பூதிரி ஜமீன்தார்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புது வேலை கிடைத்த மகிழ்ச்சியில் ஜென்மின்களும் ஆட்டம் போட்டனர். உழைக்கும் மக்களின் கஷ்டங்களைப் பற்றி துளி கூட

எண்ணிப் பாராமல் புதிய எஜமானர்களுக்குத் தம் விசுவாசத்தை வெளிப்படுத்துவதிலே குறியாய் இருந்தார்கள் இந்த ஜென்மிகள்.

வருமானம் குறைந்தாலும் சரி. தங்களுக்குச் செலுத்த வேண்டிய வரியை மட்டும் குறைத்து விடக் கூடாது என வற்புறுத்தினார்கள் ஆங்கிலேயர்கள். கடன் வாங்கியாவது வரியைக் கொடு வரி கட்ட முடியாவிட்டால் நிலத்தைக் கொடு. இதுவே அவர்களின் செயல் திட்டமாக இருந்தது.

மலபார் மாவட்ட நிர்வாக ஆவணத்தின்படி 1813 1821க்கு இடைப்பட்ட காலத்தில் வரி கட்ட முடியாத காரணத்தால் விவசாயிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட வயல்களின் எண்ணிக்கை 1225.

மாவட்ட கலெக்டராக இருந்த லோஹன் நடத்திய ஆய்வின்படி மலபாரில் இருந்த குத்தகைதாரர்கள் 7994 பேர். அதில் கடனாளிகள் 4401 பேர். இவர்கள் செலுத்த வேண்டிய தொகை வட்டியுடன் சேர்த்து 17 லட்சம் ரூபாய்.

1862 முதல் 1880 வரையிலான காலகட்டத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் நிலங்களை விட்டும் அப்புறப்படுத்தப்பட்ட விவசாய தினக்கூலிகள் மட்டும் 91,720 பேர்.[71]

ஆங்கிலேயர்களின் வரி விதிப்பில் நிகழ்த்தப்பட்ட கொடுமைக்கு இந்தப் புள்ளி விபரமே போதுமான சான்றாகும்.

அதிகரித்துக் கொண்டே சென்ற இக்கொடுமைகள் முஸ்லிம்களின் பொறுமையைச் சோதித்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக முஸ்லிம்களுக்கும், ஜென்மிகளுக்கும் இடையே உரசல்கள் வெடிக்க ஆரம்பித்தன. பல இடங்களில் அதற்குக் காரணமான ஆங்கிலேயர்களும் தாக்குதலுக்கு உள்ளாயினர்.

ஏறநாடு, செம்பரச் சேரி, பந்திக் காடு, வாண்டூர், வள்ளுவநாடு, பொன்னானி, பாலக்காடு, சிரக்கல், கோட்டயம், குறும்பிரநாடு, கோழிக்கோடு என மாப்பிள்ளாக்கள் வாழ்ந்த மலபார் முழுவதும் பதட்டம் நிறைந்த பகுதியாக மாறியது.

1836ல் துவங்கிய உரசல்கள் 1921ல் தாங்கமுடியத பேரெழுச்சியாக பொங்கி வழிந்தது. மாப்ளாக்கள் இணைந்து புரட்சிப் படையாக உருவெடுத்தனர்.

பள்ளிவாசல்களில் இமாம்கள் தமது உரைகளின் வழியாக, புரட்சியின் வேர்களுக்கு நீர் வார்த்தனர். வரியம் குன்னத்து குன்

71. (1885 கீ.லோகன் மலபார் நீதிபதி தலைமைச் செயலாளருக்கு எழுதியதில் ஜூன் 30/1885,மெட்ராஸ் நீதிமன்ற நடவடிக்கைகள் மெ.நீ.ந1830 ஜூலை 13, 1886 பக்35,
மாப்ளா கிளர்ச்சியும் அதன் தோற்றுவாயும் கான்ராட் உட் அலைகள் வெள்யீட்டகம் 2014 கான்ராட் உட் மொழிபெயர்ப்பு இக்பால் அஹமது பக் 20 )

அஹமது ஹாஜியும், காலத்திங்கல் முஹம்மதும், சித்தி கோயா தங்கலும், இம்பிச்சிக் கோயா தங்கலும் புரட்சிப் படைக்கு தலைமை தாங்கி வழி நடத்தினர்.

வீட்டிலிருந்த கத்திகளும், தெருவில் கிடக்கும் கற்களும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஆயுதங்களாக உருமாறின. காவலர்கள் தாக்கப்பட்டனர். ஆங்கிலேயக் குடியிருப்புகளும், ஜென்மிகளின் வாசஸ்தலங்களும் வரைமுறையின்றி தாக்குதலுக்கு உள்ளாயின.

விவசாயக் கூலிகளுக்கு எதிராக ஜென்மிகளிடமிருந்த பத்திரங்களும் இன்னபிறஆவணங்களும் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆங்கில துரைகளும் அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்த நம்பூதிரி, நாயர்களும் பொதுமக்களால் பிழிந்து எடுக்கப்பட்டனர்.

சுதந்திரப் போர் வரலாறு இவர்களுக்கு இணையான நெஞ்சுரம் கொண்ட போராளிகளைக் கண்டதே இல்லை என்று அடித்துச் சொல்லும் அளவுக்கு மாப்ளாக்களின் மாவீரம் வெளிப்பட்டது. அவர்களின் மதநம்பிக்கையும் அதற்கொரு முக்கிய காரணமாக அமைந்தது .

மாப்ளாக்கள் பள்ளிவாசல்களை வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டும் பயன்படுத்தாமல் போராட்ட களத்தின் தலைமையிடமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அங்கு தான் திட்டங்கள் தீட்டப்பட்டன. புறப்படுவதற்கு முன் சண்டையிலே ஷஹீத்(உயிர் துறக்க வேண்டும்) ஆக வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொள்வார்கள். இறந்தவர்களுக்கு அணிவிக்கப்படுவதைப் போன்று வெண்ணிற ஆடையை அணிந்து கொள்வார்கள். மரண சாசனங்களைச் செய்து கொள்வார்கள். தமது மனைவியரைமணவிலக்கு செய்து விட்டு போருக்குச் செல்லும் மாப்ளாக்களும் இருந்திருக்கின்றனர்.(72)

மாப்ளாக்கள் குறித்து ஆய்வு செய்து லண்டனில் முனைவர் பட்டம் பெற்ற கான்ராட் உட், மாப்ளா கிளர்ச்சியும் அதன் தோற்றுவாயும் என்ற தனது நூலில் எழுதுகிறார்:

மாப்ளாக்கள், ஆயுதம் தரித்து எழுந்து விட்டால் எதிரிகளை அழித்தொழிக்க வேண்டும், தாமும் அதிலே உயிர் துறக்க வேண்டும் ஆகிய இரண்டும்தான் அவர்களின் லட்சியமாக இருக்கும் என்கிறார். மரணத்தை நேசிப்பதே அவர்களின் தனித்தன்மை என்கிறார். சாக முடிவெடுத்தவன் பிறரை எப்படி சாகடிப்பான் என்பதை சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை.(73)

72. (மெட்ராஸ் ஆளுநர் குழு உறுப்பினர் ஜே.டி.சிம். என்பவரின் பதிவேடுகள் மெ.நீ.ந1606-ஏ28 ஆகஸ்ட் 1974, மாப்ளா கிளர்ச்சியும் அதன் தோற்றுவாயும் கான்ராட் உட் அலைகள் வெள்யீட்டகம் 2014 கான்ராட் உட் மொழிபெயர்ப்பு இக்பால் அஹமது பக் 17)

73. (அம்பாத் அய்த்ரோஸின் வாக்குமூலம் 16 மார்ச் 1896 எல்/பி/ஜே/6/422/996/96 பக் 15, மாப்ளா கிளர்ச்சியும் அதன் தோற்றுவாயும் கான்ராட் உட் அலைகள் வெள்யீட்டகம் 2014 கான்ராட் உட் மொழிபெயர்ப்பு இக்பால் அஹமது பக் 18,19)

1921 ஆகஸ்ட் முதல் தேதியன்று குறிப்பிட்ட சில ஜென்மிகளையும் காவல்துறைக் கண்காணிப்பாளர் அம்முவையும் இன்னும் சில அதிகாரிகளையும் காலி செய்வது என்ற திட்டத்தோடு புக்கோட்டூரில் மாப்பிள்ளாக்கள் திரண்டனர். அவர்களின் எண்ணிக்கையும் அவர்களிடம்காணப்பட்ட கொந்தளிப்பும் அரச நிர்வாகத்தை பின்வாங்கச் செய்தது.

நிலைமையை ஆய்வு செய்த மாவட்ட நீதிபதி தாமஸ் அரசின் கைகள் பலமிழந்து வருகின்றன. நிலைமை நம் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. எனவே உடனடியாக சிறப்பு ஆயுதப் படைகளை அனுப்பி வையுங்கள் என்று மாகாணத் தலைமைக்கு தகவல் அனுப்பினார்.(74)

லீன்ஸ்டெர் எனும் படை தயாரானது. 270 அயர்லாந்து வீரர்களைக் கொண்ட அப்படைப் பிரிவு கிளர்ச்சியை அடக்க புறப்பட்டது. பெங்களூரில் இருந்த 90 வீரர்களைக் கொண்ட இந்தியன் பயோனியர் பட்டாலியனும் தயாரானது. ஆகஸ்ட் 14 இல் கோழிக்கோடில் நடந்த அதிகாரிகள் மாநாட்டில் கலகத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன.

அதன்படி மேலும் 80 லீன்ஸ்டெர்கள், 100 ரிசர்வ் காவலர்கள், 60 மலபார் சிறப்பு காவல் படையினர் ஆகியோர் நவீன ஆயுதங்களுடன் திருவரங்காடி வந்திறங்கினர்.(75)

அச்சம் துளியுமின்றி அவர்களை எதிர்கொண்ட மாப்ளாக்களைப் பற்றி கான்ராட் உட் இவ்வாறு வர்ணிக்கிறார்.

கத்தி முனைகள் பொருத்தப்பட்ட துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்தது இராணுவம். அவர்களை எதிர்ப்பதற்காக முன்னேறி வந்த மாப்ளாக்கள் கூட்டம் ஒரு அங்குலம்கூட பின் வாங்கவில்லை என்கிறார். அவர்கள் தமது வாட்களாலும், தடிகளாலும் ராணுவத்தினர்மீது எதிர் தாக்குதல் நடத்தினார்கள். காவல் துறையினர் தமது தோட்டாக்களால் மாப்ளாக்களின் உடலைத் துளைக்க ஆரம்பித்தனர். ஆயினும் அசராமல் நின்று மாப்ளாக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

இன்னொருபுறம் பரப்பங்காடி இரயில் நிலையம் மாப்ளாக்களால் சேதப்படுத்தப்பட்டது. இரயில் பாதையும் தகர்க்கப்பட்டது. காவல் நிலையங்கள் காணாமல் போயின. மாவட்ட ஆட்சித் தலைவர் தாமஸ் தம்மால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறி

74. (மலபார் நீதிபதி மெட்ராஸ் அரசுக்கு எழுதியது 10-8-1921 ஜி.ஆர்.எஃப்.டாட்டன ஹாம் பக் 18, மா.கி.அ.தோ பக் 191).

75. (மலபார் பகுதியின் இராணுவக் கட்டுப்பாட்டுத் தலைவர் கேப்டன் பி.மெக்.என்.ராய்க்கு மலபார் நீதிபதி எழுதியது நடவடிக்கை ஆணை இந்தியா ரகசியம் எல்.ப்.ஜே 6/1782/6735/21,1/22)

இராணுவத்திடம் நிர்வாகத்தை ஒப்படைத்தார். சோர்வடைந்த இராணுவம் ஆகஸ்ட் 21 அன்று பின்வாங்கி கோழிக்கோடு திரும்பியது.[76]

மலபாரின் நான்கு தாலுக்காக்களில் பிரிட்டிஷார் முழுமையாகத் துரத்தியடிக்கப்பட்டனர். அதிகாரம் மாப்ளாக்களின் கைகளுக்கு மாறியது. அலி முஸ்லியார் தலைமையில் சுதந்திர அரசு பிரகடனம் செய்யப்பட்டது. பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கிலாஃபத் கொடிகளை நட்டு வைத்து சுதந்திர அரசின் எல்லைகள் அறிவிக்கப்பட்டன. நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. உளவு அமைப்புகள் மிகச் சிறப்பாக செயல்பட்டன.

ஆங்கிலேயர்களே ஆச்சர்யப்பட்டு பாராட்டும் அளவுக்கு மிக நேர்த்தியாக கவனத்தோடு ஒவ்வொரு துறைகளும் சீரமைக்கப்பட்டன. கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டு குடிமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.

மலபாரின் நான்கு தாலுக்காக்களில் பிரிட்டிஷார் முழுமையாகத் துரத்தியடிக்கப் பட்டனர். அதிகாரம் மாப்ளாக்களின் கைகளுக்கு மாறியது. அலி முஸ்லியார் தலைமையில் சுதந்திர அரசு பிரகடனம் செய்யப்பட்டது. பல்வேறு நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கிலாஃபத் கொடிகளை நட்டு வைத்து சுதந்திர அரசின் எல்லைகள் அறிவிக்கப்பட்டன. நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. உளவு அமைப்புகள் மிகச் சிறப்பாக செயல்பட்டன. ஆங்கிலேயர்களே ஆச்சர்யப்பட்டு பாராட்டும் அளவுக்கு மிக நேர்த்தியாக கவனத்தோடு ஒவ்வொரு துறைகளும் சீரமைக்கப்பட்டன. கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டு குடிமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.[77]

இதற்கிடையில் கம்பெனி அரசு இதை தனக்கேற்பட்ட மிகப்பெரும் அவமானமாகக் கருதியது. படைபலம் கொண்ட மன்னர்களையும், பயிற்சி பெற்ற சிப்பாய்களையும் களத்தில் சந்தித்த ஆங்கிலேயர்களுக்கு எந்தவிதப் பயிற்சியும் இல்லாத, படைபலமும் இல்லாத சாதாரண பொதுமக்கள், அதுவும் கற்களையும் தடிகளையுமே தமது ஆயுதங்களாகக் கொண்டவர்கள் மூலம் ஏற்பட்ட தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஆண்டாண்டு காலமாக அந்தப் பகுதியின் எஜமானர்களும் அதிகார வர்க்கமுமான நம்பூதிரிகளின் முழு ஆதரவு இருந்தும்கூட நம்மால் ஜெயிக்க முடியவில்லையே என்பதை நினைக்க நினைக்க அவர்களுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. எப்படியும் இழந்ததைப் பெற்றே தீருவதென சூளுரைத்தார்கள்.

76. (மலபார் நீதிபதி மெட்ராஸ் அரசுக்கு எழுதியது ஆகஸ்ட் 25,1921, ஜி.ஆர்.எஃப்.டாட்டன ஹாம் பக் 68, மா.கி.தோ பக் 193)
77. (மா.கி.தோ பக் 250-273)

ஒவ்வொரு மாப்ளாவையும் எதிரியாகத்தான் பார்க்க வேண்டும். இரக்கம் என்பது எவரது உள்ளத்திலும் எட்டிப் பார்க்கவே கூடாது என்று படை வீரர்களுக்குப் பாடம் நடத்தப்பட்டது. 1921 அக்டோபர் 25ல் டோர்செட் படைப் பிரிவினர் மேல்முரி மீது தாக்குதல் நடத்தினர். குடியிருப்புகள் அனைத்தும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

டோர்செட் படை முழுதாக அழிந்தாலும் மாப்ளாக்களை அழிக்காமல் விடமாட்டேன் என குடிமை அலுவலர் தொடர்ந்து வெறியூட்டினார்.[78]

பீரங்கிகளைக் கொண்டு வந்து நிறுத்தி, கண்ணிமைக்கும் நேரத்தில் கண்ணில் பட்டவர்களையெல்லாம் காலி செய்தார்கள். மக்களை மயானக் குவியலாக்கி மலபாரை மீண்டும் கைப்பற்றினார்கள். அரசின் அதிகாரப்பூர்வ புள்ளி விபரங்களே அந்தக் கொடுமைகளுக்கு சாட்சி சொல்கின்றன.

அந்தச் சண்டையில் கொல்லப்பட்ட மாப்ளாக்களின் எண்ணிக்கை 3000. கைது செய்யப்பட்டவர்கள் மொத்தம் 60,000 என்கிறது அரசின் மெட்ராஸ் பதிவேடுகள்.

விடுதலைப் போர் குறித்த நீண்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ள எழுத்தாளர் வி.என். சாமி அவர்கள் ஆங்கில அரசு தரும் புள்ளி விபரம் தவறானது என்றும் கொல்லப்பட்டவர்கள் மொத்தம் 10,000 பேர் என்றும் கூறுகிறார்.[79]

## கூட்ஸ் வண்டி கோரச் சாவு

மாப்ளாக்கள் மீண்டும் ஒரு கலவரத்தைக் கனவில் கூட கண்டு விடக் கூடாது என்பதற்காகக் கடும்நடவடிக்கைகளை மேற்கொண்டது கம்பெனி அரசு. கைது செய்யப்பட்டவர்கள் நாட்டின் பல்வேறு சிறைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

1400 குடும்பங்கள் நாடு கடத்தப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்தத் தீவை மேம்படுத்த, சாலை போட, மரங்களை வெட்ட, பயிர் செய்ய என பல்வேறு வகைகளில் அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர். அவர்கள் அனைவரும் நாடு விடுதலை அடைந்த பின்னர் ஊர் திரும்ப மனமில்லாமல் அங்கேயே தங்கி விட்டனர் என்று அந்தமான் தீவின் வரலாறு கூறுகிறது.

---

78. (மேல் முரியில் கோல்லப்பட்ட மாப்ளாக்கள் 246 என அரசின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன எஃப்.பி.இவான்ஸின் பகுதி அலுவல் குறிப்புகள் 26 அக்டோபர் 2, நவம்பர் 1921, ஜி.ஆர்.எஃப்.டாட்டன ஹாம் பக் 255-257)

79. (வி.போ.மு பக் 400,
இந்திய தலைமை படைத் தளபதி ராபின்சன் பிரபு இந்திய அரசு செயலாளருக்கு எழுதியது, 6 அக்டோபர் 1922 ம.அ.ர.ந.அ. பக் 10)

கர்நாடக மாநிலம் பெல்லாரி கைதிகள் முகாமில் மாப்ளாக்களைக் கவனிப்பதற்காக பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டு தனிச் சிறையாக மாற்றப்பட்டது. 1570 பேர் அங்கே அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு நாட்டின் பல்வேறு சிறைகளுக்கும் மாப்ளாக்கள் பகுதி பகுதியாகப் பிரித்து அனுப்பி வைக்கப்பட்டனர்.[80]

கைது நடவடிக்கையின் உச்சகட்டமாக ஒரு கொடுமை அரங்கேறியது. நூற்றுக்கணக்கான மாப்ளாக்களை காற்றுப் புக முடியாத கூட்ஸ் வண்டிக்குள் (சரக்கு இரயில்) அள்ளித் திணித்தது ஆங்கில அரசு. கர்நாடக மாநிலம் பெல்லாரியில் அவர்களை சித்திரவதை செய்வதற்காகவே தயார் செய்யப்பட்டுள்ள தனிமைச் சிறை நோக்கி வண்டி புறப்பட்டது. போகும் வழியெங்கும் மரண ஓலம் ஓங்காரமாய் ஒலித்தது. அந்த ஒலியின் ஓசை கூட சிறிது நேரம்தான். அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாய் அதுவும் அடங்கியது. 1921 நவம்பர் 10 அன்று கோவை போத்தனூர் இரயில் நிலையத்தில் எந்தச் சலனமுமின்றி அமைதியாக வந்து நின்றது மனிதச் சரக்குகளை சுமந்து வந்த அந்த இரயில் பெட்டி.

பூட்டப்பட்டிருந்த பெட்டியின் கதவுகளை அழுத்தித் திறந்தார் நிலையப் பொறுப்பாளர். திபுதிபுவென கொட்டியது மனித உடல்கள். வந்து விழுந்த சடலங்களைப் பார்த்து நிலைகுலைந்து போனார் நிலைய அதிகாரி.

அதில் தப்பிப் பிழைத்த ஒருவர் பின்னர் சொன்ன வாக்குமூலத்தில், துப்பாக்கியின் பின்புறத்தால் எங்களைக் குத்தித் தள்ளி வண்டியைத் தாழிட்டார்கள். நான் பெட்டியின் ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டேன். யாரும் எங்கும் நகரமுடியாத அளவுக்கு, தலையைக் கூட திருப்ப முடியாத அளவுக்கு நெருக்கியடித்துக் கொண்டு நின்றோம். சரியாக என் நாசி துவாரத்திற்கு அருகில் ஒரு ஆணி துவாரம் ஆணி அறையாமல் காலியாக இருந்தது. அதில் மிகச் சரியாக என் மூக்கின் நுனி பொருந்திக் கொண்டது. அதன் வழியாக என் நாசிக்கு சுவாசிக்கக் கொஞ்சம் காற்று கிடைத்தது. என் உயிர் மூச்சை இழுத்துப் பிடிப்பதற்கு எனக்கு அது உதவியாக இருந்தது.

உள்ளிருந்த வெப்பத்தின் அழுத்தம் தாளாமல் சிலருடைய உடல் வெடித்துச் சிதறியது. எந்தக் கட்டுப்பாடுமின்றி மலமும் சிறுநீரும் வெளியேறிக் கொண்டிருந்தது. அவற்றில் நனைந்து நனைந்து பொரிப்பதற்கு தயாரான மசாலா தடவிய மீனைப் போல மாப்ளாக்கள் இருந்தார்கள் என்கிறார்.

80. (சிறை நிர்வாகம் குறித்த அறிக்கை மெட்ராஸ் மாகாணம் 1921 என்,எல்(ஜி), பி.எண் 1588 ஜூன் 27,1992 பக் 30,31, மா.கி.அ.தோ பக் 246)

அதிலே செத்துப் போனவர்களின் எண்ணிக்கை மொத்தம் 70. அவர்கள் அனைவரும் கோவை இரயில் நிலையத்தை ஒட்டியே அடக்கம் செய்யப்பட்டனர். விடுதலைப் போரில் முஸ்லிம்கள் சிந்திய இரத்தத்திற்கு அந்தக் கப்ருகள் இன்றும் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கின்றன.

மாப்ளாக்களின் பேரெழுச்சியையும் பெரும் தியாகத்தையும் தி இண்டிபென்டண்ட் பத்திரிக்கை கவர் ஸ்டோரியாக வெளியிட்டு அப்போதே கௌரவித்தது.

அந்தக் கட்டுரையில் கிலாஃபத் எழுச்சியின்போது பொக்காத்தூரில் 600 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் பட்டாம்பியில் கொல்லப்பட்டவர்கள் 500 பேர் என்றும் திரூரிலிருந்து கோவைக்கு வரும் சரக்கு இரயிலில் ஏற்றப்பட்டு மூச்சுத் திணறி கொல்லப்பட்டவர்கள் 55 பேர் என்றும் செய்தி வெளியிடப்படிருந்தது.[81]

கம்பெனிக்குஎதிரான நடவடிக்கையில்முக்கிய பங்காற்றியதாகக் கூறி 160 மாப்ளாக்களுக்கு தூக்கு தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது ஆங்கிலேய நீதிமன்றம்.அவர்களுக்கான தண்டனையைமலபாரிலேயே நிறைவேற்றினால்தேவையற்ற பதற்றம் ஏற்படுமென்று அவர்கள் அனைவரையும் திருச்சிக்கு அழைத்து வந்து தூக்கிலிட்டு கொன்றார்கள்.

இதைக் கேள்விப்பட்ட திருச்சி முஸ்லிம்கள் மரண தண்டனையைத் தடுக்க முடியாவிட்டாலும் மரணித்த முஸ்லிம்களுக்குச் செய்ய வேண்டிய கடமையாவது செய்வோம் என்று தீர்மானித்தனர். அதற்காக ஒரு இயக்கத்தையும் உண்டாக்கினர். அதிகாரிகளிடம் பேசி உடலைப் பெறுவதிலிருந்து அடக்கம் செய்து முடிப்பதுவரை அனைத்துக் காரியங்களையும் அந்த அமைப்பின் கீழ் செய்ய வேண்டும் என ஏகமனதாக முடிவெடுத்தனர்.

படே ஹஸ்ரத் என்றழைக்கப்படும் செய்யது முர்துஸா சாஹிப் அவர்களின் தலைமையில் கான் பகதூர் கலீபுல்லா சாஹிப், பாலக்கரை காஜா மைதீன் சாஹிப், முஹம்மது இப்ராஹீம் சாஹிப், ஜின்னாத் தெரு முஹம்மது யூசுப் சாஹிப், ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு அஞ்சுமனே ஹிமாயதே இஸ்லாம் என்ற பெயரில் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.[82]

இந்த அமைப்பின் சார்பில் இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்து கிரியைகளும் செய்யப்பட்டன. திருச்சி காஜாமலைப் பகுதியில்

81. (B.M. Taunk Non-Co-operation Movement in India 1921 A Historical Study p.106,
தியாகத்தின் நிறம் பச்சை பக் 8-
இந்திய விடுதலை போரில் தமிழக முஸ்லிம்கள் பக் 77-82,
(மா.கி.அ.தோ)பக் 237,238)

82. (திருச்சிராப்பள்ளி மாவட்ட இஸ்லாமியர்களின் அரசியல் சமூக மற்றும் பொருதாரா நிலை குறித்த ஆய்வேடு அ.அக்பர் உசேன் பாரதிதாசன் யுனிவர்சிட்டி பக் 166)

அவர்கள் அனைவரும் நல்லடக்கம் செய்யப்பட்டனர். காஜாமலை நினைவு கல்வெட்டிலும் அஞ்சுமனே ஹிமாயதே இஸ்லாம் நினைவு கல்வெட்டிலும் இந்தச் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

கைதிகளைத் தேடி திருச்சிக்கு வந்த மாப்ளாக்களின் குடும்பத்தார் பலரும் சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்ல மனமின்றி அங்கேயே தங்கி விட்டனர். மூதாதையர்களின் நினைவை நெஞ்சில் தாங்கி நிற்கும் அவர்களின் வழித்தோன்றல்களை இன்றும் திருச்சியில் காணலாம்.

## இந்துத்துவ வெறியும் இழித்துச் சொல்லும் பழியும்

சுதந்திரத் தாகத்தின் சுடரொளியாய் பிரகாசிக்கும் மாப்ளா போராட்டத்தை இழிவுபடுத்தும் வேலையில் சில இந்துத்துவ வெறியர்கள் ஈடுபட்டுள்ளனர். மாப்ளாக்கள் நடத்தியது ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. அது ஒரு இனக்கலவரம். இந்துக்களை முஸ்லிம்கள் வெட்டிச் சாய்த்த மதக் கலவரம் என எழுதி வைத்துள்ளனர்.

இளங்கலை வரலாறு படிக்கும் மாணவர்களுக்கு சுதந்திரப் போரின் வரலாற்றுக்கு வழிகாட்டும் நூல் (History Of Freedom Struggle in India) இதில் மாப்ளாக் கிளர்ச்சி சுதந்திரப் போர் அல்ல. மலபார் முஸ்லிம்கள் நடத்திய கலவரம். அதில் மதவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் இந்துக்களைக் கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்தனர் மதமாற்றம் செய்தனர் இந்துப் பெண்களைக் கற்பழித்தனர். இந்துக்களின்உடைமைகளைச் சூறையாடினர் இந்து வீடுகளுக்குத் தீயிட்டனர் என்று எழுதியிருக்கிறார்.[83]

இந்து பார்ப்பன நம்பூதிரிகள் ஏழை விவசாயக் கூலிகளுக்கும், முஸ்லிம் மாப்ளாக்களுக்கும் செய்த கொடுமைதான் மாப்ளாக்களை போர்க்களத்திற்கு அழைத்து வந்தது என்பது உண்மை. அதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்காக அவர்களின் ஒட்டுமொத்த போராட்டத்தையும் இந்து முஸ்லிம் கலவரமாக சுருக்கிப் பார்ப்பதை கடைந்தெடுத்த கயமைத்தனம் என்றுதான் கூற வேண்டும்.

மாப்ளாக்கள் இந்துக்களைத் தாக்கியது அவர்கள் இந்துக்களாக இருக்கிறார்கள் என்பதற்காகவா? இல்லை. அது உண்மையாக இருந்திருக்குமானால், மாப்ளாக்களோடு சேர்ந்து கொண்டு சில இந்துக்களும் இந்துக்களைத் தாக்கினார்களே அவர்கள் ஏன் தாக்கினார்கள்? அதற்கும் இதே காரணத்தைச் சொல்வார்களா?

மாப்ளா போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலைப் பார்த்தால் இந்த உண்மை தெரியும். 1921 அக்டோபர் ஒன்றாம் தேதியன்று

83. (History Of Freedom Struggle in India pp 251-253,
தி.நி.ப. பக்கம் 7,8)

பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்ட 1570 கைதிகளில் 15 இந்துக்களும் இருந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன கலவரத்தில் இவர்கள் ஏன் கலந்து கொண்டார்கள் என்ற காரணத்தை விளக்குவார்களா?[84]

புரட்சி அடக்கப்பட்டதற்குப்பின் சென்னை உயர்நீதி மன்றத்தில் போடப் பட்ட 100 வழக்குகளில் 14 வழக்குகள் இந்துக்கள் மீது போடப்பட்டிருந்தது. இவர்கள் அனைவரும் இந்து ஜென்மிகளைத் தாக்கினார்கள், நம்பூதிரிகளின் வீடுகளைக் கைப்பற்றி னார்கள் என்பது அரசுத் தரப்பில் இவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள். இதையும் அதே பட்டியலில் இணைப்பார்களா?

மூச்சுத் திணறி சாகடிக்கப்பட்ட சரக்கு ரயில் பயணத்திலும் மூன்று இந்துக்கள் பங்கெடுத்துள்ளார்கள். அவர்கள் தாமாக முன்வந்து ஏறினார்களா?அடித்து துவைத்து ஆங்கிலேயர்களால் ஏற்றப்பட்டார்களா? ஏற்றியது ஆங்கிலேயர்தான் என்றால் அவர்கள் ஏன் இந்துக்களை ஏற்ற வேண்டும்? பாதிக்கப்பட்டவனைப் பலி கொடுக்க வேண்டிய தேவை ஆங்கில அரசுக்கு ஏன் ஏற்பட்டது?

அது மட்டுமல்ல மாப்ளாக்கள் இந்துக்களைத் தாக்கியது போலவே முஸ்லிம்களில் பலரையும் தாக்கியுள்ளார்கள்.

ஓய்வு பெற்ற காவல்துறை ஆய்வாளர் கான்பகதூர் குரிமண்ணில் சேக்குட்டி சாஹிபை 1921 ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று போராளிகள் கொலை செய்தார்கள்.[85]

ஆங்கிலேயரின்ஆட்சி அகற்றப்பட்டு மாப்ளா ராஜ்ஜியம் அமைந்த பின்னர் எடுக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளின்போது ராஜ்ஜியத் தலைவரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் பலர் முஸ்லிம்கள்.

புகழ் பெற்ற அலோபதி மருத்துவர் இத்தூரு ஹாஜி, அட்டன், இஸ்மாயீல், கம்முன்னி ஹாஜி, மம்மு, குன்ஹம்மு ஷேக், கயிசேரி மைதீன், காக்கப்ப வீரன் ஹாஜி, காரேத்து குன்ஹி கோயா. இவர்கள் அனைவரும் மாப்ளாக்களால் தண்டிக்கப்பட்ட முஸ்லிம்கள்.[86]

1921 புரட்சியை இந்துக்கள்மீது முஸ்லிம்கள் நடத்திய தாக்குதல் என்று கூறுபவர்கள் இதற்கு என்ன பதிலளிப்பார்கள்?

புரட்சி தொடங்கிய நேரத்தில் மஞ்சேரியில் இருந்த நம்பூதிரி வங்கி போராளிகளால் சூறையாடப்பட்டது. அப்போது புரட்சிப் படைத் தலைவர் குஞ்ஞாஹமது ஹாஜி அந்த வங்கியில் தமது பொருட்களை

84. (மெ.மா.சி.நி.அ பக் 30-31 (மா.கி.அ.தோ) பக் 246)

85. (வழக்கு எண் 128 1922இன் மீதான தீர்ப்பு கோழிக்கோடு சிறப்பு நீதிமன்றம் 25-9-1922 பக் 235-238 (மா.கி.அ.தோ) பக் 259)

86. (Peasants Protests and Revolts in Malabar Edited by K.N. Pankkar- People’s Publishing house)

அடகு வைத்த இந்துக்களையெல்லாம் வரவழைத்து உரியவர்களிடம் பொருட்களை ஒப்படைத்தாரே, அதை ஏன் செய்தார்? இந்துக்கள் என்பதற்காக அடித்தார் என்று கூறியவர்கள் இந்துக்கள் என்பதற்காக கொடுத்தார் என்பார்களா?

சாத்தான் கோட்டுக்காரர் சி. கோபால பணிக்கர் எழுதி வைத்த ஆவணத்தில் உள்ள ஒரு செய்தி.[87]

புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது அநியாயமான முறையில் சில இந்துக்களின் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அதைக் கேள்விப்பட்ட வரியம் குன்னத்து குஞ்ஞாஹமது ஹாஜி கொள்ளைப் பொருட்களைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்.

புகார் கொடுத்தவர்களை வரவழைத்து, விசாரித்து பொருட்களை இந்துக்களிடம் ஒப்படைத்தார். எரநாட்டிற்கு நேரில் சென்று இந்துக்களின் மனுக்களை விசாரித்து நடவடிக்கை எடுத்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகிறார்: இந்துக்கள் மீது அத்துமீறலில் ஈடுபட்ட சில முஸ்லிம்களை குஞ்ஞாஹமது ஹாஜி பொது இடத்தில் கட்டி வைத்து அடித்தார். குஞ்சாலி எனும் ஒருவன் மட்டும் நான் திருடவில்லை என்று கூறிக் கொண்டிருந்தான். அவனுக்கு 125 கசையடிகள் கொடுக்குமாறு கட்டளையிட்டார். இறுதியில் அவனும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டான். திருடிய பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்தான். அவை மராமத்து நம்பூதிரிக்கும் காவுக்கள் நம்பூதிரிக்கும் உரியவை என்று கண்டறியப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவைகளெல்லாம் மாப்பிள்ளாக் களைப் பற்றிய உண்மை வரலாறு. அவர்களைப் பழித்துரைப்போர் இதற்கென்ன பதிலுரைப்பர்?

மாப்பிள்ளாக்கள் ஆங்கிலேயரை எதிர்த்தனர். அதுபோல அவர்களுக்கு ஆதரவளித்தவர்கள்,காட்டிக் கொடுத்தவர்கள் என பரங்கியரின் கைகளைப் பலப்படுத்திய அனை வரையும் எதிர்த்தனர். அவர்களில் இந்து முஸ்லிம் என எந்தவிதமான பாகுபாட்டையும் அவர்கள் கடைப் பிடிக்கவில்லை. இதுதான் உண்மை.

மாப்ளா கிளர்ச்சியின் ஆய்வாளார் கான்ராட் உட் கூறுகிறார் :

சரியாகச் சொல்வதானால் கிளர்ச்சிக்கு ஆதரவு தர மறுத்த பல எரநாடு மாப்ளாக்கள் கிளர்ச்சியாளர்களால் தண்டிக்கப்பட்டார்கள். மாப்ளா ராஜ்ஜியத்துக்கான இந்தப் போராட்டப் பாதையில் எந்தத் தீங்கும் தடையும் விளைவிக்காத இந்துக்களைக் கிளர்ச்சியாளர்கள் துன்புறுத்தியதோ, தண்டித்ததோ இல்லை. ஆனால் தமது சொந்த

87. (வழக்கு எண் 128 1922இன் மீதான தீர்ப்பு கோழிக்கோடு சிறப்பு நீதிமன்றம் 25-9-1922 பக் 235-238 (மா.கி.அ.தோ) பக் 259)

சமூகத்தைச் சேர்ந்தவர்களே கிளர்ச்சிக்கு ஆதரவாக இல்லையெனில் அல்லது எதிராகச் சென்றால் அத்தகைய துரோகிகளை கிளர்ச்சியாளர்கள் தண்டிக்காமல் விட்டதும் இல்லை என்கிறார்.[88]

## இறுதியாக சில வார்த்தைகள்

ஒரு நிமிடம் உங்கள் கண்களை மூடி இதுவரை சொல்லப்பட்ட முஸ்லிம்களின் போராட்டங்களையும், தியாகங்களையும் உங்கள் மனக் கண்களில் ஓட விட்டுப் பாருங்கள். அதன் வேர் முதல் விழுதுவரை முஸ்லிம்கள் எந்த அளவிற்கு இரண்டறக் கலந்திருக்கிறார்கள் என்ற உண்மை புரியும்.

இந்த தியாகங்கள் எங்கேனும் பேசப்படுகிறதா? தியாகிகளைப் பற்றிப் பேசுவது ஒரு வகையில் அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றியல்லவா? நன்றியை விட வேறென்ன கைமாறை நாம் அவர்களுக்குச் செய்து விட முடியும்? அனைவரின் உழைப்புக்கும் அங்கீகாரம் கிடைக்கும்போது முஸ்லிம்கள் மட்டும் எந்த வகையில் அதற்கு தகுதியற்றவர்களாகி விட்டார்கள்?

முதல் இந்தியச் சுதந்திரப் போரின் நாயகனாக வலம் வந்த பகதூர் ஷா தனது முதிய வயதில் முரட்டுக் கழுதை ஹட்ஸனோடு ஏன் அல்லல்பட வேண்டும்? வயது போன காலத்தில் வசதியாக வாழ்வதை விட்டுவிட்டு வறுமையை ஏன் தன் வாழ்வாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்? புரட்சி முடிந்ததும் அதிகாரம் எனக்கல்ல. அனைத்தையும் உங்களிடமே ஒப்படைப்பேன் என்று கூறுபவர் போருக்கு ஏன் புறப்பட வேண்டும்?

அவரோடுகைகோர்த்து நின்றதற்காக ஆயிரமாயிரம் மக்கள் தங்கள் வாழ்வையே அழித்துக் கொண்டார்களே! வீடிழந்து, வேலை யிழந்து தம் உற்றார், உறவினர் பலரின் உயிரையும் இழந்து வீதிக்கு வந்து வேரற்ற மரங்களாக ஏன் அவர்கள் வீழ்ந்து போக வேண்டும்? வெள்ளையனுக்கு வெண்சாமரம் வீசி விசுவாசம் காட்டிய பலருக்குள் இவர்களும் ஒருவராக இருந்திருக்க முடியாதா?

சொந்த நலனைத் தூக்கியெறிந்து விட்டு, மண்ணின் மானம் காக்க, சந்ததிகளின் சோகம் நீக்க சோதனைகளைத் தாங்கிய மக்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஓரங்கட்டப்பட வேண்டுமா?

1857ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரைப் பற்றி பேசாத ஏடுகள் இல்லை நடத்தாத பாடங்கள் இல்லை. ஆனால் அவையனைத்துமே எங்கே முஸ்லிம்களின் தியாகத்தைச் சொல்ல வேண்டிய சூழல் வந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சிச் சொல்வதைப்போல் உங்களுக்குத்

88. ((மா.கி.அ.தோ) பக் 260
பகுதி அலுவல் அறிக்கை 1922 ஜனவரி ஜி.ஆர்.எஃப்.- பக் 284,236)

தோன்றவில்லையா? அதைப் பற்றி வீரம் கொப்பளிக்கப் பேசப்படும் இடங்களில்கூடகருத்துக்கள் இல்லாத வெற்று வர்ணணைகளால் வார்த்தைகளை நிரப்பி விடுகிறார்கள்.

1857 சிப்பாய் புரட்சி மீரட், டில்லி, அயோத்தி, லக்னோ, துப்பாக்கி, மாட்டுக் கொழுப்பு, பன்றிக் கொழுப்பு, மங்கள் பாண்டே, வெற்றி, தோல்வி, துவங்கியது, பரவியது, முடிந்தது, சுபம், அவ்வளவுதான் முடித்துக் கொள்வார்கள். இதைத் தாண்டி வேறேதும் பேசப்படுகிறதா?

முதல் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் ஆஸ்திரியப் போர், ஐரோப்பிய போர் என அகிலத்துப் போர்களைப் பற்றி பேசும் போது கூட எப்படி நடந்தது? எதனால் நடந்தது? மரணம் எத்தனை? இழப்புகள் என்னென்ன? முடிவு என்ன? விளைவு என்ன? வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு? என அனைத்தையும் அலசுகிறார்கள். ஆனால் இங்கே நமது போர். நம்முடையசுதந்திரத்திற்காக நடைபெற்ற போர். நமது ஊணோடும் உயிரோடும் கலந்த நமது முன்னோர்கள் செய்த போர். அதுவும் நாம் வாழ்வதற்காக அவர்கள் வீழ்ந்த போர். இதில் காட்டப்படும் மௌனம் கள்ளத்தனமல்லாமல் வேறென்ன?

இதுவே சுதந்திரப் போரில் ஈடுபட்ட முஸ்லிமல்லாதவர்களின் பங்கைப் பற்றி பேசுகிற கட்டங்களாக இருந்தால் அதன் தொனியே மாறி விடுகிறது. விலாவாரியாக விளக்கித் தரப்படுகிறது. இதைச் சுருக்குவதைப் போன்று அவற்றை ஏன் சுருக்குவதில்லை?

அப்படியானால் முஸ்லிம்களுக்கும் இந்த மண்ணுக்குமான ஆலகால பந்தம் அம்பலத்திற்கு வந்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள் என்பதுதானே அதன் அர்த்தம். முஸ்லிம்களின் தியாகங்கள் முன்னுக்கு வந்தால் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் அவற்றை மட்டும் திட்டமிட்டு மறைக்கிறார்களோ என்ற எண்ணம் தான் ஏற்படுகிறது.

ஜாலியன் வாலாபாக், செக்கிழுத்த வ.உ.சி., சனாதனத்தைக் காப்பதற்காக ஆஷ் துரையைக் கொன்ற வாஞ்சி நாதன், தூக்கிலிடப்பட்ட கட்டபொம்மன், கொடி காத்த குமரன் இவர்களையெல்லாம் விட மாப்ளாக்களின் வீரமும் தியாகமும் எந்த விதத்தில் குறைந்து போனது?

நேதாஜி கூட சுதந்திர இந்தியாவை ஆஸாத் ஹிந்த் என்று பிரகடனம் தான் செய்தார். ஆனால் மாப்ளாக்களோ அதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே ஆங்கிலேயர்களை விரட்டிவிட்டு சுதந்திர அரசை நிறுவி சில மாதங்கள் அந்த அரசாங்கத்தை நடத்திக் காட்டி சாதனை படைத்தவர்கள். இது சாதாரணமாக மறக்கப்பட்டு விடுகிற சாதனையா?

செக்கிழுத்தார்கள், சிறை சென்றார்கள் இத்தனை ஆண்டு சிறை அத்தனை ஆண்டு சிறை என்றெல்லாம் சிலாகித்துப் பேசுகிறோம். சரக்குப் பெட்டியின் ஆணி ஓட்டையில் மூச்சையிழுத்த மாப்ளாவின் தியாகம் இதைவிட மட்டமா? ஒற்றை வரிச் செய்தியாக ஓரஞ்சாரத்தில்கூட அதற்கு நாம் இடம் கொடுக்கவில்லையே நினைத்தாலே குலை நடுங்கும் அளவுக்கு ஈவிரக்கமின்றி, விலங்குகளைக் கூட கொல்லத் தயங்கும் விதத்தில் பெட்டிக்குள் அடைத்து கோரமாகச் சாகடிக்கப்பட்டார்களே, சர்வதேச அளவில் நம் முன்னோர்களின் தியாகத்தைச் சொல்வதற்குத் தகுதியானதாக அது இருந்தும் முஸ்லிம் என்ற ஒரே காரணத்தால் அதை முதுகுக்குப் பின்னால் தூக்கியெறிவதை எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்?

காங்கிரஸ் என்றாலே காந்திஜி, நேருஜி, ராஜாஜி என்று பேசப்படும் ஜீவாத்மாக்களின் வரிசையில், காங்கிரஸ் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள ஜீவ மரணப் போர் நடத்திய காலத்தில் அதன் ஜீவனைத் தக்க வைக்க தங்கள் ஜீவனை அர்ப்பணித்த முஸ்லிம்களைப் பற்றிப் பேசப்படுவதில்லையே ஏன்?

சுதந்திரப் போருக்கு முன் படிப்பிலும் பணத்திலும் கொடி கட்டிப் பறந்த முஸ்லிம்கள், சுதந்திர தேசத்தின் கனவுகளில் லட்சத்தையும் கோடியையும் கொட்டிக் கொடுத் தார்கள். அவர்களின் வாரிசுகள் பரம ஏழைகளாகி இன்று பட்டினி கிடக்கிறார்கள். அன்று பாரிஸ்டர்களாக வலம் வந்தவர்கள் காந்தியின் மீது கொண்ட காதலால் கல்வியை விட்டார்கள். இன்று கல்வி நிலையங்களில் கடைசி இருக்கை கூட காலி இல்லை என்று விரட்டப்பட்டு கை நாட்டுப் பேர்வழிகளாக காலம் தள்ளுகிறார்கள்.

ஏன் இந்த இழிநிலை?

ஒரு காலத்தில் முதல் வரிசையில் இருந்து தேசத்தை முன்னோக்கி இழுக்க பாடுபட்டவர்கள் இன்று அனைவருக்கும் பின்னால் இருப்பதன் பின்னணியில் முஸ்லிம்களின் மறைக்கப்பட்ட தியாக வரலாறு இருக்கிறது என்றால் அது தவறல்ல. மிகையுமல்ல.

# 6

# சரித்திரத்தின் பெயரால் சதி வலை

விடுதலைப் போரில் முஸ்லிம்களின் பங்கை மறைத்தவர்கள்வரலாற்றை வளைத்து முஸ்லிம்களுக்கு எதிரான வக்கிரபுத்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய வரலாற்றில் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்த பலநூறு முஸ்லிம்கள் இருக்க சரித்திரத்தின் பெயரால் சதி செய்ய நினைப்பவர்கள் குறிப்பிட்ட சில மன்னர்களை மட்டும் கூடுதலாகப் பேசுகிறார்கள். ஏன்? மன்னர்களின் சரித்திரத்தை கற்றுத் தர வேண்டுமென்ற கடமை உணர்ச்சியா?

அப்படியானால் அவர்களின் வரலாற்றில் உள்ளதை உள்ளபடி உரைக்க வேண்டும். சரி தவறு இரண்டையும் சமநிலையில் இருந்து எடுத்துச் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு மன்னர்களின் பெயர்களையும், சம்பவங்களையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு இவர்களாகவே கதை எழுதி அவற்றில் தமது கற்பனையைச் செருகி வரலாறு என்ற பெயரால் வழங்கியிருக்கிறார்கள்.

ஒரு நிகழ்ச்சியின் காரண காரியங்களைக் கண்டு கொள்ளாமல் அதற்கான சூழ்நிலையையும் கவனத்தில் கொள்ளாமல் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் செய்த அனைத்துக் காரியங்களுக்கும் மதச்சாயம் பூசி மதவெறியை ஊட்டியிருக்கிறார்கள்.

ஔரங்கஜேப், கஜினி முஹம்மது, மாலிக்காபூர் என முஸ்லிம்களைப் பற்றி சொல்லித் தரப்படும் பாடங்கள் அனைத்துமே இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வேட்டு வைப்பவையாகவே இருக்கின்றன. முஸ்லிம் மன்னர்கள் இந்துக்களைக் கொன்றார்கள். கோவில்களை இடித்தார்கள். கொள்ளையடித்தார்கள். கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டார்கள். வரிக்கு மேல் வரி விதித்து இந்துக்களை வாட்டி வதைத்தார்கள் என எழுதி எழுதி ஏடுகளை நிரப்பி இருக்கிறார்கள்.

இவற்றில் உள்ள உண்மைகளைக் கொஞ்சம் உணர்ந்து கொள்ளத் தான் இந்தப் பகுதி. அதற்கு முன் இன்னொரு உண்மையை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் வரலாற்றில் நிகழ்ந்துவிட்ட பிழைகளைச் சரி செய்வதோ முஸ்லிம் மன்னர்களை நல்லவர்களாக்குவதோ நமது நோக்கமில்லை. அதன்பால் எந்தத் தேவையும் எமக்கில்லை. குற்றம்

செய்தவர்கள் யாராயினும் அதை ஏற்றுக் கொள்வதில் எந்தத் தயக்கமும் இல்லை.

முஸ்லிம்கள் உயிரிக்கும் மேலாக மதித்திடும் உததமத் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூட மனிதர் என்ற அடிப்படையில் செய்து விட்ட பிழைகளைக் கூட தவறுதான் என்று ஒத்துக் கொள்ளும் இஸ்லாத்தின் வழி நடப்பவர்கள் இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான காரியத்தை ஒருக்காலும் செய்ய மாட்டார்கள். புகுத்தப்பட்ட பொய்களைக் கட்டவிழ்ப்பதும் அதன் மூலம் புகுந்து விட்ட மதவெறியை வெட்டிச் சாய்ப்பதுமே எமது நோக்கம்.

கடந்த கால முஸ்லிம் மன்னர்களின் வரலாற்றில் உலகமே வியந்து பார்க்கும் உன்னத காரியங்களைக் கூட இஸ்லாத்தின் பார்வையில் இழிவானது என்று எடுத்துச் சொல்பவர்கள் நாங்கள். மொகலாய மன்னனின் கட்டிடக் கலைக்கு அகிலமே அதிசயிக்கும் தாஜ் மஹால் ஒரு சான்று.

தனது மனைவியின் மண்ணறைக்கு ஷாஜஹான் சூட்டிய பூச்செண்டு. இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியை அள்ளிக் குவிக்கும் அமுத சுரபி. ஆண்டுகள் நானூறைத் தொட்ட பின்னும் அப்படியே நிற்கும் ஆச்சர்யம்.

அடக்கஸ்தலத்தில் பூசுவதோ, அதன் மீது கட்டிடங்கள் கட்டுவதோ கூடாது என்பது நபிகளார் காட்டிய நல்வழி. அண்ணலாரின் அமுத மொழியை அப்பட்டமாய் மீறிய ஷாஜஹானின் இந்தச் செயலை இஸ்லாமியன் என்ற அடிப்படையில் எம்மால் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்று கூறி வருகிறோம்.

அதுவும் ஊரார் பணத்தை எடுத்து மனைவிக்கு மாளிகையாம்? மன்னரென்றால் அப்படித் தான் என மக்களெல்லாம் ஏற்றாலும் நாங்கல் அதை ஏற்க மாட்டோம் என மறுத்து வருகிறோம்.

போர்கள் என்பது நீதியை நிலைநாட்டவும், அநீதிக்கு எதிராகவும் மட்டுமே நடைபெற வேண்டும் என்பது இறைவன் வகுத்த விதி. நாடு பிடிப்பதற்கும் ஆண்டு மகிழ்வதற்கும், அரியணை ஏறி ஆட்சி செய்வதற்கும் ஆயுதம் தூக்குவது கூடாது என்பது அல்லாஹ்வின் கட்டளை. இவற்றைக் கடைபிடித்த மொகலாய மன்னர்கள் எத்தனை பேர்? என்று கேட்டு வருகிறோம்.

இதுபோல அனைவரும் அங்கீகரிக்கும் எத்தனையோ விஷயங்களை நாங்கள் எதிர்க்கிறோம் குறை கூறுகிறோம் பகிரங்கமாக மக்கள் மன்றத்தில் முன் வைக்கிறோம். ஆகையால் இது முஸ்லிம் மன்னர்களை நியாயவான்களாகச் சித்தரிக்க நடைபெறும் முயற்சி

அல்ல. வரலாற்றின் பெயரால் இந்து முஸ்லிமின் இணைப்பை அறுக்க நினைக்கும் அயோக்கியர்களின் ஆபத்தை உணர்த்த எடுக்கும் முயற்சி என்பதை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

## ஔரங்கஜேப்

வரலாற்றுப் பாடங்களில் மிக மிக மோசமாகச் சித்தரிக்கப்படும் ஒரு மன்னன். இந்துக் கோவில்களை இடித்து தகர்ப்பதில் இவருக்கு நிகராக இன்னொருவர் இல்லை என்று வர்ணிக்கப்படுபவர். மொகலாய மன்னர் ஷாஜஹானின் மகனும் 1659ஆம் ஆண்டிலிருந்து 1688ஆம் ஆண்டு வரை டில்லியைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி புரிந்த சக்கரவர்த்தியுமான ஔரங்கஜேப்.

ஒருமுறை ஔரங்கஜேப் தனது படை பரிவாரங்களுடன், தனக்குக் கீழுள்ள சமஸ்தான சிற்றரசர்களுடன் வங்காளத்தை நோக்கி பயணம் மேற்கொண்டார். வழியில் காசியின் கங்கை நதியில் நீராடி விசுவநாதப் பெருமானை தரிசிக்க விரும்பினார்கள் உடன் வந்த சிற்றரசர்கள்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று பயணத்தை நிறுத்தினார் ஔரங்கஜேப். இந்து ராணிகள் மூடிய பல்லக்கில் வைத்து அழைத்துச் செல்லப்பட்டனர். நீராடலும் வழிபாடும் முடிந்து அனைவரும் திரும்பினர்.

அவர்களில் கட்ச் சமஸ்தான ராணியை மட்டும் காணவில்லை. பலரும் சென்று தேடினார்கள் ஆனாலும் அவர் அகப்படவில்லை.. ஆத்திரமடைந்த ஔரங்கஜேப் தனது முக்கிய அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யச் சொன்னார்

விசுவநாதர் ஆலயத்திற்குள் இருந்த கணபதி சிலை லேசாக அசைந்து ஆடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த அதிகாரிகள் சிலையைக் கொஞ்சம் அகற்றிப் பார்த்தனர். உள்ளே பாதாளச் சுரங்கத்தின் படிகள் தெரிந்தன. அதற்குள்ளே இறங்கிப் பார்த்தால் கட்ச் ராணி மான பங்கப்படுத்தப்பட்டு அழுது கொண்டிருந்தார்.

அரசர்களெல்லாம் கொந்தளித்தனர். இதற்குச் சரியான நீதி வேண்டும் என ஔரங்கஜேப் இடம் கோரிக்கை வைத்தனர். கோவிலின் புனிதம் கெட்டு விட்டது என்று அனைவரும் உணர்ந்தனர். உடனடியாக விசுவ நாதர் விக்ரஹத்தை வேறு இடத்திற்கு மாற்றச் சொன்னார் மன்னர். விக்ரஹத்தை இடமாற்றம் செய்த பின்னர் கோவில் இடிக்கப்பட்டது. கோவிலின் மடாதிபதி கைது செய்யப்பட்டார். (89)

---

௮௯. (.Dr.Pattaabhi Sitaramayya, The Feathers And the Stones - B.N. Pande Islam and Indian Culture p.55

**வரலாற்று வெளிச்சத்தில் ஔரங்ஜேப் விகடன் பிரசுரம்(வ.வெ.ஔ.வி.பி) செ.திவான் பக் 310 - 312)**

இந்த சம்பவத்தை டாக்டர் பட்டாபி சீத்தாராமைய்யா பழைய தஸ்தாவேஜுகளில் இருந்து எடுக்கப்பட்ட தக்க சான்றுகளுடன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றை வளைப்பவர்கள் தமது வசதிக்காக இந்தச் சம்பவத்தின் இடையில் வரும் கோயிலை இடித்தார், கோவில் இடிக்கப்பட்டது என்ற வாசகத்தை எடுத்துக் கொண்டார்கள். அதன் காரண காரியங்கள் அனைத்தையும் கண்ணுக்கெட்டா தூரத்தில் தூக்கிக் கடாசிவிட்டு கோவிலை இடித்தார் என்ற ஒற்றை வாக்கியத்தை மட்டும் கச்சிதமாக வெட்டி எடுத்துக் கொண்டார்கள். அதனோடு தங்கள் கற்பனைகளைக் கலந்து தற்போது ஔரங்கஜேப்பை கூறுகட்டி விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

காழ்ப்புணர்வில் இடிப்பவர் விக்ரகத்தை வேறு இடத்திற்கு மாற்றி விட்டுத்தான் இடிப்பாரா? முதலில் உடைபடுவது அதுவாகத் தானே இருக்கும். கோவிலின் புனிதத்தைக் காக்க அவர் எடுத்த நடவடிக்கையை அதனைக் கெடுக்க நினைத்த நடவடிக்கையாக கேலி செய்யப்படுவதை என்னவென்று சொல்வது?

ஔரங்கஜேப் கோவிலை இடித்தார் என்று சொன்னவர்கள் அது போல அவர் இடித்த பள்ளிவாசலைப் பற்றிய செய்திகளை மட்டும் பக்குவமாக மறைத்து விட்டார்கள்.

கோல்கொண்டா சமஸ்தானம் ஔரங்கஜேப்பின் ஆளுகையின் கீழ் இருந்த பகுதி. அதன் சிற்றரசர் தானஷா அங்கு வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தை டில்லிக்கு அனுப்ப மனமில்லாமல் ஆழக்குழி தோண்டி பணம் அனைத்தையும் அதில் இட்டுப் புதைத்து விட்டார். பிறகு அந்தப் புதையலின் மேல் ஒரு பள்ளிவாசலையும் கட்டிக் கொண்டார். செய்தியைக் கேள்விப்பட்ட ஔரங்கஜேப் உடனடியாக கோல்கொண்டா ஜும்ஆப் பள்ளியை இடித்துத் தரைமட்டமாக்க உத்தரவிட்டார்.

அவரது கட்டளையின் பேரில் பள்ளி இடிக்கப்பட்டது. அதன் கீழிருந்த புதையல் கைப்பற்றப்பட்டு மக்களின் நலனுக்காக செலவிடப்பட்டது.[90]

இவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் இணைத்துப் பார்த்தால் சமூக அமைதியை நிலை நாட்டவும், குற்றங்களுக்குத் தண்டனை வழங்கவுமே அவர் அவ்வாறு நடந்து கொண்டார் என்பதையும் மதவெறி அதற்கு காரணமல்ல என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

---

90. ((வ.வெ.ஔ.வி.பி) செ.திவான் பக் 309)

## கோவில்களுக்குக் கொடை

ஒரிசா (தற்போது ஒடிசா) மாநிலத்தின் கவர்னரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி.என்.பாண்டே அவர்கள் அலகாபாத் நகராட்சித் தலைவராக இருந்த போது கோவில் நிலம் குறித்த சர்ச்சை ஒன்று எழுந்தது. அது குறித்த தனது குடும்ப ஆவணத்தைக் கொண்டு வந்த ஒருவர் பாண்டேவிடம் கொடுத்தார். அதில் டில்லி பாதுஷா ஔரங்கஜேப் கோவிலுக்கு நிலம் வழங்கியதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பாண்டேவால் அதை நம்ப முடியவில்லை. டாக்டர் தேஜ் பகதூர் சப்ருவிடம் அதை அனுப்பி வைத்து அதிலுள்ள தகவல் உண்மையானவையா? என்று பரிசீலிக்கச் சொன்னார். அந்த செப்புப் பட்டய ஆவணம் ஔரங்கஜேப்பால் வழங்கப்பட்டதே என உறுதி செய்யப்பட்டது.

இது போன்று வேறு கோவில்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா? என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் இந்தியாவின் பல முக்கிய கோவில்களுக்கு கடிதம் எழுதினார். கிடைத்த தகவல்களைப் பார்த்து ஆச்சர்யத்தில் மூழ்கிப் போனார் பாண்டே.

உஜ்ஜைனியினியில் உள்ள பாலாஜி கோவில், கவுஹாத்தியில் உள்ள உமானந்த் கோவில், சத்ருஞ்சையின் ஜைனக் கோவில், சீக்கியர்களின் பல குருத்துவாராக்கள் என ஔரங்கஜேப் அரசாங்கத்தில் மானியம் பெற்ற கோவில்கள் பெரும் பட்டியலாகச் சேர்ந்து விட்டது.

1659 முதல் 1688 ஆம் ஆண்டு வரை ஔரங்கஜேப்பின் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட மானியங்கள், நிலங்கள் குறித்த முறையான ஆவணங்களைத் திரட்டினார். நமது பள்ளி கல்லூரிகளில் ஔரங்கஜேப் குறித்து கற்றுத் தரப்படும் வரலாறுகள் எந்த அளவிற்குத் தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதையும் புள்ளி விபரங்களோடு தொகுத்தார்.

1977 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் தேதி பாரளுமன்ற மேலவை உறுப்பினராக இருந்த போது அவற்றை வெளியிட்டு அவையிலேயே நீண்ட உரை நிகழ்த்தினார். அதில் முஸ்லிம்களுக்கு எதிரான வரலாற்றாசிரியர்களின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தார். அதனால் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத விளைவுகளைப் பற்றிய தனது வேதனைகளையும் அங்கே வெளிப்படுத்தினார். இந்தச் செய்தி பாராளுமன்ற அவைக் குறிப்பிலும் இடம் பெற்றுள்ளது.[91]

91. ((வ.வெ.ஔ.வி.பி) செ.திவான் பக் 287,288 பி.என்.பாண்டே இஸ்லாமும் இந்திக் கலாச்சாரமும் 1987 டாயல் பொழிபெயர்ப்பு)

## குமரகுருபரர்

ஔரங்கஜேப்பிடம் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தவர் குமரகுருபர சுவாமிகள். டில்லி பாதுஷாவிடம் பேச வேண்டும் என்பதற்காகவே ஹிந்தி, உருது, ஆகிய மொழிகளைக் கற்றுக் கொண்டார். காசி கங்கையாற்றங்கரையில் மடம் அமைக்க விரும்பினார். அவர் விரும்பிய இடத்தை மன்னர் அவருக்கு மானியமாகக் கொடுத்தார்.[92]

அந்த மடத்தில் குமரகுருபரர் இந்தி, தமிழ், உருது, ஆகிய மொழிகளில் சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். குமாரசாமி மடம் என்ற பெயரில் இன்றும் அந்த இடம் இருந்து வருகிறது.

## ஜிஸ்யா வரி

ஔரங்கஜேப் ஜிஸ்யா என்ற பெயரில் வரி விதித்து இந்துக்களைக் கொடுமைப்படுத்தினார் என்பது அவர் மீது சொல்லப்படும் இன்னொரு குற்றச்சாட்டு.

இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் முஸ்லிமல்லாத குடிமக்கள்மீது இராணுவச் சேவை கட்டாயமாக்கப் படவில்லை (முஸ்லிம்கள் கட்டாயம் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும்). எனவே முஸ்லிமல்லா தவர்களின் பாதுகாப்புக்காக அவர்களிடமிருந்து பெறப்படும் சிறு தொகையே ஜிஸ்யா எனப்படும்

ஜிஸ்யா வரி இந்துக்களைக் கொடுமைப்படுத்துவதற்காக வசூலிக்கப்பட்டது என்று யாராவது கூறினால் ஒன்று அவர்கள் அதன் நடைமுறைகளைப்பற்றி அறிவற்றவர்களாக இருக்க வேண்டும் அல்லது முஸ்லிம்கள்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியில் அவதூறு பரப்பும் கயவர்களாக இருக்க வேண்டும்.

ஜிஸ்யாவின் காரணங்கள் மற்றும் நடைமுறைகள்

1.முஸ்லிமல்லாதவர்களிடம் ஜிஸ்யாவைப் போன்று முஸ்லிம்களிடம் ஸகாத் வசூலிக்கப்படும். ஸகாத்திற்காக செல்வந்தர்கள் தமது செல்வத் திலிருந்து இரண்டரை சதவிகிதத்தை வழங்க வேண்டும்.

2.முஸ்லிமல்லாதவர் ரூ.2500 சம்பாதித்தால் அதிலிருந்து 13 ரூபாயை ஜிஸ்யாவாக செலுத்த வேண்டும். குறைவாகசம்பாதிப்பவருக்கு அவரதுவருமானத்தைப் பொருத்து பலவிதங்களில் ஜிஸ்யா நிர்ணயிக்கப்படும்.

3.தேவைக்கேற்ப இரண்டு மூன்று தவணைகளாக செலுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

92. (என்.ராமகிருஷ்ணா ஆதி குமரகுருபரரின் அருட்பரம்பரை மஞ்சரி 1969 ஜூன் பக் 18 (வ.வெ.ஔ.வி.பி) செ.திவான் பக் 292, 293)

4.ஏற்கத் தகுந்த காரணங்களுக்காக ஜிஸ்யா செலுத்தாமல் தாமதமாகி அந்த ஆண்டைக் கடந்துவிட்டால் அந்த ஆண்டின் ஜிஸ்யா தள்ளுபடி செய்யப்படும்

5.ஆறுமாத காலம் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரிடம் ஜிஸ்யா வசூலிக்கப்படாது.

6.ஏழைகள்,துறவிகள், ஊனமுற்றவர்கள்,பெண்கள், குழந்தைகள், உழவர்கள் ஆகியோர் ஜிஸ்யாவிலிருந்துவிலக்கு அளிக்கப்பட்டிருந்தனர்.

7.இவற்றையெல்லாம்விட ஔரங்கஜேப்பின் ஆட்சியில்தான் அதற்கு முன் நடைமுறையில் இருந்த பல்வேறு வரிகள் ரத்து செய்யப்பட்டன. வரலாற்று அறிஞர் கா∴பீகான் கூறுகிறார். ஔரங்கஜேப்பின் ஆட்சியில் அதற்கு முன்னர் போடப்பட்டிருந்த எண்பது வரிகள் ரத்து செய்யப்பட்டதாகக் கூறுகிறார்.

8.குறிப்பாக கங்கை நதியில் குளிக்க வரும் யாத்திரீகர்களிடம் பெறப்பட்ட வரி, இறந்த வர்களை எரித்தபின் அஸ்தியைக் கங்கையில் கரைப்பதற்கான வரி, தீபாவளிப் பண்டிகையின் தீப அலங்காரங்களுக்காக விதிக்கப்பட்ட வரி ஆகியவற்றை ரத்து செய்தார்.

இவையனைத்தும் இந்துக்கள் மட்டுமே செலுத்தி வந்த வரி என்பது குறிப்பிடத் தகுந்தது.[93]

இவற்றை நடுநிலையோடு பார்த்தால் ஜிஸ்யா என்பது இந்துக்களைக் கசக்கிப் பிழிந்த கொடுமை என்று யாரும் கூற மாட்டார்கள். மனதிருப்தியோடு அந்தக் காலத்து மக்களால் வழங்கப்பட்ட தொகையை பிரிட்டிஷார் தமது பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பயன்படுத்தினார்கள். இன்று மனித நேயத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்காக மதவெறிக் கும்பல் பயன்படுத்துகிறது

## மாலிக்காபூர்

கி.பி.1296 முதல் 1316 வரை டில்லியைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் அலாவுதீன் கில்ஜி. இவரது தென்னாட்டுப் படையெடுப்பு நமது பாடப் புத்தகங்களில் பக்கம் பக்கமாக வர்ணிக்கப்படுகிறது. அதில் முக்கிய இடத்தைப் பிடிப்பது அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி மாலிக்காபூர் இந்துக்கள் மீதும் இந்துக் கோவில்கள் மீதும் நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் கொடுமைகள்.

93. (Manoci Stotia Do Mogor 1653 - 1708 Vol 1,2 Constrable and Smith Edn 1908 Caetani Amalidelle Islam vol 4 p.162, Vol 5, p.449 - Census of india 1911 vol 4 , Balusistan part 1 p. 175
வ.வெ.ஔ.வி.பி) செ.திவான் பக் 117 - 135)

வழக்கம்போல் இதிலும் சரித்திர ஆசிரியர்கள் தடவிய மசாலாக்களே அதிகம். குறிப்பாக மாலிக்காபூரால் இடித்துச் சிதைத்து தரைமட்டமாக்கப்பட்டதாகக் கூறப்படும் சீர்காழி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், கங்கை கொண்ட சோழபுரம் சமயபுரம், மதுரை, இராமேஸ்வரம் என அனைத்துக் கோவில்களுமே தற்போதைய தமிழகத்தின் பிரபலமான வழிபாட்டுத் தலங்கள். எனவே மாலிக்காபூரின் வரலாறு தமிழர்களின் பார்வையில் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

மாலிக்காபூரின் வரலாறு மற்றும் படையெடுப்புகள் குறித்து அறிந்து கொள்ள அவரது சமகால கவிஞர் அமீர் குஸ்ரு பார்சி மொழியில் எழுதிய தாரிக்கி அலாய் அல்லது கஸைனுல் புஸ்த் என்ற நூலே மூல ஆதாரமாகப் பயன்படுகிறது.

அதன் பிறகு அங்கிருந்து வேறு சில பார்சி மொழி நூல்கள் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் மிக நீண்ட தகவல்களோடு பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் எழுதிய south india and her muhammadhan invaders ஆகிய நூல்கள் பயன்படுகின்றன என்கிறார் மாலிக்காபூர் குறித்து ஆய்வு நூல் வெளியிட்டுள்ள டாக்டர் ஜெ.ராஜா முகம்மது.

அய்யங்காருக்குப் பிறகு வந்த ஆய்வாளர்கள்அனைவரும் மாலிக்காபூரின் கோவில் இடிப்பு மற்றும் கொடூரத் தாக்குதல் என தங்களின் எழுத்தோவியத்திற்கு அய்யங்காரையே சாட்சியாக்குகிறார்கள்.

ஆனால் அமீர் குஸ்ருவின் நூல்களை ஆதாரமாகக் காட்டும் அய்யங்காரின் எழுத்துக்களோ குழப்பத்திற்கு மேல் குழப்பமாக காட்சி தருகிறது. மாலிக்காபூர் வந்து சென்ற பாதையிலிருந்து சென்று வந்த இடங்கள் வரை வரலாறு நெடுகிலும் எவ்விதத் தெளிவும் இல்லாமலே இறுதி வரை பயணிக்கிறார் அய்யங்கார்.

மர்கத்புரி, பிரமாஸ்திபூர், ஜலகோட்டா, காம், காந்தூர் என குஸ்ரு குறிப்பிடும் பல ஊர்கள் எவை என்றே தெரியவில்லை? எந்த ஊரைக் குறிக்கின்றன என்ற தெளிவும் இல்லை. இந்நிலையில் அய்யங்கார் அவர்கள் தம்முடைய கற்பனைக்கு ஏற்ப அவற்றிற்கு விளக்கமளித்துள்ளார்.

அவற்றை எழுதிய அமீர் குஸ்ருவே குழப்பத்தில் எழுதியுள்ளார். ஏனெனில் இந்தச் செய்திகளை அவர் நேரில் பார்த்து எழுதவில்லை. மாலிக்காபூரின் படையெடுப்பில் அவர் பங்கேற்கவும் இல்லை என்கிறார் அவரது நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த எலியட்.

பிரமஸ்த்புரி அல்லது பிரமாஸ்திபூர் என்பது சிதம்பரத்தைத்தான் குறிக்கிறது என்று பல்வேறு சான்றுகளை வைத்து முடிவுக்கு வருகிறார் அய்யங்கார். அதை முடித்து அடுத்த சில பக்கங்களிலே அது ஸ்ரீரங்கமாகவும் இருக்கலாம் என்கிறார். அதற்கு சில வாதங்கள். இன்னொரு இடத்தில் அதை சீர்காழி என்கிறார், இல்லை அது இராமேஸ்வரமாகவும் இருக்கலாம் என்கிறார்.[94]

ஒரு பெயருக்கு உரிய ஊர் எது என்பதைக் கண்டுபிடிப்பதிலே இத்தனைக் குழப்பம். இந்தக் குழப்பம் மாலிக்காபூர் வந்து சென்ற அனைத்து இடங்களுக்கும் தொடர்கிறது. இந்தக் குழப்பத்திற்கு இடையில்தான் நமது ஆசிரியர்கள் கோவிலை இடித்தார்கள் என குதிரை ஓட்டுகிறார்கள்.

மாலிக்காபூரின் தமிழகப் படையெடுப்பு *26.3.1311*ல் துவங்கி *1.4.1311*ல் முடிவடைகிறது. மொத்தம் ஏழு நாட்கள். இந்த ஏழு நாட்களுக்குள் அவர் வந்து, கொன்று, வென்று, இடித்து, கொள்ளையடித்து திரும்பியதாகக்கூறப்படும் இடங்களைப் பாருங்கள். எவ்வளவு பொய்களைப் புணைந்திருக்கிறார்கள் என்ற உண்மை விளங்கும் இல்லையில்லை பொய்மை விளங்கும்.

கன்னட நாட்டிலிருந்து புறப்பட்டு வந்த மாலிக்காபூரின் படை திருச்சி முசிறிக்கு அருகில் முகாமிடுகிறது. அங்கிருந்து *175* கி,மீ தொலைவில் உள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்துக்குப் படை வருகிறது. இங்குள்ள மன்னன் வீரபாண்டியன் சமயபுரத்துக்கு ஓடி விட்டான் என்ற செய்தி கேட்டு படை மன்னனைத் தேடி சமயபுரம் செல்கிறது. வந்த இடத்தில் கோவிலையும் கொள்ளையடித்தாகி விட்டது. ஆனால் மன்னன் மட்டும் கிடைக்கவில்லை.

மன்னன் இங்கிருந்தும் தப்பித்து விட்டான் என்று தெரிந்ததும் அவனைத் தேடி தென்னாற்காடு மாவட்டம் தேவிக் கோட்டைக்கு படை செல்கிறது. அங்கும் அவனைப் பிடிக்க முடியாமல் படை மீண்டும் சமயபுரம் வருகிறது.

சமயபுரத்தில் வைத்து சிதம்பரம் கோவிலின் செல்வச் செழிப்பு குறித்து கேள்விப்படுகிறான் மாலிக்காபூர். உடனடியாக படை சிதம்பரம் நோக்கி புறப்படுகிறது. அங்கு சென்றதும் கோவில் கொள்ளையடிக்கப்படுகிறது.அது முடிந்ததும் படை முகாமுக்குத் திரும்புகிறது.[95]

இவையனைத்தும் கிருஷ்ணசாமி அய்யங்காரும் அவருக்குப் பின் முன் என பலரும் எழுதியுள்ள ஏட்டுச் செய்திகள்......

94. (தமிழகத்தில் மாலிக்காபூர் ஓர் ஆய்வு ஜெ.ராஜா முகம்மது பக் 34,35)
95. ((த.மா.ஒ.ஆ) பக் 39 - 41)

இந்தப் பயணத்திற்கு எத்தனை நாட்கள் தேவைப்படும்? இன்று இருப்பதைப் போன்ற மோட்டார் வாகனங்கள் இல்லாத காலம். குதிரை போன்ற விலங்குகளைத் தான் பயன்படுத்தி இருக்க வேண்டும். பயணத்தில் இடையிடையே ஓய்வெடுத்திருக்க வேண்டும். எதிரிப் படை வீரர்களோடு ஆங்காங்கே போர் செய்ய வேண்டும். காயமடையும் படை வீரர்களுக்கு தகுந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும்.

இன்றிருப்பதைப் போல உணவு விடுதிகள் எதுவும் இல்லாத காலம். எனவே சாப்பாட்டு நேரத்தில் பயணத்தை நிறுத்தி உணவு சமைத்து அனைத்து வீரர்களுக்கும் பந்தி பரிமாறி முடித்த பின்னரே பயணம் புறப்பட்டிருக்க வேண்டும். செல்லும் வழியெங்கும் கடுமையான மழை. எனவே குதிரைகள் பல நேரங்களில் ஓடிச் செல்லவில்லை, நீந்தியே சென்றிருக்கின்றன. சென்றவர்கள் அனைவருமே ஊருக்குப் புதியவர்கள் சரியான பாதையைக் கண்டறிந்து செல்வதில் பெரும் சிரமங்களும் தடங்கலும் ஏற்பட்டிருக்கும்

இவ்வளவு பிரச்சனைகளையும் சமாளித்து, இத்தனை ஊர்களுக்கும் பயணம் செய்து, அங்குள்ளவர்களோடு போர் செய்து அவர்களை வெற்றி கண்டு ஏழு நாட்களுக்குள் படையெடுப்பை முடித்து விட்டார் என்று இவர்கள் சொல்வார்கள் அதை நாம் நம்ப வேண்டுமாம்.

மேலும் எந்தெந்த ஊர்களின் கோவில்களும்சிலைகளும் மாலிக்காபூரால்உடைத்து நொறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதோ அந்த ஊர்க் கோவில்கள் எந்தச் சேதமுமின்றி மிக நல்ல முறையில் இருக்கின்றன. சில கோவில்களில் 14 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே தொடர்ச்சியான கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன.

14ஆம்நூற்றாண்டிற்குப் பிறகு முழுமையாகப் புதிதாகக் கட்டப்பட்டதாக செய்திகள் ஏதும் இல்லை. பிறகெப்படி அந்த ஊர் கோவில்களையெல்லாம் மாலிக்காபூர் இடித்தார் என்பதை ஏற்க முடியும்? அல்லது இடித்துவிட்டு இடிக்காத மாதிரி கோவில்களைக் கட்டிக் கொடுத்து விட்டுப் போனாரோ என்னவோ?[96]

மாலிக்காபூரின் படையெடுப்பின் போது 12,000 வைணவர்கள் ஸ்ரீரங்கத்தில் கொல்லப்பட்டதாக விவரிக்கிறார்கள்வரலாற்று அறிஞர்கள். 1875 ஆம் ஆண்டில் ஸ்ரீறிரங்கத்தின் மொத்த மக்கள் தொகையே 11,271 அதிலிருந்து 550 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற படையெடுப்பில் 12,000 பேர் எப்படி கொல்லப்பட்டிருக்க முடியும்?[97]

96. (த.மா.ஒ.ஆ பக் 67)
97. (A Manual of The Trichinopoly District in The Presidency of Madras
மாலிக்காபூர் செ.திவான் விகடன் வெளியீடு பக் 30)

## வைஷ்ணவ ஸ்ரீயின் வார்த்தையில்

ஸ்ரீரங்கம் கோவில் இடிக்கப் பட்ட பின்னர் அங்கிருந்த உத்சவரான அழகிய மணவாளரின் சிலை முஸ்லிம் படைவீரர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது என்பது பிரபலமான கதை.

அந்தக் கதையில் உள்ள குழப்பங்களைக் கண்ட ஆராய்ச்சி யாளர் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ கூறுகிறார் நம் பெருமாள் கி.பி.1311ஆம் ஆண்டு நடைபெற்ற படையெடுப்பின்போது திருவரங்கத்தை விட்டு அகன்று மீண்டும் கி.பி.1323க்கு முன்பாக ஆஸ்தானம் எழுந்தருளினாரா? அல்லது கி.பி.1311 ஆம் ஆண்டு படையெடுப்பின்போது திருவரங்கத்தைவிட்டு அகன்று 1371இல் மீண்டாரா? அல்லது கி.பி.1323ஆம் ஆண்டு நடந்த உலுக்கான் படையெடுப்பின் போது பிள்ளை லோகாசார்யாரால் எழுந் தருளச் செய்து கி.பி.1371ல் ஆஸ்தானம் எழுந்தருளினாரா?

''நம்பெருமாள்தான் சோதிவாய் திறந்து வார்த்தை அருளிச் செய்யக் கூடுமானால் இந்தக் கேள்விகளுக்கான சரியான விடை கிடைக்க வாய்ப்பு உண்டு'' என எழுதுகிறார். அதாவது பெருமாளே வந்து சொன்னால்தான் இதற்கு விடை கிடைக்கும் என்கிறார்.[98]

உண்மை என்ன?

பேராசிரியர் டாக்டர் என். வெங்கட ரமணய்யாவின் துவக்க காலத்தில் தென் இந்தியாவில் முஸ்லிம்கள் விரிவடைதல் என்ற நூலில் மாலிக்காபூர் தேவகிரியைக் கைப்பற்றினார். மக்களை மிக அன்பாக நடத்தினார். மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தினார். கொலை கைது என எந்தவிதமான கொடுஞ் செயலிலும் அவர் ஈடுபடவில்லை. இந்த நடவடிக்கைகள் மூலம் மக்களின் உள்ளத்தில் அமைதியை விதைத்தார். புதிய முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று அவர்கள் நம்பியதாக எழுதியுள்ளார்.[99]

முரண்பட்ட தகவல்களே ஒன்றை பொய்யென்று சொல்வதற்கு போதுமான சான்றாகும் என்பார்கள். மாலிக்காபூரின் படையெடுப்பு குறித்த வரலாறுகள் முரண்பாட்டின் மொத்த உருவமாக காட்சி தருகின்றன. இதில் உள்ள முரண்பாடுகள் எதையும் கவனத்தில் கொள்ளாமல் நம்முடைய வரலாற்றாசிரியர்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் சொல்பவர்களின் நோக்கம் என்ன என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

98. (ஸ்ரீரங்க மகாத்மியம் எனப்படும் ஸ்ரீரங்கம் கோவில் வரலாறு
மாலிக்காபூர் செ.திவான் விகடன் வெளியீடு பக்94)
99. (The Yearly Muslim Expansion in South India p 73
மாலிக்காபூர் செ.திவான் விகடன் வெளியீடு பக் 83)

## *கஜினி முஹம்மது*

சுருக்கமாக வரலாற்றைச் சொல்லி ஆழமான முஸ்லிம் வெறுப்பை உண்டாக்கப் பயன்படுபவர் கஜினி முஹம்மது. சோமநாதபுர ஆலயத்தின் மீது 17 முறை படையெடுத்தார். கொள்ளையடித்தார்.பின்னர் கோவிலை இடித்தார் என இப்படி மிகமிக சுருக்கமாகவே இவரது வரலாறு கூறப்படுகிறது. இந்தக் குறைந்த வரிகளுக்குள்ளாகவே முஸ்லிம்களும் முஸ்லிம் மன்னர்களும் மற்றவர்களை சகித்துக் கொள்ளாத மகா கெட்டவர்கள் என்ற வெறுப்புணர்வு ஊட்டப்பட்டு விடுகிறது.

அவர் வாழ்ந்த காலம் குறித்த எவ்வித விளக்கமும் இல்லாமல் அரசியல் ரீதியாக அவர் எடுத்த நடவடிக்கைகளுக்கு மதச் சாயம் பூசுவதாலும் ஏற்பட்ட விளைவு இது.

கோவில்கள் என்பது இன்று இருப்பதைப்போல ஆன்மீக வழி பாட்டுக் கூடங்களாக மட்டும் அப்போது இருக்கவில்லை. மன்னர்களின் மறைவிடங்களாகவும் அரசின் செல்வங்களைச் சேர்த்து வைக்கும் கஜானாக்களாகவும் பயன்படுத்தப்பட்டன. அதனால் தான் அரசர்களின் கோட்டைக் கொத்தளங்களைப்போல கோவில்களுக்கும் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கோவிலைச் சுற்றி பெரும் பெரும் அகழிகள் தோண்டி முழு நேரமும் வீரர்களால் கண்காணிக்கப்பட்டன. தஞ்சை பெரிய கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில் போன்ற இடங்களில் பெரும் பெரும் அகழிகளை இன்றும் காணலாம். அது போல சமீபத்தில் பெரும் புயலைக் கிளப்பிய திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில் சொத்துக்களும் மன்னர் கால கஜானாக்களாகத் தான் கோவில்கள் திகழ்ந்துள்ளன என்பதற்கு சான்றுகளாகும். அங்குள்ள ஆறு அறைகளில் மட்டும் இரண்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு கோவில்களையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது.

திருவரங்கம் ரங்க நாதர் கோவிலிலும் இதுபோன்ற புதையல்கள் உண்டு என்கிறார் திருச்சியைச் சேர்ந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு கிருஷ்ணமாச்சாரியார். இவையனைத்தும் நம் கருத்துக்கு மேலும் வலுசேர்க்கின்றன

ஆகையால் படையெடுப்புகளை மேற்கொள்பவர்களின் முதல் இலக்கு கோவில்களாகத்தான் இருக்கும் அவர்கள் இந்து மன்னர்களாக இருந்தாலும் சரியே! வரலாறு நெடுகிலும் இதற்கான சான்றுகள் நிறைந்து கிடக்கின்றன.

உதாரணத்திற்கு சில...

## பரசுராம் கொள்ளையிட்ட சிருங்கேரி

1791ல் மூன்றாம் மைசூர் போர் நடைபெற்றது. அப்போது பரசுராம் பாவே என்ற மராட்டியத் தளபதி கர்னாடக மாநிலம் சிருங்கேரி மடத்தைத் தாக்கினான். 60,00,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அங்கிருந்து கொள்ளையடித்துச் சென்றான். சாரதா தேவி சிலையை பீடத்திலிருந்து பெயர்த்தெடுத்து உடைத்தெறிந்தான்.(100)

## பாண்டிய மன்னன் சிதைத்த சமணக் கோவில்

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் இருந்த சமணக் குகைக் கோயில் 13 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களால் பதினென்பூமி வின்னகரம் என்ற வைணவக் கோவிலாக மாற்றப்பட்டது.

## மகேந்திரவர்மன் இடித்த சமணப்பள்ளி

பல்லவ மன்னனாகிய மகேந்திர வர்மன் சைவ சமயத்தைப் பின்பற்றினான். பாடலி புத்திரத்தில் இருந்த சமணப் பள்ளியை இடித்துத் தள்ளி விட்டு அவற்றின் சிதைவுகளைக் கொண்டு திருவதிகையில் குணரத ஈச்சரம் என்று தன் பெயரில் கோவிலைக் கட்டிக் கொண்டான் பௌத்த கோவிலைக் கொள்ளையடித்த திருமங்கையாழ்வார்.(101)

கி.பி.8 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டின் ஆலியை ஆட்சி செய்து கொண்டிருந்தவர் குறுநில மன்னரான திருமங்கையாழ்வார். வைணவ சமயத்தை சேர்ந்த இம்மன்னன் நாகப்பட்டினம் பௌத்த கோவிலைக் கொள்ளையடித்தான். அங்கிருந்த பொன்னாலான புத்தர் சிலையைக் கொண்டு வந்து தங்கத்தை உருக்கி ஸ்ரீரங்கக் கோவிலின் விமான மண்டப கோபுரம் உள்ளிட்ட பல பணிகளை செய்து முடித்தான். (102)

## புத்த விகாரங்களைக் கொள்ளையிட்ட சடையமாறன்

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் மன்னன் வரகுண பாண்டியனின் மகன் சடையமாறன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றான். பல நகரங்களையும் புத்த விகாரங்களையும் கொள்ளையிட்டான். அங்குள்ள புத்தர் சிலைகளையும் விலையுயர்ந்த பல பொருட்களையும் கைப்பற்றி வந்தான்.(103)

100. (தமிழகத்தில் மாலிக்காபூர் ஓர் ஆய்வு பக் 71
Sardesi J.S. The History of Marathas Vol 3 p 189)

101. (பல்லவர் வரலாறு பக் 275 - வரலாற்று வெளிச்சத்தில் ஔரங்கஜேப் விகடன் பிரசுரம் - பக் 318
தெய்வப்புலவர் சேக்கிழாரடிகள் அருளிய திருத்தொண்டர் மாக்கதை ப.இராம் நாதப்பிள்ளை சு.அ.இராமசாமிப் புலவர் குறிப்புரைகளுடன் சென்னை 1977)

102. (நாலாயிர திவ்ய பிரபந்தம் பக்கம் 207 பால சரஸ்வதி பி. கிருஷ்ணமாச்சாரிய ஸ்வாமிகள் பரிசோதித்து வெளியிட்டது)

103. (வரலாற்று வெளிச்சத்தில் ஔரங்ஜேப் விகடன் பிரசுரம் (வ.வெ.ஔ.வி.பி.) - பக் 345 இது இலங்கையின் வரலாற்றை சொல்லும் மகா வம்சத்தில் இடம்பெற்றுள்ளன செய்தி)

## இலங்கை கோவில்களை இடித்த ராஜராஜ சோழன்

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழன் இலங்கையின் மீது படையெடுத்தான் அனுராதாபுரம், பொலனருவ ஆகிய இடங்களில் இருந்த புத்த கோவில்களை இடித்து தரைமட்டமாக்கினான்.அந்த ஊர்களின் பெயர்களை மாற்றி ஜனநாத மங்கலம் என தன் பெயரைச் சூட்டினான்.(104)

இப்படி இன்னும் பல..

முஸ்லிம் மன்னர்கள் கோவிலை இடித்தார்கள் என்று சொன்ன வரலாற்றாசிரியர்கள் அதற்குரிய காரணத்தைச் சொல்லியிருந்தால், அல்லது இதுபோல இந்து மன்னர்களும் இந்துக் கோவில்களை இடித்திருக்கிறார்கள் என்ற உண்மையையும் சேர்த்து சொல்லிக் கொடுத்திருந்தால் தற்போது முஸ்லிம்கள் மீது ஏற்பட்டிருக்கும் தப்பான எண்ணம் ஏற்பட்டிருக்காது.

மேலும் இந்து மன்னர்களின் படையெடுப்பையும், கோவில் இடிப்பையும் அவர்களது அரசியல் நடவடிக்கையின் ஒரு அம்சமாகப் பார்ப்பதைப் போல முஸ்லிம் மன்னர்களின் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருந்தால் எந்த விதமானக் குழப்பத்திற்கும் வேலை இருந்திருக்காது.

104. (இழப்பதற்கு ஏதுமில்லை - பக் 66
(வ.வெ.ஔ.வி.பி.) - பக் 349 கே.கே.பிள்ளை, சோழர் வரலாறு 1977 சென்னை பக் 191)

# 7

# வாளின் துணை கொண்டு வளர்ந்ததா இஸ்லாம்?

இஸ்லாத்தின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாத சிலர் அதை ஒரு கோரமான மதமாக சித்தரிக்க கடும் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அந்த வகையில் இஸ்லாத்தின் வளர்ச்சி இயற்கையாக நிகழ்ந்ததல்ல. உருட்டி மிரட்டி செயற்கையாகச் செய்யப்பட்டது என்று கூறி வருகிறார்கள். அதன் உண்மைத் தன்மையைக் கொஞ்சம் ஆய்வோம்.

## இஸ்லாத்தில் இடமில்லை

ஒருவருக்கு நாம் செய்யும் மரியாதை அவர் ஏற்றுக் கொண்ட அடிப்படையில்தான் இருக்க முடியும். அந்த வகையில் ஒருவரைக் கட்டாயப்படுத்தி இஸ்லாத்தில் இணையச் சொன்னால் அந்த இணைப்பை இஸ்லாம் ஏற்க வேண்டும். அவ்வாறு ஏற்கிறதா என்று பார்த்தால் அதை எதிர்த்துப் பேசுகிறது குர்ஆன்.

**"இந்த மார்க்கத்தில் எவ்வித வற்புறுத்தலும் இல்லை. வழிகேட்டிலிருந்து நேர் வழி தெளிவாகி விட்டது. தீய சக்திகளை மறுத்து அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார்".**[105]

மார்க்கத்தில் நிர்பந்தப்படுத்தி யாரையும் இணைக்க முடியாது என்று திருமறையின் இவ்வசனம் தெளிவுபடுத்துகிறது. இந்த வசனம் இறங்கிய பின்னணி இன்னும் அழுத்தமாக இந்தக் கருத்தை கூறுகிறது.

நபிகளாரின் வருகைக்கு முந்தைய மதினாவில் ஒரு குழந்தைக்கு கடுமையான நோய் ஏற்பட்டால் குழந்தையின் தாய், தன் பிள்ளைக்கு நோய் நீங்கி விட்டால் என் குழந்தையை யூதனாக்கி விடுகிறேன் என்று நேர்ச்சை செய்து கொள்வாள். இப்படி சில குழந்தைகள் யூதர்களிடம் வளர்ந்து வந்தனர்.

இந்த நிலையில் இஸ்லாம் மதினாவிற்குள் அடியெடுத்து வைத்தது. நபிகளாரிடம் செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்து துரோகம் செய்த காரணத்தால் பனூ நளீர் என்ற யூதக் கூட்டத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை நபியவர்களால் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சிலருடைய வாரிசுகளும் அந்த யூதர்களோடு வெளியேறும் நிலை இருந்தது.

105. (அல்குர்ஆன் - 2 : 256)

**அவர்களை யூதர்களோடு செல்ல அனுமதிக்கக் கூடாது. அவர்கள் எங்கள் வாரிசுகள். அவர்களாக கட்டாயமாக இஸ்லாத்திற்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்று முஸ்லிம்கள் கோரியபோதுதான் இறைவன் இந்த வசனத்தை இறக்கி வைத்தான்.**[106]

*தமது சொந்தப் பிள்ளைகள் மீதே தாம் விரும்பும் கொள்கையைத் திணிக்க முடியாத மார்க்கத்தில் அன்னியர்களை அடித்து சித்ரவதை செய்து ஏற்க வைப்பது எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்?*

*கட்டாயத்தின் பேரிலாவது மக்கள் முஸ்லிமாக இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்பியிருந்தால் வானவர்களைப் படைத்ததைப் போல இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களாக மனிதர்களையும் படைத்திருப்பான்.*

*மனிதப் படைப்பின் நோக்கம் அதுவல்ல. நன்மை தீமையை அவனுக்கு நாம் தெளிவு படுத்தி விட வேண்டும். தனது பகுத்தறிவைப் பயன்படுத்தி தனக்கான வழியை தேர்வு செய்து வாழும் சுதந்திரத்தை அவனுக்கு வழங்கி விட வேண்டும். அதன் பிறகு அவனது வாழ்வை பரிசீலித்து அதற்குத் தகுந்த பரிசளிக்க வேண்டும். இதுதான் மனிதப் படைப்பில் இறைவனின் விருப்பம். திருக்குர்ஆனும் இதைத் தெளிவுபடுத்துகிறது.*

**"அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இணை கற்பித்திருக்க மாட்டார்கள்.உம்மை அவர்களுக்கு காவலராக நாம் ஆக்கவில்லை. நீர் அவர்களுக்குப் பொறுப்பாளரும் இல்லை".**[107]

**"(முஹம்மதே !) அவர்களின் புறக்கணிப்பு உமக்குப் பெரிதாகத் தெரிந்தால் பூமியில் சுரங்கத்தை ஏற்படுத்தி, அல்லது வானத்தில் ஏணியை அமைத்து அவர்களிடம் அற்புதத்தைக் கொண்டு வாரும் பார்க்கலாம். அல்லாஹ் நாடியிருந்தால் அவர்களை நேர்வழியில் ஒன்று சேர்த்திருப்பான். அறியாதவராக நீர் ஆகிவிடாதீர்".**[108]

**"(நபியே)அவர்கள் நம்பவில்லைஎன்பதற்காக உம்மையே அழித்துக் கொள்வீர் போலும். நாம் நினைத்திருந்தால் வானிலிருந்து அவர்களுக்கு அற்புதத்தை இறக்குவோம்.அவர்களின் கழுத்துக்கள் அதன் முன்னே பணிந்து விடும்".**[109]

**"(நபியே) நீர் விரும்பியோரை உம்மால் நேர் வழியில் செலுத்த முடியாது. மாறாக தான் நாடியோருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறான்".**[110]

106. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) நூல் : அபூதாவூது 2307
107. (அல்குர்ஆன் - 6 : 107)
108. (அல்குர்ஆன் - 6 : 35)
109. (அல்குர்ஆன் - 26 : 3,4, 18 : 7)
110. (அல்குர்ஆன் - 28 : 56)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை எடுத்துச் சொன்னபோது ஏற்க மறுத்தவர்களை நினைத்து மிகுந்த கவலை கொண்டார்கள். அந்தத் தருணங்களில்தான் இந்த வசனங்கள் அனைத்தும் இறக்கியருளப்பட்டிருக்கின்றன. அவர்கள் இஸ்லாத்தை ஏற்று விட வேண்டும் என்று எல்லை மீறி விரும்புவதையே இறைவன் கண்டிக்கிறான்.

**"ஏற்பவர்கள் ஏற்கட்டும் மறுப்பவர்கள் மறுக்கட்டும்".**(111)

உமக்கு ஏன் இத்தனை வருத்தம்? ஏற்றுத்தான் ஆக வேண்டுமென்றால், என்னால் அப்படி ஆக்கியிருக்க முடியாதா என்று கேட்கிறான். இத்தகைய மார்க்கத்தில் இறுக்கிப் பிடித்து இடையூறு செய்து ஏற்கச் செய்வதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

ஒரு வாதத்திற்கு கட்டாயத்தின் பேரில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்பதாக வைத்துக் கொண்டாலும் அவர் முஸ்லிமாகி விடுவாரா என்றால் ஆகமாட்டார் என்கிறது இஸ்லாம்.

**"மனதில் இறை நம்பிக்கை நிறைந்திருக்க கட்டாயத்தின் பேரில் இறைவனை மறுத்தவர், உண்மையில் இறைவன மறுத்தவராக ஆக மாட்டார் என்கிறது திருமறைக் குர்ஆன். மறுப்பவரின் நிலைதான் ஏற்பவருக்கும்".**(112)

**"எண்ணங்களின்படியே செயல்களுக்கு கூலி வழங்கப்படும் என்றார்கள் நபிகள் நாயகம் அவர்கள்".**(113)

எண்ணங்களுக்கு எதிராக செயல்படுகிறவருக்கு இஸ்லாத்தின் அடிப்படையில் கூலி எப்படி கிடைக்கும்?

நபிகளாரின் காலத்தில் முஸ்லிம்களோடு சேர்ந்து கொள்வதால்கிடைக்கும் ஆதாயங்களுக்கு ஆசைப்பட்ட சிலபேர், முஸ்லிம்களைப் பார்த்து நாங்களும் முஸ்லிம்கள்தான் என்று நடிக்க ஆரம்பித்தார்கள். உண்மையில் அவர்களுடைய உள்ளத்தில் இஸ்லாம் இல்லை. இவர்களை முனாஃபிக் சந்தர்ப்பவாதி என்ற பெயரில் இஸ்லாமிய வரலாறு அறிமுகப்படுத்துகிறது. நரகில் அடித்தட்டில் இருப்பவர்கள் இவர்களே என்று திருமறைக் குர்ஆன் தீர்ப்பளிக்கிறது. (114)

ஆகையால் கட்டாயப்படுத்தி இஸ்லாத்தை ஏற்கச் செய்வதற்கு அனுமதி இல்லை என்று மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

---

111. (அல்குர்ஆன் - 18 : 29)
112. (அல்குர்ஆன் - 16 : 106)
113. அறிவிப்பாளர் : உமர் (ரலி) நூல் : புஹாரி 1, 54, 2529, 3898, 5070, 6689, 6953, முஸ்லிம் 3530, திர்மிதி 1571, நஸாயீ 74, 3383, 3734, இப்னுமாஜா 4277
114. (அல்குர்ஆன் - 4 : 145)

இஸ்லாத்தில் இதற்கு அனுமதியில்லையென்றாலும் இஸ்லாத்தின்மீது கொண்ட வெறியால் முஸ்லிம் மன்னர்கள் இப்படி செய்திருக்கிறார்கள் என்று சிலர் கூறலாம். இந்த வாதத்திலும் உண்மை யில்லை.

இஸ்லாத்தின்மீதுபற்றுக் கொண்டவன்தான்அதை வளர்க்கநினைப்பான். தங்கள்வாழ்க்கையிலேயே இஸ்லாத்தைக் கடைபிடிக்காத மன்னர்கள் இஸ்லாத்தை எப்படி வளர்த்திருப்பார்கள் என்பதை சிந்திக்க வேண்டும்.

'பதவி சுகத்திற்காக படையெடுத்து வரக்கூடாது'

'ஆடம்பர வாழ்வில் அமிழ்ந்து போகக் கூடாது'

'மக்கள் பணத்தில் சல்லிக் காசைக்கூட அநியாயமான முறையில் தொட்டு விடக்கூடாது'

'பொருள் வசதிப் படைத்தவர் ஜகாத், ஹஜ் போன்ற செலவு பிடிக்கும் வணக்கங்களைச் செய்திட வேண்டும்'.

இப்படி இஸ்லாம் கூறும் ஏராளமான சட்டங்களை ஏறெடுத்தும் பார்க்காதவர்கள், அவற்றை காலில் போட்டு மிதித்தவர்கள் இஸ்லாத்தை வளர்க்கப் பாடுபட்டார்கள் என்று கூறுவது சொல்பவர்களுக்கே கொஞ்சம் கூடுதலாகத் தெரியவில்லையா?

மொகலாயர்கள், லோடிகள், செய்யதுகள், கில்ஜிகள், சுல்தான்கள், நிஜாம்கள் என 231 மன்னர்கள் தலைமையில் 1170 ஆண்டுகள் இந்தியாவை முஸ்லிம்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாட்டை அவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல் இத்தனை ஆண்டு காலம் ஆட்சி செய்திருக்க முடியுமா?

நவீன ஆயுதங்களோடு வந்து நம்மைஅடிமைப்படுத்திய ஆங்கிலேயர்களை ஆயுதங்களே இல்லாத நம் முன்னோர்கள் இருந்த இடம் தெரியாமல் துரத்தி அடிக்கவில்லையா? அப்படிப்பட்டவர்களுக்கு இந்த முஸ்லிம் மன்னர்கள் எம்மாத்திரம்?

இவர்கள் இந்தியாவைச் சுரண்டி இங்கிலாந்தை வளர்த்த ஆங்கிலேயர்களைப் போலல்லாமல் இங்கு வந்தவர்கள் இந்தியர்களாகவே மாறிப் போனார்கள். இந்துக்களின் வெறுப்புக்கு ஆளாகி விட்டால் நம்மை இருக்க விடமாட்டார்கள் என்பதை உணர்ந்து தம்முடைய வாழ்க்கை முறையை அவர்களுக்கு இசைவாகவே மாற்றிக் கொண்டார்கள். மாட்டிறைச்சி உண்பதை மார்க்கம் அனுமதித்தாலும் இந்துக்களை ஈர்ப்பதற்காக வேண்டாம் என விலக்கிக் கொண்டார்கள்.

அதனால்தான் இங்குள்ள இந்துக்கள் ஆங்கிலேயர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஆயுதப் போர் நடந்தபோது முஸ்லிம்களின் வெற்றிக்காக தங்களது கோவில்களில் யாகம் நடத்தி ஆண்டவனை அழுதழுது பிரார்த்தித்தார்கள்.[115]

முதல் இந்திய சுதந்திரப் போரில் கூட எத்தனையோ மன்னர்கள் இருக்க ஆங்கிலேயனை எதிர்ப்பதற்கு ஒரு முஸ்லிம் மன்னரையே தம் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கட்டாய மதமாற்றம் நடந்திருந்தால் இந்தியாவில் முஸ்லிம்கள் ஏன் சிறுபான்மையினராக இருக்கிறார்கள்?

இந்தியாவிற்கு வந்த முஸ்லிம் மன்னர்கள் மதம் மாற்றினார்கள் என்றால் அவர்களின் வருகைக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் இஸ்லாம் நுழைந்து விட்டது என்பதற்கு ஏராளமான சரித்திரச் சான்றுகள் இருக்கின்றனவே அது எப்படி நடந்தது?

மன்னர்கள் வந்த பிறகும் அவர்களின் செல்வாக்கு செல்லுபடியாகாத தென்னிந்தியாவில் இஸ்லாத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்ததே அது எப்படி?

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அதாவது நபிகளார் உலகில் வாழ்ந்து கொண்டிருந்த நூற்றாண்டில் கேரளாவின் கொடுங்களூரில் முஸ்லிம்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாக அப்போதே கட்டப்பட்ட ஜும்ஆ பள்ளிவாசல் இன்றும் இருக்கிறது.

அதே ஏழாம் நூற்றாண்டில் மதுரையில் கூன்பாண்டிய மகாராசாவின் ஆட்சி காலத்தில் முஸ்லிம்கள் நிலம் வாங்கியதற்கான ஆதாரம் மதுரை கோரிப்பாளையம் கல்வெட்டில் பதிவாகியிருக்கிறது.

சோழர்களின் தலை நகரான திருச்சி உறையூரில் கி.பி.734ல் கட்டப்பட்ட பள்ளிவாசல் இன்றும் திருச்சி கோட்டை இரயில் நிலையம் அருகில் முஸ்லிம்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதே காலகட்டத்தில் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான கல்லுப் பள்ளிவாசல்கள் தமிழகம் முழுவதிலும் முஸ்லிம்களின் வருகை குறித்த வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

அப்போது இஸ்லாத்தைத் தழுவியவர்கள் எப்படித் தழுவினார்கள்? எந்த முஸ்லிம் மன்னன் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்தான்?

எந்தக் காலத்திலும் இஸ்லாம் ஆதிக்க சக்தியாக தனது அடிகளை எடுத்து வைக்கவில்லை. அடிமைகளாகவும் பலஹீனர்களாகவும் இருந்தவர்கள் வழியாகத்தான் இஸ்லாம் வளர்ந்திருக்கிறது.

115. (பாலகிருஷ்ணன் எழுதிய டணாயக்கன் கோட்டை)

நபிகள் நாயகத்திற்கு முந்தைய இறைத் தூதர்கள் காலத்தில்கூட இதுதான் இஸ்லாத்தின் நிலையாக இருந்தது. அற்பர்களின் கூட்டம் தான் உம்மை அண்டியிருக்கிறது. ஆற்றலும் அதிகாரமும் படைத்த நாங்கள் எப்படி அவர்களோடு சேர்ந்து உமக்குப் பின்னால் வரமுடியும்? என்று ஒவ்வொரு காலத்திலும் இறைத் தூதர்களைப் பார்த்து அதிகார வர்க்கத்தினர் கேட்டிருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் அவர்களிடம் கூட செல்வந்தர்களும் உயர் குலத்தார் என கருதப்பட்டவர்களும் வந்து தாழ்ந்த மக்களே உம்மை தாங்கிப் பிடிப்பதால் உம்மைப் பின்பற்ற எங்களுக்கு தயக்கமாக இருக்கிறது. எனவே சட்டத்தில் கொஞ்சம் சமரசம் செய்து எங்களுடைய மேன்மைக்கிணங்க அவற்றை சரி செய்து தாரும் நாங்களும் உம்மோடு சேர்ந்து கொள்கிறோம் என்று கோரிக்கை வைத்த நிகழ்ச்சி கூட நடைபெற்றிருக்கிறது.[116]

இந்த நிலைதான் இன்று வரைத் தொடர்கிறது.ஒருகாலத்திலும் அடக்கு முறையின் வழியாக இஸ்லாம் அரியணை ஏறியதில்லை.

வாள் முனையில்தான் இஸ்லாம் பரப்பப்பட்டது என்பதை ஒரு வாதத்திற்கு ஏற்றால்கூட இஸ்லாமியர்களின் வாட்களே வாலாட்டாத நாடுகளுக்குள் அது புகுந்தது எப்படி? இன்றைக்கு அந்த நாடுகளில் முழுக்க முழுக்க முஸ்லிம்களாக இருக்கின்றனரே இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?

தொடர்ச்சியாக இந்துக்களின் ஆட்சியின்கீழ்இருந்த இந்தோனேஷியா உலகிலேயே முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட முதல் நாடாக இருப்பது எப்படி?

700 ஆண்டுகள் முஸ்லிம்களின் ஆட்சியில் இருந்த ஸ்பெ யினில் இப்போதுதான் இஸ்லாம் கொஞ்சம் கொஞ்சமாக துளிர் விட்டுக் கொண்டிருப்பது ஏன்?

காஷ்மீரில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே துவங்கிய இந்து மன்னர்களின் ஆட்சி நாடு சுதந்திரம் அடைந்த பிறகும் கூட அவர்களின் கைகளில் தான் இருந்தது. அங்கே முஸ்லிம்கள் 90 சதவீதமும் மற்றவர்கள் 10 சதவீதம் மட்டுமே இருப்பதற்குக் காரணம் என்ன?

மலேசியா, ஜாவா, சுமத்ரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், சீனா ஆகிய நாடுகளிலெல்லாம் எந்த முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்புகளும் இன்றி கோடிக்கணக்கான முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனரே அது எப்படி?

116. (அறிவிப்பவர் : ஆயிஷா(ரலி) நூல் : திர்மிதி 3254))

இன்று உலகம் முழுவதிலும் இஸ்லாத்திற்கு மாறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறதே. கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபையின் தலைவர் போப் இரண்டாம் ஜான்பால் கிறிஸ்தவத்தைவிட வேகமாக இஸ்லாம்வளர்கிறது, கிறிஸ்தவர்கள் முன்னிலும் வேகமாகப் பணியாற்ற வேண்டும் என வாடிகன் இணைய தளத்தின் வழியாக உலக கிறிஸ்தவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளாரே. இது எப்படி நடக்கிறது?

கி.பி.20002010க்கு இடைப்பட்டகாலத்தில் அமெரிக்காவில் மட்டும் 1200 பள்ளிவாசல்கள் புதிதாக கட்டப்பட்டிருப்பதாக ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது இதுவெல்லாம் எப்படி நடக்கிறது? இப்போது இவர்களை மிரட்டிக் கொண்டிருப்பவர்கள் யார்? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொரு கோணத்தில் சிந்தித்தால், மிரட்டி ஆள் பிடிக்கும் வேலையை புத்தியுள்ளவன் எவனும் செய்யவே மாட்டான் எனப்து புரியும் ஏனெனில் அதைப் போல ஆபத்தான காரியம் எதுவுமில்லை.

கட்டாயத்தின் பேரில் முஸ்லிமாகி இருப்பவனை வைத்துக் கொண்டு எந்த வேலையும் செய்ய முடியாது. வெறுப்பில் இருப்பவன் காலை வாரத் தான் காத்திருப்பான். நம்முடைய நடவடிக்கைகளையெல்லாம் எதிரிகளுக்குப் போட்டுக் கொடுப்பான். தனிமையில்கூட தீர்த்துக் கட்ட வாய்ப்புக் கிடைத்தால் அதையும் செய்து முடிப்பான். இப்படிப்பட்ட ஆபத்தானவர்கள் அருகில் வைத்துக் கொள்ளும் வேலையில் யார் தான் ஈடுபடுவர்?

இஸ்லாத்தின் வளர்ச்சி அதன் கொள்கையால், எளிமையால், அறிவார்ந்த வழிகாட்டலால் நிகழ்ந்தது. நிகழ்ந்து கொண்டிருக்கிறது அது உண்மை மார்க்கம் என்பதை நிரூபிக்கிற அறிவியல் பூர்வமான சான்றுகள் குர்ஆன் முழுவதிலும் நிரம்பியிருக்கின்றன. அதைப் படிக்கிறவர்கள் தமது வாழ்க்கை நெறியாக அதை அரவணைத்துக் கொள்கிறார்கள்.

இந்தியாவில் சாதியின் பெயரால் இழிவுபடுத்தப்பட்டவர்கள் சமூக விடுதலைக்காக இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் உள்ள ஏற்றத் தாழ்வுகளற்ற சமத்துவக் கோட்பாடு அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

சாதிக்கொடுமைகளுக்கு எதிராக இயக்கம் நடத்திய தலைவர்கள் இஸ்லாத்தைத்தான் தீர்வாக முன்வைத்தார்கள். அதன் விளைவாக 50 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் பல கிராமங்கள் இஸ்லாமிய சோலையில் இளைபாறத் துவங்கியது. எண்ணற்ற ஊர்களை அதற்கு உதாரணம் காட்டலாம்

குறிப்பாக சமணர்கள், பௌத்தர்கள், தலித்கள், நாடார்கள், கள்ளர்கள் ஆகிய சாதியினர் தமிழகத்தில் பெரும் நெருக்கடிக்கு ஆளாகியிருந்தனர். இவர்கள் அனைவருமே இந்துக்கள் என்ற பொதுச் சொல்லில் இன்று குறிப்பிடப்பட்டாலும் இவர்களுக்கு எதிராக ஆதிக்க சாதிகள் அன்று நடத்திய காட்டு தர்பார் கற்பனைக்கு அப்பாற்பட்டது.

இந்தியாவில் கோலோச்சிய பௌத்தம் இன்று இருந்த இடம் தெரியாமல் ஒழிக்கப்பட்டு விட்டது. இலங்கை, சீனா, ஜப்பான் என கரையேறி இந்தியாவில் காணாமலே போய்விட்டது. காரணம் அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகள்.

தமிழகத்தில் சில இடங்களில் முஸ்லிம்கள் அஞ்சு வர்ணத்தார் என்று அழைக்கப்படுகின்றனர். நான்கு வர்ணத்தைத் தாண்டி பஞ் சமன் என்றும் அஞ்சாம் சாதி என்றும் அழைக்கப்பட்ட தலித்துகளின் நெருக்கமும் அங்கிருந்த நிலையில் பலர் மதம் மாறியிருக்கிறார்கள் என்ற உண்மையையும் இதன்மூலம் அறிய முடிகிறது.

சமணர்கள் பேசி வந்த தொழுகை, நோன்பு, பள்ளிவாசல் போன்ற தூய தமிழ்ச் சொற்கள் முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் கலந்திருப்பதிலிருந்து அங்கிருந்து கணிசமான மக்கள் இஸ்லாத்தைத் தழுவியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

தமிழக கிராமங்களில் முஸ்லிம்களுக்கும் சில குறிப்பிட்ட சாதியினருக்கும் இடையில் நிலவும் சித்தப்பா, பங்காளி, மாமன், தம்பி போன்ற உறவு முறைச் சொற்களும் செயற்கையாக உருவாக்கப்பட்ட சொற்களாக இருக்க முடியாது. நிஜமான அந்தந்த உறவு நிலையில் உள்ளவர்களின் மதமாற்றத்தால் மாறாமல் அப்படியே இருந்தவர்களுக்கிடையில் இந்த உறவுகள் உருவாகியிருக்கக் கூடும்.

இவ்வாறு தென்னிந்திய வரலாற்றைக் கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் இஸ்லாம் இன்முகத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

இந்து மதத் துறவி விவேகானந்தர் கூறினார்: ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் முகம்மதியரின் படையெடுப்பு ஒரு விடுதலையாக அமைந்தது. ஆதலால்தான் ஐந்தில் ஒரு பங்கினர் முகம்மதியர்களாக மாறினர். இதை சாதித்தது வாளால் என்பதற்கில்லை. வாளாலும் நெருப்பினாலுமே இவை சாதிக்கப்பட்டது என்று கூறுவது மதிகேட்டின் உச்ச நிலையாகும் என்று கூறினார்.[117]

117. (விவேகானந்தர், இஸ்லாமும் இந்தியாவும் ஞானைய்யா அலைகள் வெளியீட்டகம் பக் 124)

8

# விதைக்கப்படும் விஷ முத்திரை

முஸ்லிம்களெல்லாம் தீவிரவாதிகள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்காக வரலாறுகள் எப்படியெல்லாம் வளைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம்.அதுபோல நிகழ்காலச் செய்திகளைத் தாங்கி வரும் ஊடகங்கள், தேசத்தின் தலைமையேற்கும் ஆட்சியாளர்கள், அவர்களை வழிநடத்தும் அதிகாரிகள் எனப் பலரும் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துப் பரவலுக்குக் காரணமாக இருக்கின்றனர். அவற்றை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## தீர்ப்பு சொல்லும் தீவிரவாதிகள்

ஒரு பயங்கரவாதச் செயல் நடந்த இடத்தில் உடனடியாக புலனாய்வு அமைப்புகள்கூட வந்திருக்க மாட்டார்கள். அதற்குள் மீடியாக்கள் வந்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருப்பார்கள். அவர்கள் சார்ந்திருக்கும் இயக்கத்தைப் பற்றிய முழு விபரத்தையும் திரட்டியிருப்பார்கள். உடனடியாகக் கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் என அனைத்தையும் முடித்து அடுத்த அரை மணி நேரத்தில் முழு நீளத் திரைப்படத்தையே மக்களுக்கு முன்னால் காண்பித்துக் கொண்டிருப்பார்கள்.

சாதாரண திருட்டு, கொலை போன்ற குற்றத்தில் துப்புத் துலக்கவே மாதங்கள் பல தேவைப்படுகிறது. சில நேரங்களில் வருடங்கள்கூட ஓடி விடுகிறது. அப்படியிருக்க இவ்வளவு சீக்கிரமாக நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள் என்ற கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது. கேட்டால் எஸ்.எம்.எஸ். வந்தது ஈமெயில் வந்தது என்று உங்களுக்குத் தெரிந்த பெயர்கள் தெரியாத இயக்கங்கள் என வரிசை கட்டி அடுக்குவார்கள். இந்தியன் முஜாஹிதீன் இதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டது என்பார்கள். அந்த இயக்கம் எங்குள்ளது? அதை இயக்குபவர்கள் யார்? அதன் தலைவர் யார்? எப்போது உருவான அமைப்பு? என்று எத்தனை கேள்வி கேட்டாலும் கல்லுளி மங்கனாக இருந்து காரியம் சாதிப்பார்கள்.

ஆனால் ஒன்றில் மட்டும் தெளிவாக இருப்பார்கள். நாம் சொல்கின்ற இயக்கமும் அதில் சம்பந்தப்பட்ட பெயர்களும் முஸ்லிம்களாக மட்டுமே இருக்க வேண்டும். மறந்தும்கூட மக்களின் பார்வை மற்றவர்களின் பக்கம் திரும்பிவிடக் கூடாது என்பதில் குறியாக இருப்பார்கள்.

இயன்றால் அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் தங்களது கருத்தின் பால் இழுத்து அவர்களையும் தவறான பாதையில் வழி நடத்துவார்கள்.

2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் நாள் ஆந்திர மாநிலம் ஹைதராபாத் நகரின் கொனார்க் தியேட்டர் அருகில் மாலை 7:10 மணிக்கு ஒரு குண்டு வெடித்தது. அடுத்த ஐந்து நிமிடத்தில் ஆனந்த் ஹோட்டலில் இரண்டாவது குண்டு. அதற்கடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் வெங்கடாத்திரி தியேட்டரில் மூன்றாவது குண்டு வெடித்தது. 15க்கும் மேற்பட்டவர்கள் மரணம், 115க்கும் மேற்பட்டவர்கள் காயம்.

நகரமே பரபரப்பானது. மத்திய மாநில அரசின் படைகள் விரைந்தன. நஷ்டஈடு, ஆறுதல் என வழக்கம் போல அனைத்துக் காட்சிகளும் அரங்கேறின. மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டேயும், மாநில முதல்வர் கிரண் குமார் ரெட்டியும் சம்பவ இடத்திற்கு நேரில் வந்தனர். அதிகாரிகளிடமிருந்து தகவல்களைக் கேட்டு ஆய்வு செய்து கொண்டிருந்தனர். இடையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு.

இதுவரை எந்த அமைப்பும் குண்டுவெடிப்பிற்குப் பொறுப்பேற்கவில்லை என்கிறார் அமைச்சர் ஷிண்டே. இந்த குண்டு வெடிப்பிற்கும் அக்பருத்தீன் உவைசிக்கும் சம்பந்தம் உண்டா? எனக் கேட்கிறார் ஒரு செய்தியாளர் அப்படி எதுவும் தெரியவில்லை என பதிலளிக்கிறார் அமைச்சர்.

கொஞ்சம் நிதானமாக சிந்தித்துப் பாருங்கள் எத்தனை விஷமத்தனமான கேள்வி இது. இந்தக் கேள்வியின் மூலம் அமைச்சர்கள் அதிகாரிகள் புலனாய்வுத் துறையினர் பொது மக்கள் என அனைவரின் பார்வையையும் ஒரு முஸ்லிமை நோக்கியும் முஸ்லிம் அமைப்பை நோக்கியும் திருப்ப நினைக்கிறார் என்பதைத் தவிர இதற்கு வேறென்ன விளக்கமளிக்க முடியும்?

ஒருவேளை அதற்கு முன் நடந்த குண்டு வெடிப்புகளில் இவருக்கு தொடர்பிருந்தால், அல்லது சந்தேகத்திற்குரிய வேலைகளை அவர் செய்திருந்தால் செய்தியாளரின் கேள்வியில் நியாயம் இருப்பதாகக் கருதலாம்.

இந்தியாவின் முன்னால் தலைமை நீதிபதியாக இருந்தவர் தற்போது இந்தியப் பிரஸ் கவுன்ஸிலின் (பத்திரிக்கைத் துறை) தலைவராக இருப்பவர் நீதிபதி மார்கண்டேய கட்ஜு. இவர் C.N.N. – I.B.N.. தொலைக்காட்சியின் டெவில்ஸ் அட்வகேட் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது கூறிய தகவல்கள் இந்த உண்மைக்கு மேலும் வலுவூட்டுகின்றன.

மக்களின் நலனை முன்னிறுத்தி செயல்பட வேண்டிய மீடியாக்கள் சில நேரங்களில் மக்கள் விரோதியாக செயல்பட்டு அவர்களிடையே பிளவை உண்டாக்கி விடுகின்றன. ஒரு ஊரில் குண்டு வெடித்தால் அடுத்த ஒரு மணி நேரத்தில் நாங்கள் தான் குண்டு வைத்தோம் என்று இந்தியன் முஜாதீன் கூறுகிறது அல்லது ஜய்ஷே முஹம்மது கூறுகிறது அல்லது ஹர்கதுல் ஜிஹாத் கூறுகிறது என ஏதோ ஒரு முஸ்லிம் அமைப்பின் பெயரைக் கூறுகிறார்கள். ஈ மெயிலையும் எஸ்.எம்.எஸ்.ஸையும் அதற்கு ஆதரமாகக் காட்டுகிறார்கள். எஸ்.எம்.எஸ்.ஸும் ஈ மெயிலும் யார் வேண்டுமானாலும் போடலாம். யாருடைய பெயரிலும் போடலாம். அது ஒரு ஆதாரமா?

எந்தவித அறிவும் ஆராய்ச்சியும் இல்லாமல் இவ்வாறு வெளி யிடப்படும் செய்தியால் ஒட்டுமொத்தமாக முஸ்லிம்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இது செய்தியாளர்களின் கவனக் குறைவாலோ அல்லது தவறுதலாகவோ நடப்பது கிடையாது. மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்துவதற்காக வேண்டுமென்றே செய்யப்படும் சதிவேலையாகவே நான் கருதுகிறேன் என்று கூறினார்

## வார்த்தைக் கோளாறு

பயங்கரவாதச் செயலில் ஈடுபடுபவர்கள் எல்லா மதத்திலும் இருக்கின்றனர். அவர்களின் தீவிரவாதத்திற்கு அவர்கள் பின்பற்றும் மதம் ஒருபோதும் காரணமாக இருப்பதில்லை. தீவிரவாதச் செயலை ஒரு ஹிந்து செய்தால் அதற்காக இந்து மதத்தைப் பழிக்க முடியாது. அந்த மதம் அதற்குப் பொறுப்பாகாது. அதுபோலத்தானே ஒரு முஸ்லிம் செய்தாலும் கருதவேண்டும். நடுநிலையாளர்கள் ஒத்துக் கொள்ளும் இந்தக் கருத்தை மீடியாக்கள் ஒத்துக் கொள்வதில்லை.

குண்டு வெடிப்பு வழக்கில் ஒருவன் கைது செய்யப்பட்டால் அவன் பெயரைக் குறிப்பிட வேண்டும் அல்லது அவன் சார்ந்திருக்கும் அமைப்பின் பெயரைக் குறிப்பிட்டு செய்தி வெளியிட வேண்டும். இப்படிச் செய்தால் அதை யாரும் குறை சொல்லப் போவதில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட குற்றவாளி, மதத்தால் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக அவனது பெயருக்கு முன்னால் முஸ்லிம் தீவிரவாதி, இஸ்லாமிய பயங்கரவாதி என்று அடைமொழி கொடுக்கிறார்கள்.

முஸ்லிம் என்ற வார்த்தை வரும் இடத்திலெல்லாம் அதனோடு தீவிரவாதி என்ற சொல்லும் இணைந்தே வருவதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்கிறார்கள். அதன் மூலம் அதைப் படிப்பவர்களின் உள்ளத்தில் முஸ்லிம்கள் என்றால் தீவிரவாதிகள் என்ற எண்ணத்தை வெகு இயல்பாகவே பதித்து விடுகிறார்கள்.

இந்த மரபை மற்றவர்கள் விஷயத்தில் ஏன் இந்த மீடியாக்கள் கடைப்பிடிப்பதில்லை. இந்து தீவிரவாதி, கிறிஸ்தவ தீவிரவாதி, சீக்கிய தீவிரவாதி, பௌத்த தீவிரவாதி, நாத்தீக தீவிரவாதி என்ற சொற்களை எந்தச் செய்தியிலாவது கேட்டிருக்கிறீர்களா? அல்லது எந்தச் செய்தித் தாளிலாவது படித்திருக்கிறீர்களா?

ஒருவேளை பார்த்தால்கூட இது என்ன புதுசா இந்து தீவிரவாதி என்றுதான் கேட்பீர்கள். அதுவே இஸ்லாமியத் தீவிரவாதி என்றால் எந்த எதிர் கேள்வியுமின்றி அதை ஏற்றுக் கொள்ளப் பழகி விட்டோம். அந்த அளவிற்கு அதைத் திரும்பத் திரும்பச் சொல்லி செய்தியாளர்கள் நம்மை பழக்கி விட்டார்கள்.

மற்றவர்களைப்பற்றி சொல்லும்போது நக்ஸலைட்டுகள், மாவோயிஸ்ட்டுகள், உல்ஃபாக்கள் என பெயர் பட்டியலை வாசித்து அட்டெண்டன்ஸ் போடுகிறார்கள் இந்த அறிவு ஜீவிகள்.

நிலம், மொழி, உரிமை, அதிகாரம், என்று கூறிக் கொண்டு எங்கள் நிலம் எங்களுக்கே அதை எதிர்த்து நிற்பவர் சவக்குழிக்கே என்ற கோஷத்தை முன்வைத்து இதுவரை பல்லாயிரக் கணக்கானவர்களை படுகுழிக்கு அனுப்பியிருக்கிறார்களே இவர்களெல்லாம் யார்? எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் செய்துவரும் வேலைகள் என்ன? தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் கடைப்பிடிக்கும் போராட்ட வழிமுறைகள் சாத்வீக வழி ஜனநாயகப் போராட்டங்களா? இந்து, கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம், நாத்தீகம் என இருந்தும் குறிப்பிடவில்லையென்றல் அதன் பொருள் என்ன? அந்த தீவிரவாதிகள் ஒவ்வொருவருக்கும் பின்பற்றும் கொள்கை ஒன்று இருக்கவில்லையா?

மதத்தால் இஸ்லாமியனாக தன்னைக் காட்டிக் கொள்பவனுக்கு முஸ்லிம் தீவிரவாதி என்று அடைமொழி கொடுத்து ஒட்டு மொத்த தீவிரவாதத்தையும் முஸ்லிமின் தலையில் இறக்கி வைத்ததைப் போல இவர்களுக்கும் கொடுத்தால் என்ன அடைமொழி கொடுப்பது? என்பன போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கு அவர்கள் தமக்குத் தாமே பதிலளித்துக் கொள்ளட்டும்.

கடந்த 4.1.2013 அன்று சென்னை வண்ணாரப் பேட்டையில் ஃபஜ் ருல்லா என்பவரின் வீட்டில் கேஸ் வெடித்து விபத்து ஏற்பட்டது. ஐந்து வயது சிறுவன் உட்பட இருவர் பலி நால்வர் படுகாயம். குடும்பமும் சுற்றத்தாரும் சோகத்தில் மூழ்கியிருக்க மறுநாள் பத்திரிக்கையில் செய்தி வருகிறது

வண்ணாரப் பேட்டையில் விபத்து: சிலிண்டர் வெடித்ததா? வெடி குண்டு வெடித்ததா? போலீஸார் ஆய்வு.

முஸ்லிமின் வீட்டில் நிகழும் விபத்தும் உயிரிழப்பும்கூட மீடியாக்களின் தீவிரவாதப் பசிக்குத் தீனியாகத் தெரிகிறது. மதவெறிக்குத் தூபம் போடும் சாம்பிராணியாக இருக்கிறதென்றால் இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது?

கொலையிலும் இரத்தத்திலும் தீவிரவாதி என்று சொன்னால் அதில் ஒரு லாஜிக் இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளலாம். முஸ்லிமாக இருப்பதால் திருடனைக்கூட தீவிரவாதியாக்கி விடுகின்றன நம் மீடியாக்கள்.

சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு நட்சத்திர ஆமைகளைக் கடத்துகிறான் ஒரு முஸ்லிம். விமான நிலையத்திலே கண்டறிந்து கைது செய்கிறது காவல் துறை. மறு நாள் பத்திரிக்கையில் செய்தி வருகிறது. நட்சத்திர ஆமைகளைக் கடத்திய முஸ்லிம் தீவிரவாதி கைது. இதில் என்ன தீவிரவாதம் இருக்கிறது. இதற்கு முன் அவன் செய்த பயங்கரவாதச் செயல் என்ன? எந்த பயங்கரவாத அமைப்பில் அவன் அங்கம் வகிக்கிறான் என்று கேட்டால் எதுவும் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் அந்த உண்மை மக்களுக்குத் தெரியாதே! இப்படித் தான் திருட்டுக் குற்றத்தைக்கூட தீவிரவாதக் குற்றமாக மாற்றி விடுகிறார்கள். சம்பந்தப்பட்டவன் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக

## காவலர்களின் கைங்கர்யம்.

மீடியாக்கள்தான் மிதமிஞ்சிய வார்த்தைகளைக் கொட்டுகிறார்கள் என்றால் பயங்கரவாத வழக்குகளில் கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் முஸ்லிம்களாக மட்டுமே இருப்பது ஏன்? என்ற கேள்வி எழலாம்.

நம் நாட்டு காவல்துறையும், உளவுத் துறையும் முஸ்லிம் வெறுப்பில் மீடியாக்களோடு சேர்ந்து செல்லும் இரட்டை மாட்டு வண்டிகளாகத் தான் இருக்கிறார்கள்.

ஏதேனும் ஒரு பயங்கரவாதச் செயல் நடைபெற்று விட்டால் காவலர்கள் தமது பராக்கிரமத்தை நிரூபிப்பதற்காக உடனடியாக சில முஸ்லிம்களைக் கைது செய்வார்கள். கைதிகளின் பக்கத்தில் நின்று மீடியாக்களுக்கு போஸ் கொடுப்பார்கள். அவர்களும் பரபரப்பான செய்திகளைத் தந்து கொண்டிருக்கும் காவலர்களுக்கு நன்றியாகக் கொடுத்த செய்தியை வளைத்து வளைத்து வாசித்துக் கொண்டே யிருப்பார்கள்.

முஸ்லிம்கள் குண்டு வைத்து விட்டார்கள் என்று மக்கள் மனதில் பதியும்வரை இந்த வாசிப்புத் தொடரும். இந்தப் பிராணியை இதற்கு மேல் அடிக்க வாய்ப்பே இல்லை என்று எண்ணும் வரை அடி அடியென்று அடித்து துவைத்துவிட்டு அடுத்த செய்திக்குத் தாவி விடுவார்கள்.

பரபரப்புகள் ஓய்ந்தபிறகுதான் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் உண்மையான பகுத்தாய்வு ஆரம்பமாகும். இதுவரை திரைக்கு முன்னால் காவல்துறைக் காட்டிய காட்சிகள் அனைத்தும் பொய் என்பது திரைக்குப் பின்னால் அம்பலமாகும். சில நேரங்களில் சில நல்ல நீதிபதிகள் சம்பந்தப்பட்ட காவலர்களைக் கடுமையாக கண்டிக்கவும் செய்வார்கள். அப்பாவிகள் மீது ஏன் இப்படி பொய் வழக்குப் போடுகிறீர்கள் என கோபத்தூடு கூடிய கேள்விகளையும் முன்வைப்பார்கள். இந்தச் செய்திகள் எதுவும் வெளி உலகுக்குத் தெரியாமல் கவனமாகப் பார்த்துக் கொள்வார்கள் காவல்துறை அதிகாரிகள்.

ஒருவேளை இதை வெளியிட்டாலும் யார் கண்ணிலும் பட்டுவிடக்கூடாது என்ற கவனத்தோடு ஏழாம் பக்கத்தின் ஓரத்தில் நாலுவரிச் செய்தியாக நறுக்கி விடுவார்கள் நம் மீடியாக்காரர்கள்.

முஸ்லிம்கள் குற்றவாளிகள் இல்லை என்பது தக்க ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டாலும் வேறுசமூகத்தைச் சார்ந்தவர்கள்தான் இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டாலும், இந்தச் செய்திகள் மக்கள் மன்றத்தில் வெளிப்பட்டு விடாமல் மறைக்கப்பட்டு விடுகிற காரணத்தால் அல்லது உரிய முக்கியத்துவத்தோடு வெளிவராத காரணத்தால் மக்கள் மனங்களில் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

உதாரணத்திற்கு சில...

## அக்ஷர்தாம் கோவில் வழக்கு

கடந்த 24.9.2002ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் காந்தி நகர் அக்ஷர்தாம் கோவிலுக்குள் இரண்டு தீவிரவாதிகள் நுழைந்தனர். அங்கிருந்த பக்தர்களைக் கண்மூடித்தனமாக சுட்டு வீழ்த்தினர். அவர்கள் நடத்திய தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டனர். 86 பேர் படுகாயம் அடைந்தனர். பயங்கரவாதிகள் இருவரும் சம்பவ இடத்திலே தீர்த்துக் கட்டப்பட்டனர்.

இந்த வழக்கு சம்பந்தமாக குஜராத் காவல்துறை ஆறு முஸ்லிம்களை பொடா சட்டத்தின் கீழ் கைது செய்தது. வழக்கை விசாரித்த பொடா சிறப்பு நீதிமன்றம் கடந்த 1.7.2006ல் ஆதம்பாய் அஜ்மீரி, அப்துல் கைய்யூம் முஃப்தி சாஹிப், சந்த் கான் ஆகிய

மூவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. முஹம்மது சமீம் ஹனீப் என்பவருக்கு ஆயுள் தண்டனையும் அப்துல்லாமியா,யாசீன்மியா இருவருக்கும் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் வழங்கியது.

2010ல் குஜராத் உயர்நீதி மன்றம் அந்த தண்டனையை உறுதி செய்தது. அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அதனை ஏ.கே.பட்நாயக், இ.கோபால் சாமி கௌடா ஆகிய நீதிபதிகள் விசாரித்தனர். 16வது நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட 16.5.2014 அன்று வழக்கின் இறுதித் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வெளியிட்டது.

தீர்ப்பில், "குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் இந்த வழக்கில் துளிகூட சம்பந்தப்படாத நிரபராதிகள்.இவர்களுக்கு எதிரான ஆவணங்கள் அனைத்தும் காவல்துறையால் போலியாக தயாரிக்கப்பட்டவை. ஆறு பேர் மீது போடப்பட்ட பொய் வழக்கு இது. வழக்கின் முக்கிய ஆதாரத்தின் நம்பகத் தன்மையை சிறப்பு நீதிமன்றமும், உயர்நீதி மன்றமும் உறுதி செய்யத் தவறிவிட்டது" என்று அனல் பறக்கும் வார்த்தைகளில் தமது தீர்ப்பை வழங்கியிருந்தனர்.

குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கைதிகள் எழுதிய ஒரு கடிதம்தான் கீழ்க் கோர்ட் நீதிபதிகள் மரண தண்டனை கொடுத்ததற்குரிய அடிப்படை ஆதாரம். இந்தக் கடிதத்தை சம்பவ இடத்திலே சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு கொலையாளிகளின் சட்டைப் பையிலிருந்து கைப்பற்றியதாக குஜராத் காவல் துறை கூறியது.

கொல்லப்பட்ட பயங்கரவாதிகளில் ஒருவனின் உடலில் 46 குண்டுகள் பாய்ந்து சல்லடையாகத் துளைக்கப் பட்டிருந்தான். இன்னொருவன் 60 தோட்டாக்களைப் பெற்று சின்னாபின்னமாகச் சிதறிக் கிடந்தான். இரத்தச் சகதியிலிருந்து உடலின் எந்தப் பகுதியும் இருவரில் எவருக்கும் மிச்சமாக இருக்கவில்லை. ஆனால் அதிசயம் பாருங்கள், சட்டையில் இருந்த கடிதம் மட்டும் மடிப்புக் கலையாமல் இரத்தத்தின் வாடைகூடப் படாமல் பவித்ரமாய் பாதுகாப்பாய் இருந்தது.

இது எப்படி என்ற கேள்வியை எழுப்பினார் நீதிபதி. இந்தக் கேள்வியின் வாலைப் பிடித்துத்தான் பொய் வழக்கின் அத்தனை முடிச்சுகளையும் அவிழ்த்து அவர்களை விடுதலை செய்து வெளியில் அனுப்பியது உச்சநீதி மன்றம்.

## பெங்களூரில் சதித் திட்டம் தீட்டியதாக வழக்கு

பெங்களூரில் அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார் அஜாஸ் மிர்ஸா அஹமது

எனும் 25 வயது வாலிபர். ஆங்கில நாளிதழில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார் 26 வயது மத்தியுர் ரஹ்மான் சித்தீகி. பல்வேறு தீவிரவாத தாக்குதல்களைத் திட்டமிட்டதாகக் கூறி இவ்விருவரையும் பெங்களூர் காவல்துறை கைது செய்தது.

ஆறுமாதங்களுக்குப் பின் இவர்கள் மீதான குற்றத்திற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று கூறி 2012 ஆகஸ்ட் 25ல் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆறுமாத கால இடைவெளியில் பார்த்துக் கொண்டிருந்த வேலையும் பறி போனது.

ஆந்திர மாநில மஜ்லிஸ் கட்சியின் தலைவரும் எம்.பி.யுமான அசதுத்தீன் உவைசி பாராளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பினார். மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெறுகிற இராணுவத்தின் கர்னல் புரோஹித்திற்கு சிறை யிலிருக்கும்போதே சம்பளமும் சலுகையும் வழங்கப்படுகிறது. ஆனால் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்ட அஜாஸ் மிர்சா அஹமது வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். இது பாரபட்சமான நடவடிக்கை. ஆகையால் மத்திய மாநில அரசுகள் இதற்காக பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார்.

## லஷ்கர் இ தொய்பா வழக்கு

முஹம்மது அமீன் கசாம். காஷ்மீர் வருவாய்த் துறையில் உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். சகோதரியின் திருமணத்திற்கு நகை எடுப்பதற்காக, டில்லி வந்தார்.

கடந்த 10.12.2006 அன்று தீவிரவாதத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் டில்லியில் வைத்து அவரைக் கைது செய்தனர். இவர் லஷ்கரே தொய்பா தீவிரவாதி என்றும் இவரிடமிருந்து ஆறு லட்ச ரூபாய் ரொக்கமும் ஒன்றரைக் கிலோ வெடிமருந்தும் கைப்பற்றப்பட்டதாக காவல்துறை கூறியது.

விசாரணையின்போது எந்தப் பேருந்தில் வைத்து அமீன் கசாமைக் கைது செய்ததாக காவல்துறை கூறியதோ, அந்தப் பேருந்தின் ஓட்டுனரும் நடத்துனரும் அளித்த வாக்குமூலத்திற்குப் பிறகு வழக்கின் போக்கு அமீன் கசாமுக்கு சாதகமாகத் திரும்பியது. கைது காட்சி அரங்கேறியதாகக் காவல்துறைக் கூறும் குறிப்பிட்ட அந்த நாளில் எங்கள் பேருந்து ஓடவேயில்லை என அவ்விருவரும் சாட்சியமளித்தனர்.

ஐந்தாண்டு கால தீவிரப் போராட்டத்திற்குப் பின் குற்றமற்றவர் என அமீன் கசாம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

நீதிபதி தனது தீர்ப்பில் "வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கண நேரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. இது ஒரு தவறான அணுகுமுறை. அரசுத் தரப்பின் தடுமாற்றத்தையும் தவறுகளையும் வைத்துப் பார்க்கும் போது இது ஒரு புனையப்பட்ட வழக்கு" என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது என்று குறிப்பிட்டார்.

## சூரத் குண்டுவெடிப்பு வழக்கு

இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார் முஹம்மது சுர்தி. தற்போது 78 வயது நிரம்பிய இவர் காங்கிரஸின் முன்னாள் அமைச்சர். இவரோடு மேலும் பத்து முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டனர்.

1993 ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் சூரத்தில் நடந்த இரண்டு குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடா சட்டம் இவர்கள்மீது பாய்ந்தது.

இந்த வழக்கின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.எஸ். தாகூர், சி. நாகப்பன் ஆகியோர் 17.7.2014 அன்று இந்த வழக்கில் அரசுத் தரப்பு ஆதாரங்கள் எதுவும் ஏற்கத் தகுந்ததாகவும் நம்பும்படியாகவும் இல்லை என்று கூறி அனைவரையும் விடுதலை செய்தனர்.

## இராணுவப் பள்ளி தாக்குதல் வழக்கு

தில்வார், டில்லியின் வடகிழக்கில் உள்ள இமாமுல் உலூம் மதரஸாவின் ஆசிரியர். மசூத் பகவாலி அதே பகுதியின் பள்ளிவாசல் இமாம்.

டேராடூனில் உள்ள இராணுவப் பள்ளியைத் தாக்குவதற்கு திட்டமிட்டதாகக் கூறி டில்லி காவல்துறையின் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு மார்ச் 2005ல் இருவரையும் கைது செய்தது.

இந்த வழக்கை விசாரித்த பாட்டியாலா நீதிமன்றம் ஜனவரி 2010ல் இவர்களை அனைத்து வழக்குகளில் இருந்தும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

நீதிபதி சர்மா தனது தீர்ப்பில் இவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு எந்த ஆதாரமும் இல்லை.அரசுத்தரப்பில் வைக்கப்பட்ட ஆதாரங்கள் எதுவும் நம்பும்படியாக இல்லை. அனைத்தும் ஜோடிக்கப்பட்டவையாகவே தெரிகின்றது. கைது செய்யச் சென்ற காவல் ஆய்வாளர்கள் இருவரும் எங்கு கைது செய்தோம் எப்படி கைது செய்தோம் என்பதில் முரண்பட்ட தகவல்களைத் தருகின்றனர். இதில்

அப்பட்டமாக அதிகார துஷ்பிரயோகம் செய்யப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

குண்டுவெடிப்புகளைக் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றின் உண்மை நிலையை அம்பலப்படுத்திய முதுபெரும் அறிஞர் பீ.ஜைனுல் ஆபிதீனுடைய 'குண்டு வைத்தவர்கள் யார்?' என்ற ஆய்வேடு இதுகுறித்து மேலும் பல விரிவான தகவல்களை நமக்குத் தருகிறது

*25.8.2003 அன்று 6 பேரைப் பலி வாங்கிய மும்பை கார் குண்டு வெடிப்பு,*

*அதே ஆண்டில் 11 பேரைப் பலி வாங்கிய மும்பை ரயில் குண்டு வெடிப்பு,*

*29.8.2005 அன்று 66 பேரை பலி வாங்கிய புது டெல்லி தொடர் குண்டு வெடிப்பு,*

*7.3.2006 அன்று 15 பேரை பலி வாங்கிய வாரணாசி குண்டு வெடிப்பு,*

*19.2.2007 அன்று 66 பேரை பலிவாங்கிய சம்ஜாவுதா ரயில் குண்டு வெடிப்பு,*

*25.8.2007 அன்று 40 பேரை பலிவாங்கிய ஹைதராபாத் பூங்கா குண்டு வெடிப்பு,*

*13.5.2008 அன்று 63 பேரை பலி வாங்கிய ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பு.*

இப்படி இன்னும் பலவற்றைப் பட்டியலிட்டு அனைத்திலும் முஸ்லிம்களே குற்றவாளிகளாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைகளை முஸ்லிம்கள் தான் மேற்கொண்டனர் என்பதற்கு எந்தவிதமான அடிப்படை ஆதாரங்களும் கிடையாது.

விசாரணைக் கைதிகளாக சிறையில் வாடும் முஸ்லிம்கள்மீது ஆண்டுகள் பல கடந்த பின்னும் குற்றப்பத்திரிக்கை கூட காவல்துறையால் தாக்கல் செய்யப்படவில்லை.எவ்வித விசாரணையுமின்றி கிடப்பில் போடப்பட்டிருப்பதே இவ்வழக்குகள் காவல்துறையால் பொய்யாக ஜோடிக்கப்பட்டவை என்பதற்குப் போதுமான ஆதரமாகும் என்று அவர் தனது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மத்திய காங்கிரஸ் அரசு மாநிலங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொரு மாநில அரசும் சிறைச்சாலைகளில் அப்பாவி முஸ்லிம்கள் அடைக்கப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஏனெனில் திருட்டு, வழிப்பறி, கற்பழிப்பு என்று எல்லா மதத்தவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் தீவிரவாத வழக்குகளின் கீழ் எந்த அடிப்படை ஆதாரமும் விசாரணையும் இல்லாமல் முஸ்லிம்கள் மட்டுமே கைது செய்யப்படுவதால் இப்படி ஓர் அறிவுரையைக் கூற வேண்டிய அவசியம் மத்திய அரசிற்கு ஏற்பட்டிருக்கிறது.

இதில் கொடுமை என்னவென்றால் முஸ்லிம்களின் குடியிருப்புகளிலும் பள்ளிவாசல்களிலும் குண்டு வைக்கப்பட்டு கொத்துக் கொத்தாக முஸ்லிம்களே கொல்லப்பட்ட நேரத்திலும்கூட காவல்துறையும் உளவுத் துறையும் சேர்ந்து முஸ்லிம்களையே கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை அதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.

*21.11.2003:* மாராட்டிய மாநிலம் பர்பானி மாவட்டம் சித்தார்த் நகர் மதரஸா மற்றும் பள்ளிவாசலில் வெள்ளிக் கிழமை மதியம் ஜும்ஆ தொழுகை நேரத்தில் குண்டு வெடித்தது,

*21.11.2003:* மும்பை ஜால்னா நகர் காதிரிய்யா பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையின் போது குண்டு வெடித்தது,

*8.9.2006:* மும்பை மாலேகான் பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையில் குண்டு வெடித்தது,

*29.9.2007:* மும்பை மாலேகான் முஸ்லிம் குடியிருப்பில் சிமி அலுவலகம் அருகில் குண்டு வெடித்தது,

*2008ல்* அஜ்மீர் தர்ஹா, ஹைதராபாத் மக்கா மசூதி என முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டபோதும் கூட ஈவிரக்கமில்லாமல் எந்தவிதமான அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் முஸ்லிம்கள்மீதே பழி சுமத்தி எடுத்த எடுப்பில் முஸ்லிம்களையே கைது செய்து சிறையில் அடைத்தது அதிகார வர்க்கம்.

முஸ்லிம்கள் தம் மீது போடப்பட்ட பல வழக்குகளைப் பொய்யென்று நிரூபித்து விடுதலை பெற்று வெளியில் வந்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் மீது சுமத்தப்பட்ட அவப் பெயர் மட்டும் அழியாமல் நிலை பெற்று விட்டது.

## பயங்கரவாதப் பரிவாரமும் பாவப்பட்ட முஸ்லிம்களும்

கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை பெற்றுவிட்ட காரணத்தால் அல்லது அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்படாமல் போனதால் அவர்களை அப்பாவிகள் என்று கூறிவிட முடியுமா என்றொரு கேள்வி எழலாம்.

நியாயமான கேள்விதான். நீதிமன்றத்தில் நிரூபணம் ஆகாத காரணத்தால் ஒருவன் நிரபராதி ஆகிவிட முடியாது. நாம் முஸ்லிம்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறுவது குற்றம் நிரூபிக்கப்படாததால் அல்ல. இவர்கள் குற்றத்தில் ஈடுபடவில்லை என்பதோடு உண்மைக் குற்றவாளிகள் யார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

உண்மைக் குற்றவாளி கிடைத்து விட்டால் சம்பந்தப்பட்ட வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவனை நிரபராதி என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

ஒட்டுமொத்தமாக நாட்டில் நடைபெற்ற பயங்கரவாதச் செயல்களில் எண்ணிச் சொல்கிற ஒன்றிரண்டைத் தவிர அனேகக் காரியங்களை சங்பரிவார அமைப்பினர்தான் செய்திருக்கிறார்கள். குறிப்பாக முஸ்லிம்கள் செய்தார்கள் என்று நிரூபிக்கப்படாமல் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்ட அனைத்து குண்டு வெடிப்புகளையும் இவர்களே திட்டமிட்டு செய்து விட்டு முஸ்லிம்கள் மீது பழி போட்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சில.....

## மாலேகான் குண்டுவெடிப்பு

2009 செப்டம்பர் 29 ஆம் நாள் மராத்திய மாநிலம் மாலேகானில் தடைசெய்யப்பட்ட சிமி அலுவலகத் திற்கு அருகில் குண்டு வெடித்தது. இராணுவத்தில் மட்டுமே பயன்படுத் தப்படும் சக்திவாய்ந்த ஆர்.டி.எக்ஸ் வெடிபொருளை மோட்டார் சைக்கிளில் வைத்து வெடிக்கச் செய்திருந்தார்கள்.

இதில் கொல்லப்பட்டவர்கள் அனை வரும் முஸ்லிம்கள். இதற்காக மராத்திய அரசால் கைது செய்யப்பட்டவர்களும் முஸ்லிம்கள். அதைக் கண்டு கொதித்துப் போன முஸ்லிம்கள் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கோரி பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வழக்கு தீவிரவாதத் தடுப்புப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது. புலணாய்வு அதிகாரிகள் தடய அறிவியல்படி சோதனை செய்து, குண்டு வைக்கப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் எஞ்சின் நம்பரைக் கண்டுபிடித்தனர்.

அதன்பிறகு அந்த வண்டியை வைத்து குண்டு வெடிப்பின் வரலாற்றையே கண்டுபிடித்தனர். மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பிராக்யா சிங் என்ற பெண் சாமியார் தான் இந்தக் குண்டு வெடிப்பை நிகழ்த்தியுள்ளார் என்ற உண்மை தெரிய வந்தது. இவர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மாணவப்பிரிவான ஏ.பி.வி.பி.யிலும் ஹிந்து ஜாக்ரான் மஞ் ச் என்ற பயங்கரவாத அமைப்பிலும் வி.ஹெச்.பி.யின் மகளிர் பிரிவான

துர்கா வாஹினியிலும் அங்கம் வகித்தவர். குஜராத் அரசின் நிதி உதவியோடு வந்தே மாதரம் என்ற அமைப்பை நடத்தி வந்தவர். ராஜ் நாத் சிங், அத்வானி போன்ற சங்பரிவாரின் மேல்மட்ட நிர்வாகிகளுக்கு மிகவும் நெருக்கமானவர்

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்மூலம் மேலும் பல குற்றவாளிகள் சிக்கினர். ஷ்யாம்லால், தர்மேந்திரா, பைராகி, சியாம்சாரு, சிவநாராயணன் என இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அனைவருமே சங்பரிவாரின் பல்வேறு கிளை அமைப்பின் உறுப்பினர்கள்.

இராணுவத்தில் மேஜர், கர்னல் எனும் உயர் நிலையில் உள்ள புரோகித், பிரபாகர் குல்கர்னி, உபாத்யாய ஆகிய அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்

வழக்குவிசாரணையை முஸ்லிம்களை நோக்கித் திருப்பு வதற்காக குர்ஆன் ஸ்டிக்கர்கள், ஒட்டு தாடி மற்றும் தொப்பிகள், உருது மொழிப் பிரசுரங்கள் போன்றவற்றை குண்டுவெடிப்பின்போது பயன்படுத்தியுள்ளனர். இதில் கொடுமை என்னவென்றால் இந்த ஒட்டு தாடிகளையும், உருதுப் பிரசுரங்களையுமே முஸ்லிம்களைக் கைது செய்வதற்குரிய ஆதாரங்கலாக காவல்துறை காட்டியது.

## தென்காசி ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டுவெடிப்பு

2008ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் தென்காசியில் ஆர்.எஸ். எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்தது. முதலில் முஸ்லிம்கள் பக்கம் பார்வை திரும்பியது.தீவிர விசாரணைக்குப் பின் இந்து முன்னணியைச் சேர்ந்த ரவி, கே.டி.சி. குமார், இலட்சுமி நாராயண சர்மா ஆகியோர்தான் குண்டு வைத்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

## மோவ்நகர் குண்டுவெடிப்பு

2002ல் மோவ் நகர் கோவிலில் குண்டு வெடித்தது. அந்த வழக்கில் வி.ஹெச்.பி. தொண்டர்களே கைதாகி தண்டனையும் பெற்றனர்.

## ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் வீட்டு குண்டுவெடிப்பு

2006ஆம் ஆண்டு நாண்டெட் கிராமத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரரின் வீட்டில் குண்டு வெடித்து இருவர் பலியாயினர். ஐவர் படுகாயம் அடைந்தனர்.

விசாரணையின் முடிவில் ஔரங்காபாத் மசூதியில் வெள்ளிக் கிழமையில் வைப்பதற்காக தயாரித்துக் கொண்டிருந்த குண்டு எதிர்பாராத விதமாக வெடித்து விட்டது என்பது தெரிய வந்தது. அவர்களின் வீட்டை

சோதனையிட்ட போது ஔரங்காபாத் மசூதியை பலகோணத்தில் காட்டும் புகைப்படங்கள் அதற்கான வரைபடம், ஒட்டுத் தாடி ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், குண்டு வெடித்த இடத்தில் புலனாய்வு அதிகாரிகள் முஸ்லிம்களுக்கெதிரான ஆதாரங்களைப் பொறுக்கி எடுப்பார்கள். சம்பவ இடத்திற்கு வந்ததும் வலப்புறத்தில் பாஸ்போர்ட், இடப்புறத்தில் லைசென்ஸ், பக்கத்திலே குர்ஆன் பிரதி, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, உருதுமொழிப் பிரசுரங்கள், ஜிகாத் வாசகங்கள் அடங்கிய குறிப்புகள் அனைத்தையும் கொண்டு வந்து சம்பவ இடத்தில் போட்டுவிட்டுத்தான் தீவிரவாதிகள் குண்டு வைப்பார்கள்.

ஏனெனில், காவல்துறை குற்ற வாளியின் அட்ரஸை கண்டுபிடிக்க சிரமப்படக்கூடாது என்ற கரிசனம் போலும்! கூடுதல் தகவல் என்னவென்றால், அட்ரஸை அங்கே போட்டுவிட்டு வீட்டில் அமர்ந்து வீடியோ பார்த்துக் கொண்டிருப்பான் தீவிரவாதி! காவலர்கள், கார் பிடித்து போய், கதவை தட்டி, ஆளைக் கைது செய்து அழைத்து வருவார்கள்.

இந்தக் கதைகளை எல்லாம் நமக்கும் சொல்வார்கள். என்ன நடந்ததென தெரியாமல் நாம் விழிக்கக் கூடாதல்லவா? அதற்காக.!

பாவம் ஓரிடம், பழி வேறிடம் என்பார்களே அதற்கு சங்; பரிவாரங்களால் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளையும் அதனால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களையும் மிகப் பொருத்தமான உதாரணமாகக் கொள்ளலாம்.

## கலவரங்களும் கர்த்தாக்களும்

ஏராளமான கலவரங்கள் நம் நாட்டில் நடந்துள்ளன. ஒவ்வொரு கலவரத்தின் பாதிப்புகளையும் தொகுத்து எழுதத் துவங்கினால் ஏடுகள் கொள்ளாது எனும் அளவுக்கு கொடுமைகள் விரியும். ஈவிரக்கமின்றி நடத்தப்பட்ட அனைத்துக் கலவரங் களிலும் சங்பரிவாரின் கரங்களே சம்பந்தப்பட்டுள்ளன.

இந்த உண்மையை கலவரங்களை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட மத்திய மாநில அரசுகளின் கமிஷன்களும், தனி நபர் ஆய்வறிக்கைகளும், தனியார் தொண்டு நிறுவனங்களும், மனித உரிமை இயக்கங்களும் வெளிக்கொண்டு வந்துள்ளன.

1992 டிசம்பர் 6 பாபர் மசூதி இடிப்புக்கு மறுநாள் தலை நகர் டில்லியில் மிகப்பெரிய கலவரம் ஒன்று நடைபெற்றது. அதை விசாரித்த மனித உரிமை அமைப்பான P.U.C.L தனது அறிக்கையில் இது

எதிர்பாராத விதமாக நடந்த விபத்தல்ல. இந்துத்துவா பயங்கரவாதிகளால் மிகச்சரியாக திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட கலவரம் என்று கூறியது.[118]

1967ஆம் ஆண்டு பீஹார் மாநிலம் ராஞ்சியில் (தற்போது ஜார்கண்ட்) ஒரு வகுப்புக் கலவரம் நடைபெற்றது. இதை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ரகுபர் தயாள் கமிஷன் தனது அறிக்கையில் பீஹாரில் ஜனசங்கம் தன்னுடைய அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்காக நடத்திய கலவரம் என்று குறிப்பிட்டது.[119]

1979 ஏப்ரல் மாதம் பீஹார் ஜாம்ஷெட்பூரில் (தற்போது ஜார்கண்ட்) கலவரம் நடைபெற்றது. இதை ஆய்வு செய்த ஜதீந்தர் தலைமையிலான மூவர் கமிஷன் விரிவாக தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில்...

கலவரத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன் ஆர்.எஸ்.எஸ்.ன் பயிற்சி முகாமில் தலைவர் தேவரஸ் நிகழ்த்திய உரை வன்முறைக்கு வித்திட்டது. ராம் நவமீ ஊர்வலத்திற்கு ஆயுதத்தோடு அவர்கள் கலந்து கொண்டதைப் பார்க்கும்போது இது முன்பே திட்டமிடப்பட்டது தெளிவாகிறது. மாவட்ட காவல்துறையின் கடைக்கண் பார்வை அவர்களுக்கு கிடைத்துள்ளது. ஆர்.எஸ்.எஸ், பாரத் மஸ்தூர் சங் இரண்டின் கூட்டு மற்றும் திட்டமிட்ட சதியே இக்கலவரம் என்று குறிப்பிட்டது. (அலிகான் 113)

1969 ஆம் ஆண்டு அஹமதாபத்தில் கலவரம் நடைபெற்றது. அதை விசாரிக்க நீதிபதி ஜகன் மோகன் ரெட்டி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டு பிவாண்டியில் நடைபெற்றகலவரத்தை விசாரிப்பதற்காக நீதிபதி டி.பி. மதன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

1971 தலைச்சேரி கலவரத்தை விசாரிப்பதற்காக நீதிபதி விதாயத்தின் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

1979 ஜாம்செட்பூர் கலவரத்தை விசாரிப்பதற்காக நீதிபதி ஜிதேந்திர நாராயணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

1982 மண்டைக்காடு கலவரத்தை விசாரிப்பதற்காக நீதிபதி வேணு கோபால் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

19921993 மும்பை கலவரத்தை விசாரிப்பதற்காக நீதிபதி கிருஷ்ணா தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. [120]

118. (இந்திய முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களும் கமிஷன் அறிக்கைகளும் ச.அ.முஹம்மது அலிகான், பக்கம் - 24)

119. (இ.மு.எ.க.க.அ பக்கம் - 106)

இந்துத்துவத்தின் அரசியல் பரிணாமம்,கே.எஸ்.ஹரிஹரன், ஊரட்ங்கு உத்தரவு, விபூதி நாராயண ராவ், குலாம் முஹம்மது மொழிபெயர்ப்பு

120. (இஸ்லாமும் இந்தியாவும், அலைகள் பதிப்பகம், டி.ஞானையா, பக். 278)

அனைத்து விசாரணை அறிக்கை களிலும் குறிப்பிடப்பட்டிருந்த பொதுவான அம்சம் இவையனைத் தையும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் தான் முன்னின்று நடத்தியிருக்கின்றன என்பதுதான்.

சுதந்திர இந்தியாவில் ஓரளவிற்கு கலவரங்கள் கட்டுப்படுத்தப்பட்ட காலம் என்பது 1949ல் காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட பின் ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஆரிய சமாஜ் அமைப்பு தடை செய்யப்பட்டு அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருந்த காலம் மட்டும்தான் என்கிறார் இந்திய முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களும் கமிஷன் அறிக்கைகளும் என்ற ஆய்வு நூலின் ஆசிரியர் முஹம்மது அலிகான்.(121)

## கலவரத்திற்குப் பின்னும் கயமைத்தனம்

1970ஆம் ஆண்டு மே மாதம் மாகாராஷ்டிர மாநிலம் பீவாண்டியில் நடைபெற்ற கலவரத்தை ஆய்வு செய்த S.I.S சிறப்புப் புலனாய்வுத் துறை அரசுக்கு முதற்கட்ட அறிக்கையை வழங்கியது.

பீவாண்டி கலவரத்திற்கு முஸ்லிம் களே காரணம். முஸ்லிம்களால் முன்பே அது திட்டமிடப்பட்டிருந்தது. சிவ ஜெயந்தி ஊர்வலத்தில் தாக்குதலைத் துவக்கியது முஸ்லிம்களே என சிறப்புப் புலனாய்வின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

கலவரத்தை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட D.G.P மதன் கமிஷன் புலனாய்வின் அறிக்கையை புடலங்காயின் நிலையில் வைத்து விமர்சித்தது. முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்பதற்கும் கலவரத்திற்காகமுன்பே திட்டமிட்டிருந்தார்கள் என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டது.

முறையான ஆய்வின் மூலம் முஸ்லிம்களுக்கு எதிராகச் சொல்லப்பட்ட ஒரேயொரு பொய்யான அறிக்கையும் அப்போதே தோலுரிக்கப்பட்டு விட்டது.

கலவரத்தின் முழு பொறுப்பும் ராஷ்ட்ரீய உத்சவ் மண்டல், ஜனசங், ஸி.ஷி.ஷின் தலைமை ஆகியவற்றையே சாரும் என்று பல்வேறு சான்றுகளோடு மதன் கமிஷன் தெளிவுபடுத்தியது.(122)

## பெட்டி பெட்டியாய் ஆதாரங்கள்

உ.பி. மாநில அரசில் உள்துறைச் செயலாளராக இருந்தவர் ராஜேஷ்வர் தயாள். மத்திய அரசின் அயலுறவுத் துறை செயலாளராகவும் பல வருடங்கள் பணி புரிந்தவர். இவர் எழுதிய நம் காலத்தில் ஒரு வாழ்க்கை (A Life of our Times) என்ற புத்தகம் நாட்டு நடப்புகளைத் துல்லியமாகக் காட்டும் கண்ணாடி.

121. (இ.மு.எ.க.க.அ பக்கம் 19)
122. (இ.மு.எ.க.க.அ பக்கம் 134)

அதில் அவர் எழுதுகிறார்: ஒரு நாள் உ.பி. மாநில D.I.G. ஜெய்ட்லி இரண்டு பெரிய ஸ்டீல் பெட்டிகளுடன் என் வீட்டிற்கு வந்தார். அந்தப் பெட்டிக்குள் மாநிலத்தின் கிழக்கு மாவட்டங்களில் வகுப்புக் கலவரத்தை நடத்த திட்டமிட்டதற்கான ஆதாரங்கள் இருந்தன.

R.S.S. தலைவர் கோல்வால்க்கரின் தலைமையில் உருவாக்கப்பட்ட மறுக்க முடியாத சதித் திட்டங்கள், மிகத் துல்லியமான தொழில் நுட்பத்துடன் குறி வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் குடியிருப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், அந்த இடங்களுக்கு போகும் வழிகள், செய்ய வேண்டிய வேலைகள் என அனைத்தும் விலாவாரியாக தொகுக்கப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்தது.

உடனடியாக அதனை முதலமைச்சர் கோவிந்த வல்லப பந்த் வீட்டிற்கு கொண்டு சென்றோம். மிகக் கச்சிதமாக அதை அவர் அடக்கம் செய்து விட்டார் என்று எழுதியுள்ளார்.

## ஆயுதங்களே அறியாத அப்பாவிகளா?

நாட்டில் நடைபெற்ற பயங்கரவாதச் செயல்கள் அனைத்தும் மற்றவர்களால் நிகழ்த்தப்பட்டு முஸ்லிம்கள் மீது பழி போடப்பட்டது என்றால் முஸ்லிம்கள் ஒன்றுமே செய்யாத அப்பாவிகளா? தீவிரவாதத்தை நினைத்துக்கூடப் பார்க்காத புண்ணிய ஆத்மாக்களா என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

நாம் கூறுவது என்னவென்றால், முஸ்லிம்களும் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். எல்லா சமூகத்திலும் சிலர் இருப்பதைப் போல இங்கும் சிலர் இருக்கிறார்கள். அந்தச் சிலரை தீவிரவாதிகள் என்று சொல்லுங்கள், தனிமைப்படுத்துங்கள் தண்டனைக் கொடுங்கள். அதை விட்டு விட்டு அனைத்து முஸ்லிம்களையும் ஏன் அவர்களோடு சேர்த்துப் பார்க்கிறீர்கள் என்பதுதான் எங்கள் கேள்வி.

தீவிரவாதப் பாதையில் பயணிக்கும் அந்த ஒரு சிலருக்கு முஸ்லிம்கள் யாரும் ஆதரவுகூடத் தெரிவிப்பதில்லை. கோவை குண்டுவெடிப்பில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு ஒரு வழக்கறிஞரைக் கூட முஸ்லிம்கள் ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை. அரசாங்கச் செலவில் நியமிக்கப்பட்டவர்கள்தான் அவர்களின் வழக்கை நடத்தினார்கள்.

தீவிரவாதத்திற்கு முஸ்லிம்கள் ஆதரவு தருவதாக இருந்தால் கோவை குண்டு வெடிப்புக் குற்றவாளிகளுக்கு அது கிடைத்திருக்க வேண்டும். ஏனெனில் அனைவரும் ஒத்துக் கொள்கிற ஒரு நியாயம் அதன் பின்னணியில் இருந்தது.

காவிப்படையும் காக்கி உடையும் சேர்ந்து கொண்டு 19 முஸ்லிம் இளைஞர்களை அநியாயமாக துடிக்கத் துடிக்கச் சுட்டுத் தள்ளினார்கள். முஸ்லிம்களின் வணிக நிறுவனங்களை சூறையாடினார்கள். அரசு மருத்துவமனை எதிரில் காவல்துறையின் கண்களுக்கு முன்னால் அப்பாஸ் என்ற இளைஞனை எரித்துக் கொலை செய்தார்கள்.

மருத்துவமனைக்குள் கொண்டு சென்றபோது வெறியர்களின் மிரட்டலால் அவனுக்கு வைத்தியம் பார்க்க மறுத்தார்கள். இத்தனை பெரிய கொடுமைகள் நடந்தும் ஆட்சியாளர்களோ, அதிகாரிகளோ, யாரும் அவர்களுக்கு எந்த நியாயத்தையும் வழங்கவில்லை.

குற்றவாளிகள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு ஆறுதல்கூடச் சொல்லவில்லை. யார் மீது முஸ்லிம்கள் விரல் நீட்டி குற்றம் சுமத்தினார்களோ, அந்த காவலருக்கு பட்டயம் வழங்கி கௌரவித்தது கருணாநிதியின் திமுக அரசு.

அமைச்சர்கள் வந்து சந்தித்திருந்தாலே, முஸ்லிம்கள் சமாதானம் அடைந்திருப்பார்கள். அதற்குக் கூட வழியில்லாமல் வாசலை இறுகச் சாத்திக் கொண்டார்கள் ஆட்சியாளர்கள். அன்றைய தமது புதிய கூட்டாளியான பாஜகவின் மனம் கோணி விடக்கூடாது என்பதற்காக கொடூரமான ஒரு மௌனத்தைக் கடைபிடித்தது திமுக. இந்தக் கொடுமைக்கு பழி தீர்ப்பதற்காகத் தான் 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாள் கோவையில் பாஜகவின் தேர்தல் பிரச்சார மேடை அருகிலும் மேலும் பல இடங்களிலும் வெடித்த சங்கிலித் தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இந்த வழக்கின் குற்றப் பத்திரிக்கையில் கூட 19 பேர் படுகொலையின் பதிலடியாகத் தான் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டது என காவல்துறையே ஒத்துக் கொண்டது.

இப்படி ஒரு ஏற்கத் தகுந்த காரணம் இருந்தபோதும் முஸ்லிம்கள் இந்தச் செயலை ஆதரிக்கவில்லை. சம்பந்தப் பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய முன்வரவில்லை. இவர்களா தீவிரவாதத்தின் பங்காளிகள்? என்பதை கொஞ்சம் நெஞ்சில் கை வைத்து யோசித்துப் பாருங்கள்.

தீவிரவாதத்தில் யார் ஈடுபட்டாலும் அதனால் ஏற்படும் பாதிப்புகளில் அதிக பாதிப்பு முஸ்லிம்களுக்குத் தான். ஏனெனில், மற்றவர்கள் செய்தால் தப்புவதற்கு வாய்ப்புகள் உண்டு. முஸ்லிம்கள் செய்தால் சட்டத் துறை, காவல் துறை, நீதித் துறை என அனைத்து மட்டத்திலும் அவர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டிருக்கும் வெறுப்புணர்வு தப்பிச் செல்வதற்குரிய எந்த வாய்ப்பையும் வழங்குவதில்லை.

சந்தேகத்தின் பேரில் அழைத்துச் சென்றாலே, முஸ்லிமென்றால் சாகடித்து விடுவார்களோ என்று அஞ்சும் நிலைதான் இங்குள்ளது.

உதாரணத்திற்கு சில...

வெட்டுவாங்கேணியைச் சேர்ந்த தமீம் அன்சாரி என்ற 14 வயது சிறுவனை விசாரணைக்காக அழைத்துச் சென்று வாயில் துப்பாக்கியை வைத்து சுட்டுக் கொல்ல முயன்றார் சென்னை நீலாங்கரை இன்ஸ்பெக்டர்.

14.10.2014 அன்று இராமநாதபுரம் மாவட்டம் எஸ்.பி.பட்டிணத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செய்யது முஹம்மது என்ற வாலிபரை காவல் நிலையத்திற்குள்ளேயே சுட்டுக் கொன்றார் துணை ஆய்வாளர் காளிதாஸ்,

15.06.2015 அன்று ஆம்பூரைச் சேர்ந்த ஷமீல் அஹ்மது என்ற வாலிபரைவிசாரணைக்காக ரகசிய இடத்திற்கு கொண்டு சென்று நான்கு நாட்களாகக் கடுமையாகத் தாக்கி சித்ரவதை செய்து கொலை செய்தார் பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ்

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டைச் சேர்ந்த ரிஸ்வான் என்ற சிறுவனை அழைத்துச் சென்று அடித்துத் துவைத்து சிறைக் கூடத்திலேயே சாகடித்தார் ஷமீலின் கொலைக்கு காரணமான அதே இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ்,

2001 டிசம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்டார் காஷ்மீரைச் சேர்ந்த அப்சல் குரு. இவருக்கு மரண தண்டனை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பின் வரிகளைப் படித்தால் உலகமே வியந்து போகும்.

குற்றவாளி என்று கூறி தண்டனை கொடுப்பது உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படும் மரபு. உலகிலே நிரபராதி என்று கூறிவிட்டு தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட ஒரே மனிதன் அப்சல் குருவாகத்தான் இருப்பார்.

உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில், அப்சல் குருவை குற்றவாளி என்பதற்குரிய ஆதாரங்கள் எதுவும் இல்லை. தீவிரவாத இயக்கங்களுடன் அவர் தொடர்பில் இருந்தார் என்பதும் நிரூபணமாகவில்லை.ஆயினும் மக்களின் கூட்டு மனசாட்சியை திருப்திபடுத்துவதற்காக இவருக்கு தூக்கு தண்டனை விதிக்கிறேன் என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

இவருக்கு முன்பே மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட பலர் ஜனாதிபதிக்கு கருணை மனு போட்டு காத்திருந்தனர். அதையெல்லாம் கிடப்பில் போட்ட மத்திய அரசு இவரது மனுவை மட்டும் உடனடியாகப் பரிசீலித்து நிராகரித்து, தூக்கில் போட உத்தரவிட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகளில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஜாமீன், பரோல், சட்ட உதவி என எந்தவொன்றும் முஸ்லிம்களுக்குமட்டும் மறுக்கப்படுவதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகளைக் கூற முடியும்.

எதையாவது செய்து மாட்டிக் கொண்டால் அல்லல்படுவோம் என்பதை அறிந்துகொண்டே தீவிரவா தத்தைத் தேடிப் போவார்களா? முஸ்லிம் என்றாலே கூடுதலாக தண்டிக்கப்படும் சூழலில் தீவிரவாதிகளுக்கு உதவி செய்து மாட்டிக் கொண்டால் தப்பிக்க முடியாதே என்று அச்சப்பட மாட்டார்களா?

அதைவிட சமூக அமைப்பில் தீவிரவாதி தீவிரவாதி எனும் அவப் பெயருடன் தனிமைப்படுத்தப்பட்டு கொடுக்கல் வாங்கலில் தள்ளி வைக்கப்பட்டு அதனால் ஏற்படும் மன உளைச்சலை தினம் தினம் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தீவிரவாதப் பாதையைத் தேர்ந்தெடுப்பார்களா? என்பதை நியாய உணர்வோடு சிந்தனை செய்து பார்க்க வேண்டும்.

9

# அமைதியை நிலை நாட்டவே ஆயுதப் பிரயோகம்

## போர்கள்

இஸ்லாமிய மார்க்கம் மக்களை பாதுகாக்க கடமைப்பட்டுள்ள அரசுகளுக்கு ஆயுதப் பிரயோகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. குற்றங்களுக்கு தண்டனை வழங்குவதும், அநீதிக்கெதிரான போர்களை நடத்து வதும் அந்த வகையில் உள்ளதுதான்.

குர்ஆனில் அவர்களை வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று கூறப்படும் செய்திகளை எடுத்துக் கொண்டு, இஸ்லாம் முஸ்லிமல்லாதவர்களை கொல்லச் சொல்வதாக சிலர் கூறி வருகின்றனர். குர்ஆனில் கூறப்படும் இதுபோன்ற கட்டளைகள் யாவும் வீதிகளுக்கும், பொதுமக்கள் புழங்கும் சந்தைகளுக்கும் சொல்லப்பட்டதல்ல.

எதிரிகளோடு மோதும் போர்க் களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்களாகும். நமக்கும் அண்டை நாட்டுக்கும் இடையில் சண்டை நடந்தால் நம் நாட்டு இராணுவ வீரர்களுக்கு நாம் என்ன சொல்வோம்? நமது பிரதமர் என்ன சொல்வார்? அதைத்தான் குர்ஆன் கூறுகிறது.

களத்திற்கு வந்து விட்டால் கனிவு காட்டக் கூடாது. சாதுர்யமாகக் காய் நகர்த்தி எதிரியின் கழுத்தை வெட்டி வீச வேண்டும். இரக்கப்பட்டால் எதிரி நம்மை வீழ்த்தி விடுவான். இப்படித் தானே அனைவரும் பேசுவோம். இதைத்தான் இஸ்லாமும் பேசுகிறது.

வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று கூறும் வசனங்களின் முன்பின் தொடர்களைச் சேர்த்துப் படித்தால் இந்த உண்மை தெளிவாகப் புரியும்.

## முடிந்தவரை சமாதானம்

போர்கள் என்றாலே வலிகள், அவமானங்கள், உயிரிழப்புகள், பொருட்சேதங்கள், மரண ஓலங்கள். மொத்தத்தில் மனித நேயத்தை மாண்டு போகச் செய்யும் அனைத்து வகைக் காரியங்களின் மொத்தத் தொகுப்பு என்று கூறிவிடலாம். கொடுமை நிறைந்த இக்கொலைக் களத்தில் கூட புது நெறியைப் புகுத்தி மனித நேயத்தை மலரச் செய்திருக்கிறது இஸ்லாம்.

உண்மையில் போர்களற்ற உலகைத் தான் இஸ்லாம் விரும்புகிறது. இயன்ற வரை போரைத் தவிர்த்திடுங்கள் என்றுதான் அறிவுரைக் கூறுகிறது. தவிர்க்க இயலாத தருணங்களில் மட்டுமே

போரை அனுமதிக்கிறது. இது எதிரியின் கைகள் உயர்ந்து முஸ்லிம்கள் தோற்றுப் போவார்கள் என்று எண்ணுகிற நேரங்களில் அல்ல. முஸ்லிம் படை வலுவுடன் இருக்கும் நேரங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை இதுதான்.

**மக்களே! எதிரிகளைக் களத்தில் சந்திக்க ஆசைப்படாதீர்கள், அமைதி யையும் நலனையுமே இறைவனிடத்தில் கேளுங்கள். ஒருவேளைப் பகைவரை எதிர் கொள்ள நேர்ந்து விட்டால் பொறுமையோடு போரிடுங்கள். வாட்களின் நிழலில்தான் சுவனம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**(123)

நபிகளார் செய்து கொண்ட ஹுதைபிய்யா உடன்படிக்கையை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரக்கணக்கான தோழர்கள் புடைசூழ மதினாவிலிருந்து உம்ரா எனும் வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக மக்கா நோக்கி பயணிக்கிறார்கள்.

செய்தியைக் கேள்விப்பட்ட மக்கா நகர எதிரிகள், எத்தனை உயிர்களை விலையாகக் கொடுத்தாலும், முஹம்மதை உள்ளே வரவிடாமல் தடுத்து விட வேண்டும் என்று மிகப்பெரிய யுத்தத்திற்குத் தயாராகிக் காத்திருந்தார்கள்.

போர் செய்ய விரும்பாத நபியவர்கள் எதிரிப் படையினர் நிற்கும் பாதையில் பயணித்தால் கண்டிப்பாக முட்டிக் கொள்ள வேண்டிய சூழல் வரும் என்பதை உணர்ந்து மாற்று வழியில் சென்று மக்காவிற்கு அருகில் உள்ள ஹுதைபிய்யாவில் தங்கினார்கள்.

தடாலடியாக உள்ளே நுழைந்து விட்டால் ஏதேனும் விபரீதம் நிகழ்ந்து விடலாம் என்று சமாதானப் பேச்சு வார்த்தைக்காக மக்காவிற்குள் தூதர்களை அனுப்பி வைத்தார்கள். பேச்சு வார்த்தைக்கு வந்தவர்கள் கடுமையான பல நிபந்தனைகளை விதித்தார்கள். முஸ்லிம்களை சீண்டிக் கொண்டேயிருந்தார்கள். போரைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக அவர்கள் விதித்த அனைத்து நிபந்தனைகளையும் நபிகளார் ஏற்றுக் கொண்டார்கள்.

பேசப்பட்ட ஒப்பந்தத்தை அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் என்று எழுதத் துவங்கினார்கள். எதிர்தரப்பில் இருந்த சுஹைல் பின் அம்ர் என்பவர் அல்லாஹ்வின் பெயரால் என்று எழுதுங்கள் அளவற்ற அருளாளனை எங்களுக்குத் தெரியாது என்றார். சரியென்று திருத்திக் கொண்டார்கள்.

123. (அறிவிப்பவர் : மிஸ்வர் இப்னு மக்ரமா - நூல் : புஹாரி - எண் : 2734, 4179, 4181, (நூல் : அபூதாவூது - எண் : 2384))

அடுத்து அல்லாஹ்வின் தூதர் முஹம் மதிற்கும் மக்கா குரைஷிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்று எழுதினார்கள். உங்களை அல்லாஹ்வின் தூதர் என்று நாங்கள் ஒத்துக் கொள்ளவே இல்லை. ஆகையால், அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது என எழுதச் சொன்னார்கள். நீங்கள் மறுத்தாலும், நான் அல்லாஹ்வின் தூதர்தான். ஆயினும், ஒப்பந்தத்திம் வேண்டும் என்பதற்காக ஒத்துக்கொள்கிறேன் என்றார்கள்.

அடுத்து எங்களிடமிருந்து யாரே னும் உங்களிடம் வந்தால் அவர் உங்கள் மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் எங்களிடம் திருப்பி அனுப்பி விட வேண்டும் உங்களிடமிருந்து எங்கள் ஊருக்கு யாரும் வந்தால் திரும்ப அனுப்ப மாட்டோம் என்றார்கள். அதற்கும் நபியவர்கள் ஒத்துக் கொண்டார்கள்.

இந்த ஆண்டு திரும்பிச் சென்று விட்டு அடுத்த ஆண்டு உம்ராவுக்காக வாருங்கள் என்றார்கள். அதையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஒப்பந்த விதிகளையும், அது எழுதப்பட்ட விதத்தையும் பார்த்த நபியின் தோழர்கள் கோபத்தின் எல்லைக்கே சென்று விட்டார்கள். இத்தனை அவமானகரமான நிபந் தனைகளை நாம் ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும்? நம்மிடத்திலே சத்தியம் இருக்கிறது. எதிரிகளைச் சாய்க்கத் துடிக்கும் தோள்களும் இருக்கின்றன. பிறகு ஏன் இந்தப் பின் வாங்கல்? அல்லாஹ்வின் ஆலயத்தை தரிசிப்போம் என அழைத்து வந்து விட்டு இப்போது பாதியிலே திரும்பச் சொன்னால் எப்படி என ஆளாளுக்கு ஆவேசப்பட்டார்கள்.

ஒப்பந்தம் எழுதி முடிக்கப்பட்ட பின் தற்போது நாம் மக்காவிற்குள் செல்ல முடியாது. ஆகையால், உம்ராவுக்காகக் கொண்டுவந்த பிராணிகளை இங்கேயே அறுத்து பலி கொடுத்துவிட்டு ஊருக்குப் புறப்படுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். கோபத்தில் இருந்த நபித்தோழர்கள் தமது வாழ்வில் முதல் முறையாக மிகப்பெரும் மௌனத்தின் மூலம் நபிகளாரின் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்தார்கள். இது வரலாறு.(124)

எதிரிப் படையை தூசி தட்டுவதைப் போல தட்டிச் செல்கிற அளவுக்கு பிரமாண்டமான படை பலத்தோடு சென்றிருந்தபோதும், உடனிருந்த தோழர்கள் அனைவரும் போர் செய்வோம் என்று கோரியபோதும், எதிரிகளும் போர் நடத்தத் தயாராக இருந்த போதும், ஆட்சேபகரமான பல்வேறு நிபந்தனைகள் முன்வைக்கப் பட்ட போதும்,

124. (அறிவிப்பவர் : மிஸ்வர் பின் மர்ஹமா, நூல் : புகாரி 2529)

அனைத்தையும் ஏற்றுக் கொண்டு அடுத்த ஆண்டு வருவோம் என திரும்பியதற்கு என்ன காரணம்?

முடிந்த வரை சமாதானம், முடியாத கட்டத்தில் மட்டுமே போர் இது தான் இஸ்லாத்தின் நிலை. ஹுதைபிய்யா உடன்படிக்கையின் மூலம் நபியவர்கள் கற்றுத்தரும் பாடமும் படிப்பினையும் இதுதான்.

இதனைத் திருமறைக் குர்ஆன் இரத்தினச் சுருக்கமாக இப்படிக் கூறுகிறது. **அவர்கள் போர் நெருப்பை மூட்டும் போதெல்லாம் அல்லாஹ் அதை அணைத்து விடுகிறான். அவர்கள் பூமியில் குழப்பம் செய்கின்றனர். குழப்பவாதிகளை அல்லாஹ் விரும்ப மாட்டான்.**[125]

## போரில் புதுநெறி

போரில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைப் பற்றி குர்ஆன் கூறும் கட்டளைகளைத் தொகுத்துப் பார்த்தால் மனித உணர்வுகள் சாகடிக் கப்படும் போர்க்களத்தில்கூட எப்படிப்பட்ட மனித நேயத்தை இஸ்லாம் வலியுறுத்துகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

## களத்திற்கு முன்

**“போர் தொடுக்கப்பட்டோர் அநீதி இழைக்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்தால் அவர்களுக்கு (எதிர்த்துப் போரிட) அனுமதியளிக்கப்பட்டுள்ளது”.**[126]

**“உங்களிடம்போருக்கு வருவோருடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போர் செய்யுங்கள். வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறியோரை அல்லாஹ் நேசிக்க மாட்டான் (களத்தில்) சந்திக்கும்போது அவர்களைக் கொல்லுங்கள். அவர்கள் உங்களை வெளியேற்றியவாறு நீங்களும் அவர்களை வெளியேற்றுங்கள். கலகம் கொலையை விடக் கொடியது”.**[127]

**“குழப்பம் நீங்கி அதிகாரம் அல்லாஹ்வுக்குரியதாக ஆகும் வரை அவர்களுடன் போரிடுங்கள். அவர்கள் விலகிக் கொண்டால் அநீதி இழைத்தோர் மீதே தவிர (மற்றவர்கள் மீது) எந்த வரம்பு மீறலும் கூடாது”.**[128]

**“எங்கள் இறைவா! அநீதி இழைத்தோர் உள்ள ஊரிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக! உன்னிடமிருந்து பொறுப்பாளரை எங்களுக்கு ஏற்படுத்துவாயாக! உன்னிடமிருந்து உதவியாளரையும் எங்களுக்கு ஏற்படுத்துவாயாக! என்று கூறிக் கொண்டிருக்கிற**

125. (அல்குர்ஆன் 5 : 64)
126. (அல்குர்ஆன் 22 : 39)
127. (அல்குர்ஆன் 2:190,191)
128. (அல்குர் ஆன் 2 : 193)

ஆண்களில் பலவீனமானவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக அல்லாஹ்வின் பாதையில் போரிடாமல் இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது?"(129)

"தமது உடன்படிக்கைகளை முறித்து, இத்தூதரை வெளியேற்றவும் திட்டமிட்டார்களே அக்கூட்டத்தினர் தாங்களாக உங்களுடன் (போரைத்) துவக்கியுள்ள நிலையில் அவர்களுடன் போர் செய்ய வேண்டாமா? அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? நீங்கள் நம்பினால் அஞ்சுவதற்கு அல்லாஹ்வே அதிகத் தகுதியுள்ளவன்". (130)

"அவர்கள் சமாதானத்தை நோக்கிச் சாய்ந்தால் நீரும் அதை நோக்கிச் சாய்வீராக! அல்லாஹ்வையே சார்ந்திருப்பீராக.அவனே செவியுறுபவன் அறிந்தவன்".(131)

"இணை கற்பிப்போரில் யாரும் உம்மிடம் அடைக்கலம் கேட்டால், அல்லாஹ்வின் வார்த்தைகளைச் செவியுறுவதற்காக அவருக்கு அடைக்கலம் அளிப்பீராக! பின்னர் அவரை பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பீராக!"(132)

"உங்களால் இயன்ற அளவு பலத்தையும், போர்க் குதிரைகளையும் அவர்களுக்கு எதிராகத் தயாரித்துக் கொள்ளுங்கள்! அதன் மூலம் அல்லாஹ்வின் எதிரிகளையும், உங்களின் எதிரிகளையும் அவர்கள் அல்லாத மற்றவர்களையும் நீங்கள் அச்சமடையச் செய்யலாம். அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள்".(133)

"வேதம் கொடுக்கப்பட்டோரில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது அல்லாஹ்வும் அவனது தூதரும் விலக்கியவற்றை விலக்கிக் கொள்ளாது, உண்மையான மார்க்கத்தைக் கடைப்பிடிக்காதோர் சிறுமைப்பட்டு ஜிஸ்யா வரியைத் தம் கையால் கொடுக்கும்வரை அவர்களுடன் போர் புரியுங்கள்".(134)

"(ஏகனை) மறுப்போரை நீங்கள் (களத்தில்) சந்தித்தால் பிடரியை வெட்டுங்கள்! முடிவில் அவர்களை வென்றால், தனது ஆயுதங்களைக் கீழே போடும் வரை கட்டுகளைப் பலப்படுத்துங்கள்! அதன் பிறகு ஈட்டுத் தொகை பெற்றுக் கொள்ளலாம்! அல்லது பெருந்தன்மையாக விட்டு விடலாம். இதுவே (இறைக் கட்டளை)". (135)

129. (அல்குர் ஆன் 4 : 75)
130. (அல்குர்ஆன் 9 : 13)
131. (அல்குர்ஆன் 8 : 61)
132. (அல்குர் ஆன் 9 : 6)
133. (அல்குர் ஆன் 8 : 60)
134. (அல்குர் ஆன் 9 : 29)
135. (அல்குர் ஆன் 47 : 4)

இந்த வசனங்களின் கருத்தை சுருக்கமாகத் தொகுத்துப் பார்த்தால் கீழ்காணும் செய்திகளை அதிலிருந்து நாம் பெறலாம்.

அமைதியைக் குலைப்பது கொடிய பாவம்.

அமைதியை நிலை நாட்டவே போர் புரிய வேண்டும்.

சண்டைக்கு வருவோருடன் மட்டுமே போர் செய்ய வேண்டும்.

வலியச் சென்று போர் புரியக் கூடாது.

அநீதி இழைக்கப்பட்டவனே போர் செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகப் போரிட வேண்டும்.

அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரியே.

வீடு, வாசல்களைப் பறித்துக் கொண்டால் மீட்டெடுக்கப் போரிட வேண்டும்.

சண்டையின்போது தாக்குப் பிடிக்க முடியாமல் எதிரிகள் சமாதானக் கொடி பிடித்தால் அப்போதுகூட அதை ஏற்க வேண்டும்.

எதிரி யாரேனும் அபயமும் அடைக்கலமும் கேட்டால் மறுக்கக் கூடாது.

படை பலத்தை பெருக்குவதன் மூலம் போரிடாமலே எதிரிகளை அச்சப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

எவ்வளவு நியாயமான, சகிப்புத் தன்மையோடு கூடிய சட்டங்களை இஸ்லாம் வழங்கியுள்ளது என்பதை, இதனைச் சிந்தித்து பார்ப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

## களத்தில்

இதேபோன்று போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் என நபிகளார் இட்ட கட்டளைகளைப் பார்த்தால் அவை மனித நேசத்தின் உச்சத்தைத் தொட்டுக் காட்டுகின்றன.

**போரிடுங்கள்! வரம்பு மீறாதீர்கள்! சிறுவர்களைக் கொல்லாதீர்கள். பெண்களையும், குழந்தைகளையும் கொல்லாதீர்கள்!** *(136)*

**போரில் ஒப்பந்தங்களை முறிக்காதீர்கள் போர்ச் செல்வங்களில் கையாடல் செய்யாதீர்கள் உடல் உறுப்புகளைச் சிதைக்காதீர்கள்,**

136. (அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி) புஹாரி : 3015,3014 முஸ்லிம் : 3279, 3280 திர்மிதி : 1494 அபூதாவூத் : 2294, இப்னுமாஜா : 2831 அஹ்மத் : 4509)

**குழந்தைகளைக் கொல்லாதீர்கள். எதிரிகள் எதிர்பாராத நேரங்களான இரவு மற்றும் அதிகாலைப் பொழுதில் தாக்குதல் நடத்தாதீர்கள்.** (137)

**போர்க்களத்தில்கூட நம்பிக்கை துரோகம் செய்து விடாதீர்கள். யாரையும் தீயிலிட்டு கொலை செய்யாதீர்கள்.**(138)

**தோல்விக்குப் பயந்து புறங்காட்டி ஓடிவிடாதீர்கள்.**(139)

இவையனைத்தும் நபி (ஸல்) அவர்களால் களத்தில் கடைபிடிக்க வேண்டும் என கற்றுத் தரப்பட்ட போர்ச் சட்டங்கள் ஆகும்.

## களத்திற்குப் பின்

போருக்குப் பிறகு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய இஸ்லாத்தின் வழிகாட்டுதல் இதைக்காட்டிலும் அற்புதமானது.

உலகில் யார் நடத்தும் போராக இருந்தாலும் செல்வம், பதவி, புகழ், அதிகாரம் என போருக்குப் பின்னர் என்ன கிடைக்கும் என்ற கேள்வியே போரின் போக்கைத் தீர்மானிக்கும்..

இஸ்லாமியப் போர் நெறி எனபது பின்னர் என்ன கிடைக்கும்? என்பதல்ல. முன்னர் நடந்தது என்ன? என்பதுதான் கணக்கில் கொள்ளப்படும். எதிரிகளின் கடந்த காலக் கொடுமைகளும் அநீதிகளுமே ஒரு முஸ்லிம் படையை களத்தை நோக்கிக் கொண்டு செல்லும். போர் முடிந்தபிறகு நமக்கு நாடு கிடைக்குமா? செல்வம் கிடைக்குமா? என்ற கணக்கிற்கு இங்கு வேலையே கிடையாது.

அதற்காக போருக்குப் பிறகு கிடைக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்று பொருளல்ல. அவற்றைப் பெருவதற்காக போருக்குச் செல்லக் கூடாது என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது.

போருக்குப் பின்னர் கிடைக்க வேண்டிய நன்மை என்று முஸ்லிம்கள் பெறத் துடிப்பதும் துடிக்க வேண்டியதும் ஒன்றே ஒன்றுதான். இறைவனின் திருப்தி. மறுமையில் வெற்றி என்ற ஒன்றே ஒன்றுதான்.

இதனை வலியுறுத்தும் ஏராளமான சான்றுகளை குர்ஆனிலும் நபிமொழிகளிலும் பார்க்கலாம்.

மனிதனின் வாழ்வு குறித்து மறுமையில் விசாரித்து இறைவன் தீர்ப்பளிப்பான். இது இஸ்லாமிய நம்பிக்கை. அதில் ஒரு மனிதரிடம் நடத்தப்படும் விசாரணை குறித்து நபிகள் நாயகம் கூறுகிறார்கள்.

---

137. (அறிவிப்பவர் : அனஸ்(ரலி) நூல் : புஹாரி - 2944,610,947)

138. (அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி), நூல் : புஹாரி - 3016 திர்மிதி - 1496 அபூதாவூத் - 2299 அஹ்மத் - 7723)

139. (அல்குர்ஆன் 8 : 15)

**போரில் கலந்துகொண்டு கொல்லப்பட்ட மனிதனை அழைத்து உலகில் நீ என்ன செய்தாய்? என்று இறைவன் கேட்பான். அதற்கு அவன் உனக்காகப் போரிட்டு அதிலே என் உயிரையும் அர்ப்பணித்தேன் என்று கூறுவான்.**

**இல்லை, நீ பொய் சொல்கிறாய். உயிரைக் கொடுத்தது நிஜம். எனக்காகக் என்பது பொய். உலகோர் உன்னை வீரன் என்று புகழ்வதற்காகக் கொடுத்தாய். நீ விரும்பியதைப் போலவே அவர்கள் உன்னைப் புகழ்ந்து விட்டனர். ஆகையால் உனக்கு இங்கே எந்த நன்மையும் இல்லை, செல் நரகத்திற்கு என்று இறைவன் தீர்ப்பளிப்பான்.**[140]

போரை வலியுறுத்தும் வசனங்கள் அனைத்திலும் வெறுமனே போர் செய்யுங்கள் என்று கூறாமல் அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரியுங்கள் என்றே கூறப்பட்டுள்ளது. போரின் முடிவு வெற்றியோ, தோல்வியோ போராளியின் இலக்கு இறை திருப்தியாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதை அதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

**தமது இல்லங்களிலிருந்து பெருமைக்காகவும், மக்களுக்குக் காட்டவும் புறப்பட்டோரைப் போன்றும், அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுத்தவர்களைப் போன்றும் ஆகிவிடாதீர்கள், அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் முழுமையாக அறிகிறான்** என்கிறது திருமறைக் குர்ஆன்.[141]

பெருமைக்கான புறப்பாடு அல்லாஹ்வின் பாதையல்ல என்பதை அழுத்தமாகச் சொல்கிறது இந்த வசனம்.

உலக ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டு இஸ்லாமியப் படைப் புறப்பட முடியாது. அப்படிப் புறப்பட்டால் அது இஸ்லாமியப் படையாக இருக்க முடியாது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அதனால்தான் உலக வரலாற்றில் வெற்றிக் களிப்பில் நிகழ்ந்த எந்தக் கொடுமைகளும் இஸ்லாமியப் படையினர் வெற்றி பெற்ற எந்த சந்தர்ப்பத்திலும் நடைபெறவில்லை.

## மக்கா வெற்றி

மக்கா வெற்றி என்பது நபிக்கும் நபித் தோழர்களுக்கும் நினைத்து மறக்கிற சாதாரண வெற்றியல்ல. சொந்த ஊரில் வாழ விடாமல் துரத்தி அடித்த கொடியவர்கள்மீது பெற்ற வெற்றி.

அகதிகளாய் மதினாவிற்கு ஓடிச் சென்ற பிறகும் பத்ர், உஹது என துரத்தி வந்து போர் தொடுத்த போக்கிரிகளின் மீதான வெற்றி.

---

140. (அறிவிப்பவர் : அபுஹுரைரா(ரலி) முஸ்லிம் - 3527 திர்மிதி - 2304 நஸாயீ - 3806 அஹமது - 7928)

141. (அல்குர்ஆன் 8 : 47)

இஸ்லாத்தை ஏற்றதற்காக கவச உடையணிந்து பாலை மணலில் சுட்டுப் பொசுக்கிய வெறியர்கள்மீது பெற்ற வெற்றி.

ஒரே இறைவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட முதல் ஆலயத்தை சிலை வணக்கக் கூடாரமாக மாற்றி விட்ட பாவிகள் மீது கிடைத்திருக்கும் வெற்றி.

கஃபாவில் தொழச் சென்ற நபியின் கழுத்தில் ஒட்டகத்தின் மலக்குடலை போட்டு ஏளனம் செய்த இழிந்தவர்கள் வாழ்ந்த நிலத்தின் மீதான வெற்றி.

கர்வமும், வெற்றியும் தலையைக் கனக்க வைக்கின்ற அளவுக்கு கிடைத்திருக்கும் இந்த மகத்தான வெற்றி விழாவில் நபிகளார் வெளியிட்ட ஒவ்வொரு அறிவிப்பும், எடுக்கப்பட்ட நடவடிக்கையும், சரித்திரங்கள் சந்தித்திராத அதிசயங்கள்.

கதவுகளைத் தாழிட்டுக் கொண்டவர் தாக்கப்பட மாட்டார் என்றார்கள். எதிரிகளின் படைத் தளபதியாகக் கருதப்பட்ட அபூசுஃப் யானின் வீட்டிற்குள் அடைக்கலம் தேடியவர் பாதுகாப்பைப் பெறுவார் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.[142]

குற்றவாளிகள் பலரும் ஒருவர் பின் ஒருவராக நபிக்கு முன்னால் கொண்டு வரப்பட்டனர். நபிகளாரின் தோழரும் பெரிய தந்தையுமான ஹம்ஸாவைக் கொன்ற வஹ்ஷீ இப்னு ஹர்ப் அதற்குக் காரணமான ஹிந்த் பிந்த் உத்பா, கொடிய விரோதி அபூஜஹ்லின் மகன் இக்ரிமா, கஅப் பின் ஜுஹைர், ஹுபார் இப்னு அஸ்வத், உஸைத் இப்னு அயாஸ் என மனம் திருந்திய அனைவருக்கும் மன்னிப்பை பரிசளித்தார்கள்.

மக்கா வெற்றியின் போது நபிகளார் நடந்து கொண்ட விதமே எதிரிகளில் பலருக்கும் மனமாற்றத்தைக் கொடுத்தது. மனமுவந்து இஸ்லாத்தை ஏற்பதற்குக் காரணமாக அமைந்தது.

தோல்வியடைந்த மன்னர்களைத் தூக்கிலிடுதல்,எதிரி நாட்டு விளை நிலங்களைத் தீயிட்டுக் கொளுத்துதல், பெண்களைக் கவர்தல், பொருட்களைச் சூறையாடுதல், அவமானம் அசிங்கம் என எந்தவகை யிலாவது தமது கோப தாபங்களை வெளிப்படுத்துதல், மாற்று மதத்தவராக இருந்தால் அவர்களின் வழிபாட்டுத் தலத்தைக் கூட விட்டு வைக்காமல் தகர்த்தெறிதல் இவைகளெல்லாம் நாகரீகம், போர்ச்சட்டம், மனித நேயம் என்று பேசப்படுகிற இன்றுவரைத் தொடர்கிறது. இவையெல்லாம் கிலோ என்ன விலை என்று கேட்கப்பட்ட காலத்தில் நபிகளார் காட்டிய வழிமுறைகள் இவை.

142. (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி) நூல் : அபூதாவூது - 2626, 2627, 144.)

இதற்குப் பிறகும் கூட இஸ்லாத்தை ஒருவர் விமர்சிப்பாரானால், இதற்கு நிகராக, மனிதகுலத்திற்கு நன்மையைச் சொல்லும் ஒரு கொள்கையை, மதத்தை, வரலாற்றை ஏன் ஒரேயொரு ஆதாரத்தைக் காட்டி விட்டு அதன்பிறகு விமர்சிக்கட்டும்.

# 10

# கருணை நாயனின் காருண்ய மார்க்கம்

இஸ்லாம் கூறுகிற அறிவுரைகள் முதல் கட்டளைகள் வரை அனைத்துச் செய்திகளுமே மனித நேயத்தையும் மனித குல நன்மையையுமே அடிப்படையாகக் கொண்டவை. மனிதர்களுக்குத் தீங்களிக்கிற எந்தவொன்றையும் இஸ்லாத்தில் பார்க்க முடியாது.

## நிகரற்ற அன்புடையோன்

இஸ்லாமிய மார்க்கம் எல்லாம் வல்ல இறைவன் வழங்கிய மார்க்கம். அந்த இறைவன் எப்படிப்பட்டவன் என்பதைத் தெரிந்து கொண்டால் அதிலிருந்தே அவன் வழங்கிய மார்க்கத்தையும் தெரிந்து கொள்ள லாம்.

மனிதர்கள் தாம் செய்யும் எல்லா காரியத்தையும் இறை நாமத்தோடு துவக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளை. அதற்காக கற்றுத் தரப்பட்ட வாக்கியமே இறைவனின் இனிய பண்பை உலகிற்கு எடுத்துச் சொல்லி விடும்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் துவங்குகிறேன். இதுவே அந்த வாக்கியம். இறைவன் அருளும் அன்பும் நிறைந்தவன். கனிவும் கருணையும் கொண்டவன். இப்படித்தான் இஸ்லாம் இறைவனை அறிமுகப்படுத்துகிறது.

அகில உலகிற்கும் விதிகளை உண்டாக்கும் இறைவனுக்கு கருணையு டையவனாகத் திகழ வேண்டுமென்று தனக்குத்தானே ஒரு சட்டமியற்றிக் கொண்டதாகக் கூறுகிறான்.(143)

இந்த விதியை அவன் கடைப் பிடிக்கிறான் என்பதை அவனால் வழங்கப்பட்ட சட்டங்கள் அனைத் திலும் பார்க்க முடியும்.

நம்முடைய பெயரை யாரேனும் தவறாகப் பயன்படுத்தி விட்டால் நமக்கு கோபம் வரும். இறைவனின் பெயரில் சத்தியம் செய்யும் மனிதன் தவறுதலாக கவனமற்று செய்து விட்டால் அதற்காக அல்லாஹ் அவரைக் குற்றம் பிடிக்க மாட்டேன் என்கிறான்.(144)

பகல்பொழுது முழுவதும் பசியோடும் பட்டினியோடும் இல்லறத்தைத் தவிர்த்தும் மேற்கொள்ளப்படும் வழிபாட்டிற்குப் பெயர்

143. (அல்குர்ஆன் - 6 : 54)
144. (அல்குர்ஆன் - 5 : 89))

நோன்பு. நோன்பிருக்கும் ஒருவர் மறதியாக எதையும் சாப்பிட்டுவிட்டால் அதற்காக அவர் அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில் அல்லாஹ் அவரைத் தண்டிக்க மாட்டேன் என்கிறான்.[145]

நோன்பை முறித்துவிட்டதாக எண்ணி அவர் தன்னை நொந்து கொள்ளவும் தேவையில்லை. ஏனெனில் அவருக்கு மறதியைக் கொடுத்து உணவளித்தவன் இறைவன். எனவே அவர் தனது நோன்பைத் தொடரட்டும். வயிறு முட்ட சாப்பிட்டிருந் தாலும் இவருக்கு நோன்பின் நன்மையை இறைவன் குறைக்க மாட்டான் என்கிறார்கள் நபிகள் நாயகம் அவர்கள்.

இறைவனுக்குரிய வழிபாட்டில் தவறிழைத்துவிட்ட மனிதன் அந்த பாவத்திலிருந்து விடுபட சில பரிகாரங்களைச் செய்ய வேண்டும். ஒரு வணக்கத்திற்கு பரிகாரம் இன்னொரு வணக்கம் என்று சொன்னால் நம் உள்ளம் அதை ஒத்துக் கொள்கிறது. ஆனால் இறைவனோ ஏழைக்கு உணவளியுங்கள், அவர்களுக்கு ஆடை கொடுங்கள், அடிமையை விடுதலை செய்யுங்கள் என்று மனித நேயச் செயல்களைசக் கட்டளை யிடுகிறான்.[146]

இறைவனின் கருணைக்கு இதுபோல எண்ணற்ற பல சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இறைவன் எப்படி கருணை வடிவாக இருக்கிறானோ, அதைப் போலவே அவன் தந்த மார்க்கமும் அமைந்திருக்கிறது.

## சிரமமற்ற சீறிய நெறி

மார்க்கத்தைக் கற்றுத் தர வந்த மாநபியின் செயல் திட்டத்தைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

அவர்களுக்கு நன்மையைப் போதிப்பார்; தீமையை விட்டும் தடுப்பார்; தூயதை அனுமதித்து, தீயதை விட்டும் விலக்குவார்; அவர்களின் சுமையையும் அவர்கள் மீதான விலங்குகளையும் அவர்களை விட்டும் அகற்றுவார் என்கிறது.[147]

அதனால்தான் இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டின் பெயரால் கூட மனிதன் தன்னை வருத்திக் கொள்ளக் கூடாது என்கிறது இஸ்லாம்.

பசி வயிற்றைக் கிள்ளும் போது பாங்கு சொல்லப்பட்டால், உண்பதற்கே முன்னுரிமை. தூக்கத்தில் தள்ளாடி விழும் நிலை வந்தால்,

145. (அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி) முஸ்லிம் - 1952 திர்மிதி - 654 அபூதாவூது - 2046 இப்னுமாஜா - 1663 அஹ்மது - 8773)

146. (அல்குர்ஆன் - 5 : 89)

147. (அல்குர்ஆன் 7 : 157)

தொழுகையைவிட தூக்கத்திற்கே முதலிடம் என்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.[148]

தன்னை வருத்தி இறைவனுக்கு வழிபாடு செய்ய முயன்ற பலரையும் தடுத்து நிறுத்தினார்கள். நடக்க முடியாத பெரியவர் ஒருவர், நடந்து சென்று ஹஜ் செய்ய புறப்பட்டார்.[149] வெயிலில் நின்று இறைவனுக்கு வேண்டுதல் செய்தார் ஒருவர்.[150] இதனால் உங்கள் உடலை வருத்திக் கொள்வதைத் தவிர யாருக்கு என்ன நன்மை என்று எடுத்துச் சொல்லி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை பண்படுத்தினார்கள்.

இப்படி இஸ்லாம் கற்றுத் தருகிற வாழ்வுமுதல் வழிபாடுவரை அனைத்துச் செய்திகளும் மனிதர்களின் இயல்போடு இணைந்தது. மனிதன் சிரமப்படக் கூடாது என்ற கரிசனத்தையும், எளிமையானது என்ற இலக்கணத்தையும் உள்ளடக்கியது. இஸ்லாத்தின் எந்தக் கட்டளையை எடுத்து ஆய்வு செய்தாலும், இந்த உண்மையைக் கண்டு கொள்ளலாம்.

## உரிமை மீறலும் உயர்ந்தோனின் மார்க்கமும்

படைத்த இறைவனே தன் படைப்பாகிய மனிதன்மீது இத்தனைப் பரிவையும் பாசத்தையும் காட்டும்போது படைக்கப்பட்ட மனிதர்கள் ஒருவர் இன்னொருவர் மீது அத்துமீறுவதையும் அவமரியாதை செய்வதையும் உடலுக்கும் உயிருக்கும் கேடு செய்வதையும் இறைவன் எப்படி ஏற்றுக் கொள்வான்?

ஒருநாளும் திட்டியறியாத தன் மகனை பக்கத்து வீட்டுக்காரன் தீர்த்துக் கட்ட திட்டமிட்டால் எந்தத் தந்தைதான் ஏற்றுக் கொள்வான்? என் மகனை நான் ஏசியதுகூட இல்லை. எனக்கில்லாத உரிமையை உனக்குத் தந்தது யார் என்று கொந்தளிக்கமாட்டாரா?

ஒரு தந்தைக்கு மகன் மீதிருக்கும் உரிமையையும் பாசத்தையும்விட நம்மைப் படைத்த இறைவனுக்கு நம் மீதான உரிமையும் கருணையும் அதிகமல்லவா? இறைவன் தன்னிடம் உள்ள இரக்கத்தை நூறு பங்குகளாக்கி அதில் ஒன்றே ஒன்றைத்தான் உலகிற்கு வழங்கியுள்ளான். ஒட்டுமொத்த உலகிலும் காணப்படும் அன்பின் வெளிப்பாடுகள் அனைத்தும், அந்த ஒன்றிலிருந்தே வெளிப்படுகிறது என்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.[151]

148. (அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக்(ரலி) (புஹாரி - 1150) (முஸ்லிம் - 1306) (நஸாயீ - 1625) (அபூதாவூது - 1117) (இப்னுமாஜா - 1361) (அஹ்மத் - 11548) (புஹாரி - 671,5465) (முஸ்லிம் - 867) (இப்னுமாஜா - 925))

149. ( அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக்(ரலி) (புஹாரி - 1865,6701) (முஸ்லிம் - 3100,3101,3102) (நஸாயீ - 3792, 3794) (அபூதாவூது - 2871) (திர்மிதி - 1457) (அஹ்மத் - 11597,11684))

150. (அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) (புஹாரி - 6704) (அபூதாவூது - 2870) (இப்னுமாஜா - 2127))

151. ( அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி) (புஹாரி - 6000,6469) (முஸ்லிம் - 4942, 4943,4944) (திர்மிதி - 3464) (இப்னுமாஜா - 4283) (அஹ்மது - 8063))

அப்படியானால், இதைவிட 99 மடங்குகளை அதிகம் கொண்டிருக்கும் இறைவனின் கருணை எப்படியிருக்கும்?

அதனால்தான் தன் மகன் செய்யும் பாவத்தை ஒரு தாய் மன்னிப்பதை விட அதிகமாக இறைவன் மன்னிக்கிறான். பாவம் செய்துவிட்ட என் அடியார்களே அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்து விடாதீர்கள் என்று அறை கூவலிட்டு அழைக்கிறான்.[152]

மனிதர்களின் அநீதிக்காக அல்லாஹ் அவர்களை தண்டிப்பதாக இருந்தால் பூமியில் எந்த உயிரினத்தையும் விட்டுவைக்க மாட்டான். குறிப்பிட்ட காலக் கெடு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கெடு வந்ததும் முந்தாமல் பிந்தாமல் காரியம் முடிக்கப்படும் என்கிறான்.[153]

தண்டிக்கத் தகுதியும் உரிமையும் உடைய அல்லாஹ் மனிதன்மீது கொண்ட கிருபையின் காரணமாக அதைத் தள்ளிப் போடுகிறான். ஆனால் நியாயமான சில கட்டங்களைத் தவிர மனிதன் மீது எந்த உரிமையும் இல்லாத ஒருவன் இன்னொருவனைத் தாக்குவதை எப்படி இறைவன் பொறுத்துக் கொள்வான்?

நினைத்தால் நினைத்த மாத்திரத்தில் இந்த பூமிப் பந்தையே ஈ, எறும்புகள் கூட இல்லாத சுடுகாடாக, புற்பூண்டுகள் ஏதுமற்ற பொட்டல் காடாக மாற்றி விடும் ஆற்றல் படைத்த இறைவன், தினம் தினம் நாம் செய்யும் தவறுகளைக் கண்டும் கனிவோடு இருக்கிறான் என்றால் அவனது கருணையை விளக்க இதைவிட வேறு செய்திகளே தேவை யில்லை.

இந்தக் கருணையை தனது மார்க்கத்தின் மூலம் கடுமையாக இறைவன் வலியுறுத்தவும் செய்கிறான்.

பிறருடைய உயிருக்கும் பொருளுக்கும் யார் பாதுகாப்பளிக்கிறாரோ அவரே இறை நம்பிக்கையாளர் ஆவார்.[154]

ஒரு விசுவாசி பிறரைக் கொலை செய்யும்போது இறை நம்பிக்கையாளனாக இருக்க மாட்டான்.[155]

நியாயமற்ற முறையில் யாரையும் கொலை செய்வது பெரும் பாவமாகும்.[156]

152. (அல்குர்ஆன் 39 : 53)

153. (அல்குர்ஆன் - 16 : 61)

154. (அறிவிப்பாவர் : அபுஹுரைரா(ரலி) திர்மிதி - 2551 நஸாயீ - 4909 ,அஹ்மது - 8575)

155. (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி) புஹாரி - 6809)

156. (அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக்(ரலி) புகாரி - 2653, 5977, 6871 முஸ்லிம் - 127, 128 திர்மிதி - 1128, 2944 நஸாயீ - 3945, 4784, அஹமது - 11886, 11923)

கொலைக்குப் பதிலாகவோ, பூமியில் செய்யும் குழப்பத்திற்கு பதிலாகவோ இல்லாமல் ஒருவர் இன்னொருவரைக் கொலை செய்தால், அவர் எல்லா மனிதர்களையும் கொன்றவரைப் போலாவார்.[157]

நபிகளாரின் காலத்தில் யாரேனும் இஸ்லாத்தை ஏற்பதாக இருந்தால், கீழ்க்காணும் உறுதிமொழியை நபியின் முன்னால் மொழிய வேண்டும். அப்போதுதான் அவர் இஸ்லாத்திற்குள் நுழைய முடியும். அச்சொற்கள் அனைத்துமே மகத்தான மனிதநேயச் செய்திகளாகவே அமைந்திருக்கின்றன.

இறைவனுக்கு யாரையும் இணையாக்க மாட்டோம், திருட மாட்டோம், விபச்சாரம் செய்ய மாட்டோம், குழந்தைகளைக் கொல்ல மாட்டோம், எவர்மீதும் அவதூறு சொல்ல மாட்டோம், நல்லறங்கள் எதிலும் உங்களுக்கு மாறு செய்ய மாட்டோம், அல்லாஹ் கண்ணியப்படுத்தியுள்ள எந்த உயிரையும் கொலை செய்ய மாட்டோம்.[158]

பிற மனிதர்களுக்கு கேடு செய்தவன் தங்கத்திற்கும் வெள்ளிக்கும் மதிப்பற்ற மறுமை நாளில் மிகப்பெரிய இழப்பைச் சந்திப்பான்; என்கிறார்கள் நபிகள் நாயகம் அவர்கள். ஒரு மனிதன் தனக்காக செய்து கொண்ட தொழுகை, நோன்பு, தான தர்மம் போன்ற அனைத்து நல்லறங்களையும் அவனிடமிருந்து பிடுங்கி அவனால் பாதிக்கப்பட்டவருக்கு இறைவன் கொடுத்து விடுவான்.

ஒருவேளை இவனது நன்மைகள் பிறருக்குக் கணக்குத் தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லையெனில் பாதிக்கப்பட்டவனின் பாவங்கள் இவன் தலையில் சுமத்தப்படும். முதலில் தொழுகை நோன்பு என்ற நல்லறங்களோடு சுவனத்தை நோக்கி நடந்து சென்றவன், மனித உரிமைகளுக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட பின முகம் குப்புற நரகில் வீசி எறியப்படுவான்.[159]

உலகில் பிறரைத் திட்டியது, அடித்தது, அவதூறு சொன்னது, பிறர் பொருளை அபகரித்தது, உயிரைப் பறித்தது என அனைத்துவிதமான வரம்பு மீறலுக்கும் அங்கே இப்படித் தான் கணக்குத் தீர்க்கப்படும் என்று கூறிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாழ்ந்து கெட்டவன் திவாலாகிப் போனவன் என்று கூறுவதாக இருந்தால் உண்மையில் இவர்தான் திவாலாகிப் போனவர் என்கிறார்கள்.

157. (அல்குர்ஆன் - 5:32)

158. (அறிவிப்பவர் : உப்பாதா இப்னு ஸாமித்(ரலி) புகாரி - 6873, 18, 3892, 3893, 6801, 7213 முஸ்லிம் : 3223, 3224, 3225 நஸாயீ : 4091, 4092, 4107)

159. (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) முஸ்லிம் : 4678, திர்மிதி - 2342 அஹ்மது : 7686, 8062, 8487)

மனிதர்களின் பார்வையில் தவறாகவே கருதப் படாத ஒரு தவறு புறம். ஒரு மனிதன் இல்லாத நேரத்தில் அவனது குறைகளைச் சொல்லி பிறர் மானத்தையும் மரியாதையையும் விலை பேசி விற்பனை செய்யாத மனிதர்கள் மனித குலத்திலே மிகவும் குறைவு. கேட்டால், நான் என்ன இல்லாததையா சொல்லி விட்டேன். என்று ஒற்றை வரியில் அதற்கு நியாயம் கற்பிப்பார்கள்.

மக்களால் பாவமற்றதாகக் கருதப் படும் இந்த பாவத்தைச் செய்தவர்கள் மறுமையில் செம்பாலான நகங்களைக் கொண்டு தமது முகத்தைத் தாமே கீறிக் கிழித்துக் கொள்ளும் தண்டனை வழங்கப்படுவார்கள் என்று கூறுகிறார்கள் நபி(ஸல்) அவர்கள். [160]

அற்பத்திலும் அற்பமாகக் கருதப் படும் புறம் பேசுவதின் நிலையே இதுவென்றால் மனித உயிர்களைக் கொன்று குவிக்கும் பாவமெல்லாம் எப்படிப்பட்டவை என்பதை சொல் லவே தேவையில்லை.

மனிதர்கள் உண்டு புசித்து உயிர் வாழ்வதற்காக ஆடு, மாடு, கோழி போன்ற ஏராளமான உயிரினங்களை இறைவன் படைத்துள்ளான். அவற்றை அறுக்கும் வேளையில் கூட ஜீவகாருண்யத்தைப் பேணச் சொல்கிறது இஸ்லாம்.

கூர்மையற்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி அறுத்தால், பிராணிகள் பெரும் அவஸ்தையை அனுபவிக்கும் என்பதால், கூர்மையான கத்தியை பயன்படுத்தச் சொல்கிறார்கள்.[161]

தலையில் அடித்தோ, வயிற்றில் குத்தியோ, மேலிருந்து தள்ளி விட்டோ கொல்லக் கூடாது. முறையாக கழுத்தில் அறுத்தே கொல்ல வேண்டும். இதன் மூலம், மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு சொல்லும் நரம்புகள் துண்டிக்கப்பட்டு மூளை செயலிழந்து விடும். மூளை மயங்கிய பின் உடலில் அதன்பிறகு ஏற்படும் எந்த வலியையும் அவற்றால் உணர்ந்து கொள்ள முடியாது. நவீன அறிவியலில் பல்வேறு சோதனைகளின் மூலம் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு மிருகங்களைக்கூட கருணையோடு நடத்த வேண்டும் என்று கட்டளையிடுகிற மார்க்கம் நியாயமற்ற முறையில் மனிதர்களின் கழுத்தை அறுப்பதற்கு அனுமதி வழங்குமா? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

160. (அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக்(ரலி) நூல் : அபூதாவூத் 4235).

161. (அறிவிப்பவர் : ஷத்தாத் இப்னு அவ்ஸ். முஸ்லிம் : 3615, திர்மிதி : 1329 நஸாயீ : 4329, அபூதாவூத் 2432 இப்னு மாஜா : 3161 அஹமது : 16490)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அரிய உரை ஒன்றை நிகழ்த்தினார்கள். உலகின் முதல் பள்ளிவாசல் கட்டப்பட்ட இறைவனால் அபய பூமி என்று பாதுகாப்பும், கண்ணியமும் வழங்கப்பட்ட மக்கா நகரில் வைத்து அந்த உரை நிகழ்த்தப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட போர்கள் மூலமாகக் கூட மனித உயிர்களை கொல்லக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட துல்ஹஜ் மாதத்தில் உலக முஸ்லிம்கள் எல்லாம் கொண்டாடி மகிழ்கிற ஹஜ்ஜுப் பண்டிகை நாளில் அந்த உரை ஆற்றப்பட்டது.

வரலாற்றில் நபிகள் நாயகத்தின் இறுதிப் பேருரை என்று அழைக்கப்படும் அவ்வுரையில் நபிகள் நாயகம் அவர்கள் கூறிய செய்திகளையே இறுதியாகக் கூறி நிறைவு செய்கிறேன்..

”உங்கள் உயிர், உங்கள் பொருள், உங்கள் மான மரியாதை அனைத்தும் புனிதமானவையாகும். அந்தப் புனிதம் இந்த ஊரின் புனிதத்தைப் போன்றது. இந்த மாதம் மற்றும் இந்த நாளின் புனிதத்தைப்போல உயர்வானது. (இவற்றின் புனிதத்தை எப்படிப் பேணுவீர்களோ அதே போல பிறருடைய உயிர் பொருள் மரியாதை அனைத்தையும் நீங்கள் பேணிக்கொள்ளுங்கள் என்றார்கள்).[162]

162. (அறிவிப்பவர் : நபீஃ இப்னுல் ஹாரிஸ்(ரலி) புகாரி : 67, 105, 1741, 4406, 5550, 7078, 7447, முஸ்லிம் : 3179, 3180 அஹ்மது : 19492, 19512, 19594)